SKY WINGS LTD
TRAVEL & TOURS
"WHERE THE SUN NEVER SETS"
Cheapest Worldwide Fares with the Best Service
We are authorised main agents for Srilankan, Jet Airways, Qatar, Kuwait, Oman...
Reservation: Mob: 07850876921
02086729111
We accept all major credit cards
Colombo £170 + Taxes
Visa Service to Srilanka, Australia, India & USA
119, Tooting High street, London, SW17 0SY

BILINGUAL FORTNIGHTLY
# ஒரு பேப்பர்
ORU PAPER
FREE
PAPER - 12 ♦ ISSUE - 260 ♦ FRIDAY 19 FEBRUARY 2016

LONDON ACCIDENT CLAIMS LIMITED
70 Windmill Road, Croydon, CR0 2XP
வாகன விபத்தா? உங்கள் தவறில்லையா?
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட
- Personal injury (Neck,Back & Shoulder Pain)
- Replacement Vehicle (Terms & Conditions Apply)
Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
NO WIN NO FEE *
* Other Insurance charges may apply
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM




## Science Tuition
Cambridge Exam board Examiner,
15 years Experience in teaching
- GCSE - Biology, Chemistry, physics
- GCE A/L - Chemistry
- KS3 - Science (Year 6 to Year 9)
- Group Classes and one to one classes
- Exam preparation
- Pass Paper classes
- Mock Exam and Evaluation

Area: East London ( East Ham, Ilford, Barking)
Kent (Tonbridgewells, Sevenoaks and Dartford)
Dr R Prabaharan BSc (Hons), PhD (UK), MRSC
Tel: 07904 653 968

R & C PROPERTY LAWYERS LLP & NOTARY PUBLIC
CONVEYANCING SERVICES:
- Residential and Commercial Conveyancing
- Last will

NOTARIAL SERVICES:
- Power of Attorneys, Notarisation of documents
- Affidavits , Oaths/ Statutory Declarations / Affirmations

Contact: SEN THAVARAJA LLB (Hons)
Solicitor & Notary Public
Consultant : RAJA THAVARAJA LLB Solicitor
Telephone: 020 8772 4920
10a Upper Tooting Road , London SW17 7PG

குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்
HSFC offers comprehensive services in the areas of assisted reproduction (including IVF, ICSI, egg donation and egg sharing), gynaecology, and male infertility.
We have a flexible schedule, including appointments in the evenings and weekends.
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
HSFC HARLEY STREET FERTILITY CLINIC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
134, Harley Street, London, W1G 7JY
Phone: +44 (0)20 7436 6838
Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk

## JOB VACANCIES
A well established reputed Company in London looking for a Business development manager with following qualifications.
- A good communication skills in English and Tamil
- Valid UK Driving licence
- Experience in sales
- Right to work in UK
- Competitive rates of pay
- A work permit can be arranged after successful training

Please email your resume to :
EMail: nalin@uas.org.uk, Mob: 07868731760

## பெட்ரோல் நிலையத்திற்கு வேலைக்கு ஆள் தேவை
தனியார் பெட்ரோல் நிலையத்திற்கு வேலைக்கு ஆட்கள் தேவை
ஈஸ்ட் லண்டன், ரொம்போர்ட் (Romford) பகுதியில் வசிப்பவர்கள் விண்ணப்பிக்கவும்.
Call Nimal - 07411722615

சென்னையிலிருந்து UK விசா
- தொழிலாளர் விசா
- தங்கியிருக்கும் விசா
- மாணவர் விசா
- சுற்றுலா விசா

இந்தியாவிலிருந்து கொண்டு UK விசா செய்து தரப்படும்
UK Immigration Specialist
Poul & Minnaa 044 4261 3698
New No. 88, Old No. 150, 1st Floor, Dharma Towers
Nelson Manickam Road, Choolaimedu, Chennai 94

நீங்கள் லண்டனில் நீண்ட காலம் இருக்கின்றீர்களா? அல்லது உங்கள் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு விட்டதா? நீண்ட காலமாக விசா முடிந்த பின்னர் இந்த நாட்டில் இருந்துள்ளீர்களா? கவலையை விடுங்கள். மனித உரிமை சட்டத்தின் கீழ் விசாவை விண்ணப்பிக்கலாம்
Contact - Immigration Law Expert - Paul John & Co. Solicitors
020 8215 1205
இந்த விளம்பரம் கொண்டு வருபவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்கப்படும்
எந்த விதமான UK விசா பிரச்சனைகளையும் உங்களுக்கு செய்து தருவோம்.
Paul John & Co. Solicitors
115a, The Grove, Stratford, E15 1EN
website - www.pauljohnandco.co.uk

## கார் உதிரிப் பாகங்கள்
Car spare and service parts
பழைய புதிய கார்களுக்கான தரமான உதிரிப் பாகங்களை உடனே அல்லது ஒரே நாளில் ஆங்கிலத்திலோ தமிழிலோ உரையாடி சரியானதை திருப்தியான விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
தொடர்புகளுக்கு : Antony
Tel: 0208 861 2203 Mob:07932649326
AUTOLINES
201 High Road, Wealdstone Harrow, HA3 5EE

ஈசியாய் வாசிக்க ஒரு பேப்பர்



AtlasShipping
MOST TRUSTED SHIPPING COMPANY
Atlas Shipping
430, High Road | Willesden | London | NW10 2XA | (Opst. Homebase)
Colombo | Kandy | Trincomalee | Jaffna | Vavuniya | Mullaithivu
உங்கள் இடத்திலிருந்து பொருட்களை எடுத்துச் சென்று
இலங்கை – இந்தியா மற்றும் உலகெங்கும் உரிய இடத்தில் சேர்க்கும் சேவை
Personel Effects Items
Special Offer Available
Call us for more details
More Details
Visit our web:
www.atlasshipping.co.uk
atlasshipping@hotmail.com
Door to Door Service to Srilanka, India and Worldwide
** World wide cargo and vehicles shipping **
கொழும்பு | கண்டி | திருகோணமலை | யாழ்ப்பாணம் | முல்லைத்தீவு | வவுனியா
Tel: 02084596633 - 02084590001 Mobile : 07949143535




New and used shop shelving
For all your shop shelving and refrigeration needs please call or visit our show room for a free quote and see how we can help
Gondola shelving
Wall shelving
Magazine shelving
Veg displays
Shopping baskets
Shelving4Shops.co.uk
01455 221512
New and refurbished refrigeration
Cold freeze specialise in the installation of new and refurbished refrigeration
Bottle fridges
Dairy cabinets
Multideck chillers
coldfreeze.co.uk
refrigeration
with lots to choose from our Hinckley site or visit our web site
Unit A1, Asfare Business Park, Hinckley Road, Wolvey, Leicestershire LE10 3JG




SRI KALIMATHA ASTROLOGY CENTRE
All Religions are welcome
Private & Confidential
100% GUARANTEE
World famous Indian Generation Astrologer PANDIT: RAJU
Master is an Expert in Palm, Face, Photo Reading & Numerology and Date of Birth & Laxmi upasana Pooja
Are you suffering from any of the following problems?
• Black Magic
• Evil Spirits
• Bad Luck
• Reunite Lovers
• Stop Divorce
• Depression
• Aura Chakras Healing
• Childless Couples
• Sexual Problem
• Lottery
• Work Problems
• Financial Problems
• Wife & Husband Pro
• Children Mistakes
• Court Cases
• Enemy
• Drinking Problems
• Health Protection
• House Protection
• All other Problems
Most Experienced & Senior Person Removing Black Magic Jadoo, Vodoo, Evil Sprit and gives Life long production
Meet one time & see your Future changing 100%
He speak Tamil, English, Hindi, Telugu, Kanada
Call for an Appointment
074 9292 6869
194B High Street North, East Ham, London, E6 2JA.

# தூவல்




## மகிந்தவின் மறுபிரவேசம்..

மகிந்தாவின் தீவிர அரசியல் பிரவேசம் ஆரம்பமாகிவிட்டது. இராணுவத்தைக் காட்டிக் கொடுப்பவர்களையும், சர்வதேச தலையீட்டையும், அனுமதிக்கும் நல்லாட்சி அரசையும் விரட்டுவோம். எனச் சூழுரைக்கும் மகிந்தாவின் அணியை பெரும்பான்மைச் சிங்களவர்கள் தட்டிக் கொடுப்பதை சிங்களப் பத்திரிகைகள் பெரிதுபடுத்துகின்றன. புதிய அரசியலமைப்பு வரைவுக்கும் என்ன கதியோ?

*- உமா மகாலிங்கம்*

## கொலைகாரரின் கூட்டணி

தமிழக சட்டசபைத் தேர்தலில் திமுகவும் காங்கிரசும் கூட்டாகப் போட்டியிடப் போகின்றன. கடந்த தேர்தல்களின் போது தமிழர்களைக் கொன்று குவித்த காங்கிரசுடன் கூட்டணி சேர மாட்டேன் என அடம்பிடித்த கருணாநிதிக்கு இப்போது காங்கிரஸ் செய்த கொலைகள் மறந்து விட்டதா? அட போங்கய்யா! தெலுங்கனான எனக்கு தமிழனாவது மண்ணாங்கட்டியாவது. மீண்டும் குடும்ப ஆட்சியை அரங்கேற்றுவதைத் தவிர வேறொன்றும் அறியேன் பராபரமே.

*- பாலமுரளி*

## நமோ நமோ சரிவராது

நல்லிணக்கம் ஏற்படுத்தப்படுவதாக இருந்தால் எந்த ஒரு நிபந்தனைகளும் இன்றி அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும் . காணாமல் போன உறவுகளின் நிலை என்ன என்ற ஒரு அதிகாரபூர்வமான அறிக்கை வெளிவரவேண்டும் அவர்கள் உயிருடன் இல்லாதவிடத்து அவர்களின் கொலைக்கான நீதி விசாரனை ஆரம்பிக்கப்படவேண்டும் குற்றவாளிகள் இனங்காணப்படவேண்டும் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் முழுமையாக விடுவிக்கப்பட்டு மக்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும் இவ்வாறன செயல்களின் மூலமே ஓரளவு நல்லிணக்கம் ஏற்படும் தேசியக்கொடி என்று கூறி சிங்கக்கொடியைப் பிடிப்பதாலோ தமிழில் தேசியகீதம் என்று ஒரு பாடலை இசசைப்பதாலோ அல்ல இதனை முதல் தமிழ் அரசியல் தலைமைகள் புரிந்து கொள்ளவேண்டும்

*- திருநாவுக்கரசு*

## மரக்கறிகளை எறியாதீர்கள்...

தமிழ் பெற்றோர்களுக்கு நான் சொல்ல முற்படுவது இங்கு மாறிய சூழல் நிலவுவது உண்மை தான். இங்குள்ளவர்கள் எல்லாவற்றையும் சரியாகச் செய்பவர்கள், ஆகையால் அவர்களைப் பின்பற்றுதல் சிறந்த முறை என்று எண்ண வேண்டாம். உணவு விடயத்தில் இங்கு எத்தனையோ கோளாறுகள் உண்டு. டென்மார்க் நாட்டினர் ஒரு காலத்தில் பால் உணவுகளையும், பன்றி இறைச்சியையும் கூடுதலாகச் சாப்பிட்டதனால் பலர் இருதயப் பாதிப்புக்கு உள்ளானார்கள். உங்களுக்கே தெரியும் திடீர் உணவு நிறுவனங்கள், மரக்கறி வகையையும் சேர்க்க வேண்டும் என்று மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மிளகாய் சாப்பிடுவது எம் உடலுடன் சேர்ந்த பண்பு. ஆகையால் அதை தயவுசெய்து தூக்கி எறியாதீர்கள்.

*- மாசிலன்*

## பிரான்ஸ் நாட்டில் சட்டம் ஒழுங்கு இல்லையா?

பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பொறுப்பாளர் திரு. பரமலிங்கம் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடாத்தப்பட்டிருக்கிறது. முன்னர் இருந்த பொறுப்பாளர் பரிதி அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார். அது தொடர்பில் யாரும் கைது செய்யப்படவில்லை. அதற்கு முன்னர் கொல்லப்பட்ட நாதன், கஜன் சம்பவம் தொடர்பாகவும் ஒருவரும் கைது செய்யப்படவில்லை. இந்த லட்சணத்தில் அங்கு பயங்கரவாத தாக்குதல் நடைபெறாமல் இருந்தால்தான் ஆச்சரியம்.

*- இளமாறன்*

## போய்ப் பாருங்கோவன்

ஐரோப்பிய நாடுகளில் ஜேர்மனி ஒரு முன்மாதிரியான நாடு என்று பார்த்தால். மைத்திரிபாலவை இராணுவ மரியாதை கொடுத்து செங்கம்பள வரவேற்பு கொடுத்திருக்கிறது. ஜீஎஸ்பி பிளஸ் சலுகைகயை திரும்பவும் சிறிலங்காவுக்கு கொடுக்க வேண்டும் என்று ஒற்றைக்காலில் நிற்கிறதாம் ஜேர்மனி. இந்தக் குசியில், ஜேர்மனிக்கு அகதியாய் வந்த தமிழர்கள் நாட்டுக்கு திரும்பவேண்டும் என்று அழைப்பு விடுத்திருக்கிறார் மைத்திரி.

*- தவராணி*

## காமுகர்கள் ஆசிரியர் வடிவில்

ஆசிரியர் ஒருவர் மேற்கொண்ட பாலியல் அத்துமீறல்களின் அவமானத்தால் மாணவி கிணற்றில் குதித்து தற்கொலைக்கு முயற்சித்தாக செய்தி வெளியாகியுள்ளது. எப்படியிருந்த எங்களின் நாடு இப்படியாகிவிட்டது. உடையவன் ஆண்டால் இப்படி நடக்குமா? அவர்களை அழித்தொழித்துப்போட்டு கவலைப்பட்டு என்ன பயன். அவர்களை பயங்கரவாதிகள் என்று சொன்ன பேய்களைத்தான் திட்டித்தீர்க்க வேண்டியிருக்கிறது.

*- கயல்விழி*

## கிழக்கு மாகாணத்திலிருந்து பிரிக்கப்பட வேண்டும்.

கிழக்கு மாகாணத்தை தமிழ் பேசும் மாகாணம் என்று கூறிக் கொண்டு, நூற்றுக்கு நூறு சிங்கள மக்கள் வாழும் கல்லோயாப் பிரதேசத்தை ஏன் அதனுடன் இணைத்து வைத்துள்ளார்கள். அது தான் சிங்கள இனவாதம். 84இல் அப்பகுதி பிரிய இருந்ததை சிங்கள இனவாதம் தடுத்து விட்டது. இப்போ தமிழ் முஸ்லிம் அரசியல்வாதிகள் அது நடைபெற அழுத்தம் கொடுக்க வேண்டும். கல்முனை என்றதொரு நூற்றுக்கு நூறு தமிழ் பேசும் மாவட்டம் தோன்ற வேண்டும்.

*- பாஸ்கரன்*

## நெத்தியிலையே ஒட்டியிருக்குது

அண்மையில் ஐ.பி.சி ரீவியிலை வந்த பிரித்தானிய தமிழர் பேரவை நபர் ஒருவர் ஸ்கொற்லண்ட்யார்ட் தமிழீழ தேசியக் கொடியை அங்கீகரித்து தங்களின்ரை இணைய தளத்திலை போட்டவையாம். பிறகு ஆரோ 700 பேர் அதுக்கு எதிராய் எழுதினதாலை எடுத்துப் போட்டினம் எண்டு மூக்காலை அழுதார். உண்மை என்னெண்டால் மொழிமாற்றம் செய்கிற ஒரு widget உருவாக்கின தனியான நிறுவனம்தான் இவ்வாறு நடந்து கொண்டதே தவிர ஸ்கொற்லண்டயார்ட்க்கும் இதற்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. இப்படியான சின்ன விசயங்களே விளங்காத இவர்கள் தான் ஐக்கிய நாடுகள் சபைக்கு போய் பலநாடுகளின் இராஜதந்திரிகளையும் சந்திக்கிறர்களாம்.

*- சியாமளா இராதாகிருஸ்ணன்*

## வைச்சான்ரா ஆப்பு

கொஞ்சம் பொறுமையாக இருங்கோ. இந்த வருசம் சம்பந்தன் ஐயா தீர்வை பெற்றுத்தருவதாக சொல்லியிருக்கிறார். அப்படி செய்யாவிட்டால் அவர் பதவியிலையிருந்து விலகிவிடுவார் என்று உயிரோடை தமிழ் வானொலியில் தாசீசியஸ் ஐயாவுக்கு கொடுத்த பேட்டியில் சிறிதரன் எம்பி சொல்லியிருக்கிறார். ஈசா இது என்ன ரெக்னிக். கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் தப்பியதுமாச்சுது, சொன்னது பிழைச்சா சம்பந்தன் ஐயா பட்ட பாடு என்று விட்டதுமாச்சு. சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கு பதவியில்லாமல் செய்த சிங்கமெல்லோ சிறிதரன்.

*- இணுவை சி. இரங்கன்*

# சுருதியை மாற்றும் சம்பந்தர் அரசுமீது நம்பிக்கை இழந்தாரா ?

- வலம்புரி ஆசிரியர் தலையங்கம் (16-02-2016)

2016ஆம் ஆண்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட்டுவிடும் என்று கூறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் ஒற்றை ஆட்சியின் கீழ் அரசு தருகின்ற தீர்வை பெற்றுக் கொள்வதற்குத் தயாராக இருந்தார். எனினும் இப்போது சம்பந்தரின் பண்ணும் பதமும் மாறத் தொடங்கியுள்ளது. தனது காலத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்பதில் உறுதியாக இருந்த சம்பந்தர் அதற்காக பல்வேறு விட்டுக்கொடுப்புகளை அரசுக்கு செய்திருந்தார்.

வரவு செலவுத்திட்டத்தை எதிர்க்கட்சித் தலை வரும் அவர் சார்ந்த கட்சியினரும் ஆதரித்ததன் மூலம் இலங்கைப் பாராளுமன்றத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி இருந்தார்.

இதற்கு மேலாக இந்த நாட்டின் சுதந்திர தின விழாவிலும் சம்பந்தர் பங்கு பற்றி தமிழ் மக்களின் நல்லெண்ணத்தை வெளிப்படுத்த முற்பட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் என்பதற்காக எல்லாவற்றையும் எதிர்க்க வேண்டும் என்றில்லை என்று கூட சம்பந்தர் கூறும் அளவுக்கு இந்த ஆட்சியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படும் என நம்பியிருந்தார். ஆனால் இப்போது கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் தனது சுருதியை மாற்றத் தலைப்பட்டுள்ளார். கிளிநொச்சியில் நடந்த கட்சி மாநாட்டில் சமஷ்டி முறையிலான தீர்வை சம்பந்தர் வலியுறுத்தியதும் சகலரும் அதிர்ந்து போயினர்.

இதனைத் தொடர்ந்து இனப்பிரச்சினைக்கான தீர்வு வலிமையானதாக இருக்கவேண்டும் என்பதில் அவர் கொண்டுள்ள நிலைப்பாடுகள் அவரின் கருத்துக்களாக வெளிப்படத் தொடங்கியுள்ளன.

திவயின என்ற சிங்களப் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் ஆங்கிலேயர்கள் சிங்களவர்களிடம் கையளித்த தமிழர்களின் நாடு மீண்டும் எங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று சம்பந்தர் கர்ச்சித்திருப்பது அதிர்ச்சியான உண்மை. ஆங்கிலேயர்கள் சிங்களவர்களிடம் கையளித்த தமிழர்களின் நாடு மீளவும் எங்களிடம் தரப்பட வேண்டும் எனில் அது தனிநாடாகக்கூட இருக்கலாம் என்பதே பொருள்.

ஆக, இணக்க அரசியல் அவசியமானது. இலங்கை அரசை எதிர்த்து நாம் எதையும் பெற்று விட முடியாது என்று தமிழ் மக்களுக்கு அறிவுரை கூறிய சம்பந்தர் இப்போது திடீர் என தனிநாடு கேட்கும் அளவில் தனது நிலைப்பாட்டை மாற்றியமை எதற்கானது?

இலங்கையின் நல்லாட்சி இனப்பிரச்சினைக் குத் தீர்வு காணமாட்டாது என்றா? அல்லது நாங்கள் கூடுதலாகக் கேட்டோம். அவர்கள் குறைவாகத் தந்தார்கள். தொடர்ந்து முயற்சிப்போம் என்று சொல்லி தமிழர்களை ஆற்றுப்படுத்துவதற்கான பூர்வாங்க முயற்சியா? அல்லது தமிழ் மக்கள் பேரவையின் உதயமா? எதுவுமே புரியாமல் உள் ளது.

இருந்தும் நல்லாட்சியில் சம்பந்தருக்கு நம்பிக்கையீனம் ஏற்படத் தொடங்கியுள்ளது என்று கூறுவதைத் தவிர இப்போதைக்கு மேலதிகமாகச் சொல்ல எதுவுமில்லை.






ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, FEBRUARY 19, 2016, ISSUE 260

## யார், யாரை ஏமாற்றுகிறார்கள்?

ஐ.நா. மனிதவுரிமைச்சபையின் ஆணையாளர் ஷெயிட் அல் ஹுசைன் அண்மையில் இலங்கைத்தீவிற்கு மேற்கொண்ட பயணம் தாயகத்திலும், புலம்பெயர்நாடுகளிலுமுள்ள தமிழ் அரசியற்தரப்புகள் மத்தியில் பலத்த எதிர்பார்ப்பினை ஏற்படுத்தியிருந்தது. அவர் தனது பயணத்தில் பல அரசியற் பிரமுகர்களைச் சந்தித்ததுடன், தனது பயணம் தொடர்பான அறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருந்தார். முன்னைய ஆணையாளர் நவநீதம்பிள்ளை அவர்களது பயணத்தின்போது மகிந்த அரசாங்கத்தினால் ஏற் படுத்தப்பட்ட முட்டுக்கட்டைகள் போலன்றி, இவரது பயணம் சுமூகமாக அமைந்திருந்ததுடன், அவரது பயணத்தை சிறிலங்கா அரசாங்கம் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டது.

கொழும்பில் வைத்து அல் ஹுசையின் வெளியிட்டுள்ள கருத்துகளும், அவரது அறிக்கையும் சிறிலங்கா அரசாங்கத்தையும் அதன் இராணுவத்தையும் காப்பாற்றுவதாக அமைந்திருப்பதை அவதானிக்க முடிகிறது. இழைக்கப்பட்ட குற்றங்கள் அமைப்பு ரீதியாக அமைந்திருந்ததாக செப்ரெம்பரில் வெளியிட்ட அறிக்கையில் குற்றஞ்சாட்டியிருந்த ஆணையாளர், தற்போது சிறிலங்கா இராணுவம் தம்மீதான கறைகளை அகற்றி வெளிநாட்டு அமைதிகாக்கும் பணிகளில் ஈடுபடவேண்டும் எனக்குறிப்பிட்டிருக்கிறார்.

ஐ.நா. மனிதவுரிமைச்சபையில், சிறிலங்காவினது உடன்பாட்டுடன் அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை முழுமையாக அமுல்படுத்துமாறு கேட்டுக்கொண்டதனைத் தவிர, சிறிலங்காவை நோக்கி வேறெந்த வேண்டுகோளையும் அவர் முன் வைக்கவில்லை. தீர்மானத்தில் பரிந்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நீதியாளர்களை இணைத்துகொள்வது போன்ற விடயத்தில்கூட அவரது கருத்து சிறிலங்காவிற்கு அழுத்தங்கொடுப்பதாக அமையவில்லை. அரசியற் கைதிகளின் விடயத்திலோ, அல்லது கைதுசெய்யப்பட்டு காணாமற்போகச் செய்யப்பட்டவர்கள் விடயத்திலோ, பாதிக்கப்பட்டவர்களின் நிலைசார்ந்து அவர் கருத்துக்கூறவில்லை.

அல் ஹுசைனின் மேற்குறித்த நடவடிக்கைகள் ஐ.நா. மனிதவுரிமைச்சபையானது சில வல்லாதிக்க நாடுகளின் செல்வாக்குக்கு உட்பட்டிருப்பதனையும், ஆட்சிமாற்றத்தினை ஏற்படுத்துவதில் பின்புலத்தில் நின்ற இச்சக்திகள் சிறிலங்காவின் தற்போதைய அரசினை காப்பாற்ற முற்படுவதனையும் வெளிக்காட்டி நிற்கிறது. பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை, அவர்களுக்கு சர்வதேச நீதி பொய்த்துவிட்டதாகவே தோன்றுகிறது.

அல் ஹுசைனின் நடவடிக்கை, ஐ.நா. மனிதவுரிமைச் சபைக்கு ஊடக அனைத்துலக நீதியை பெற்றுக் கொள்ளலாம் என நம்பிச் செயற்படும் தமிழ் அமைப்புகளைத் திருப்பதிப்படுத்துவதாக அமையவில்லை. இருப்பினும் தமது ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு, சிறிலங்கா அரசாங்கம் சர்வதேச சமூகத்தை ஏமாற்ற முற்படுவதாக குற்றஞ் சாட்டி வருகின்றனர்.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*ஊருக்குப் போன எங்கடை வாசகர் ஒருவர் எழுதியிருக்கிறார். “தம்பி **ஒரு பேப்பர்** ரை இங்கை காணேல்லை கொஞ்சம் அனுப்பிவிடுங்கோ” இதுக்குப் பதில்சொல்ல எங்களுக்குத் தெரியேல்லை. ஏனென்டால் இப்ப ஒரே ஒரு **ஒரு பேப்பர்** தான் ஊருக்கு அனுப்புகிறோம். அதுவும் யாழ் பொது நூலகத்திற்கு மட்டும்தான். அதுவும் எங்கட ஆதரவாளர் ஒருவரது நிதி உதவியினால்தான் ஏலுமாயிருக்குது. மற்றைய வாசகசாலைகளுக்கும் அனுப்பவேண்டும் எண்டதுதான் எங்கடை விருப்பம். ஆனால் அதற்கான வசதி வாய்ப்புகள் போதாததாக உள்ளது. உங்களுடைய ஊரில் உள்ள வாசகசாலைகளுக்கும் **ஒரு பேப்பர்** அனுப்ப வேணும் எண்டு நீங்கள் விரும்பினால் எங்களோடை தொடர்பு கொள்ளுங்கோ.*

***ஒரு பேப்பர்** ஆரம்பிச்ச காலத்திலை சில ஆட்களை நாங்கள் பத்தி எழுத்தாளர்களாகச் சேர்த்திருந்தம். சிலர் ஆசிரியர் குழுவிலையும் இருந்திச்சினம். அவையள் இப்ப புத்தகங்கள் எழுதி வெளியிடுகிறார்கள்.*
*தங்களை வளர்த்ததற்கு **ஒரு பேப்பர்** க்கு நன்றியும் சொல்கிறார்களாம். எல்லாம் நல்ல விசயம்தான் ஆனால் தாங்கள் **ஒரு பேப்பர்** ரிலை எழுதேக்க தங்களை ஆரோ வற்புறுத்தி எழுதச் சொன்னதாக கதைவிடுவதாக கேள்விப்படுகிறோம். நாங்கள் திரும்பத் திரும்ப சொல்கிறமாதிரி, **ஒரு பேப்பர்** ல் வெளியாகிற ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துகளுக்கு அதை எழுதுபவர்களே பொறுப்பாளிகள். அதுபோல் நாங்கள் யாரையும் எதையாவது எழுதுமாறு வற்புறுத்துவது இல்லை. சிலவேளை சின்ன ஐடியா குடுக்கிறதோடை நிறுத்துக் கொள்கிறோம்.*

*முந்தி எங்கட இளசுகளுக்கு எண்டு இரண்டு பக்கம் ஒதுக்கி வந்தோம். அந்த பக்கங்களிலை பல இளையவர்கள் தங்களது கருத்துக்களை எழுதி வந்தார்கள். பிறகு நிப்பாட்ட வேண்டியாச்சுது. பிரச்சனை என்னெண்டால் அவையள் எழுதிறதை பள்ளிக்கூடத்திலை குடுக்கிற* course work *களுக்கு நடக்கிற மாதிரி, ஒண்டில் கடைசி நேரத்திலை அரக்க பரக்க கொண்டு வந்து தருவார்கள். அல்லது ஆயிரம்* sorry *உடன் ஒரு ஈமெயில் அச்சுக்கு அனுப்பிறதுக்கு அஞ்சு நிமிசம் முன்னம் வந்து சேரும். இதாலை எங்கடை இரத்த அழுத்தம் ஏறுகிறதை தடுக்கும் முகமாக கொஞ்சக்காலத்திற்கு அந்தப் பகுதியை நிறுத்தியிட்டம். இப்ப திரும்ப அதை தொடங்கிறதைப்பற்றி யோசிக்கிறம். இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறியள் எண்டு சொல்லுங்கோ.*

*பேப்பர், புத்தகங்களின்ரை அட்டையிலை சினிமா நடிகையள், பிரபலமான ஆட்கள், பேப்பர் அடிக்கிறவையின்ரை சொந்தக்காரர், சினேகிதர்கள் போன்றோரின் படம்தான் வாறது வழக்கம். ஆனால் நாங்கள் எதேச்சையாக எடுத்த உங்களின்ரை படங்களை அட்டையில் பிரசுரித்து வருகிறோம். அவை பெரும்பாலும் மேக்கப்போட்டுக் கொண்டு எடுத்த படங்களில்லை. ஆனால் வடிவாக இருக்கின்றன என்பதுதான் எல்லோரினதும் அபிப்பிராயம்.*

*வேறை என்ன?*

*சந்திப்பம்*

***ஒரு பேப்பர்** காரன்கள் + காரிகள்*

# The Voices of Torture Survivors Must Be Heard



**By : Kolbassia Haoussou**
*( Co-founder and co-ordinator of Survivors Speak*

The UN High Commissioner for Human Rights has just finished a visit to Sri Lanka aiming to keep the justice process on track. Survivor activist Kolbassia Haoussou says the international community must listen to the perspectives of torture survivors to ensure that the justice process is strong and credible.

Torture is used to silence opponents. They are silenced by the trauma of their experiences, by a fear of the repercussions if they break that silence.

The Survivors Speak OUT (SSO) network, which I co-founded with support from Freedom from Torture, helps survivors of torture to be heard, empowering them to advocate for change and support others who have been tortured.

For the Sri Lankan survivors currently undergoing treatment at Freedom from Torture, speaking out about their torture is a difficult and potentially very dangerous act. SSO supports them to speak out and, where necessary, represents their voices all the way to policy makers.

I am not from Sri Lanka. But torture is torture, whether it took place in Sri Lanka, Syria or Bangladesh. It knows no borders. The suffering of our Sri Lankan brothers and sisters is something all survivors can relate to - we have had the same experience, have felt the same pain.

Trust is a fragile thing and something that survivor to survivor discussions are best able to provide. In the workshops facilitated by SSO, the shared experience of torture more often connects everyone in the room. It means that survivors are more open to disclosing and sharing information. They feel understood and reassured that their disclosures will not be betrayed.

> For the Sri Lankan survivors currently undergoing treatment at Freedom from Torture, speaking out about their torture is a difficult and potentially very dangerous act. SSO supports them to speak out and, where necessary, represents their voices all the way to policy makers.

The SSO workshops with Sri Lankan torture survivors posed the question of what justice in Sri Lanka should look like to them, eliciting which factors were critical to a fair and transparent, and therefore successful, justice process. Their perspectives now feature in Freedom from Torture's new report - 'Why Sri Lankan torture survivors want international participation in the justice process'.

Torture survivors can offer a unique perspective on questions like this. They can offer crucial insights and recommendations that no one else can give. From their knowledge and expertise, they can identify exactly what action is needed and how it can best be implemented.

Their testimonies have already provided the vital evidence proving that torture has continued in Sri Lanka since the end of the civil war and formed the foundations of Freedom from Torture's 'Tainted Peace' report. Now, for the justice process to be credible, it needs to be satisfactory to those who have suffered the most. The overriding message was the absolute insistence on international participation in the justice process in Sri Lanka.

I know that experiencing torture at the hands of those who are supposed to be your protectors causes you to lose all trust and faith in the authorities. Many Sri Lankan survivors in the group were unconvinced when the new Sri Lankan government officially recognised the importance of a hybrid court, as recommended by the UN.

So when President backtracked on this commitment in recent media interviews, their worst suspicions were confirmed: this was no more than a new face to the same old system.

Survivors need to feel confident that they will get fair and impartial justice. They simply do not consider this possible without the presence of international judges and lawyers. They have made it clear that the justice process will lack all validity for them unless this condition is met.

SSO has years of experience working with torture survivors. Our workshops have a clear purpose, which is to use our specialist knowledge to inform and advise policy makers. It is not only a very effective form of activism - it is a crucial part of seeking justice.

Many feel that their suffering will be in some way mitigated if the perpetrators are brought to justice and punished for their crimes. It will allow them to begin to rebuild their lives which torture shattered.

Their message is clear: a strong, credible justice process for Sri Lanka requires independent international participation.

It is up to the international community to be vigilant in ensuring that Sri Lanka fulfils the commitments it made to the UN Human Rights Council by allowing this to take place.

*Courtesy: huffingtonpost.co.uk*

# The morning after the political honeymoon: President Sirisena's future



BY : Dr. Kalana Senaratne

With days turning into weeks and weeks into months, President Maithripala Sirisena appeared to have realized that power is ultimately the primary concern of politics and political leadership. What necessarily follows from this is also the realization that, to sustain a 'good government' in trying times one has to engage in practices which are antithetical to the very idea of good governance. Ever a contradiction to the ordinary mind, this is an uncomfortable reality in politics.

But in a democracy (unlike in any other system of governance), political realities can carry unpredictable consequences. Now with the completion of the first year in power, the people are exposed to a leader and a government, confronted by daunting challenges, facing an uncertain future. Once considered a refreshing voice – and still the West's newfound darling of South Asia – President Sirisena has begun to speak and act in old and familiar ways. This isn't surprising. As a political honeymoon (between a President and the people) slowly ends, the popularity wanes and the stains become more apparent, it would be natural for a leader to wonder how to retain power while protecting himself from his political enemies.

## Lamentation

Democracies can tell us how the people have voted, what the numbers are. But they are unable to tell us accurately why leaders get defeated, why the people voted the way they did. This inability has caused the popular lamentation one encounters in political commentary about Sri Lanka today. In wondering, as political commentators often do, whether real 'change' has taken place, one may be engaging in a critical exercise; but it's also an exercise that stems from a misunderstanding of what actually happened in January, 2015.

## Rajapaksa-defeat

Mahinda Rajapaksa's key failure is often considered to have been his inability to introduce democratic reform. While this is only partially true, there were more decisive reasons for his downfall. One of the most significant was Rajapaksa's inability to respect and please the 'old guard' of the SLFP. Surrounded by his own family, Rajapaksa underestimated the anger and frustration that was generating within the SLFP's senior-camp. Inevitably, the regime cracked with Sirisena's exit; and perhaps with that, the hearts of the senior SLFPers were never at the same place again. Torn between a secret desire to support the new developments and the sheer impossibility of imagining a world without Rajapaksa in power, the senior SLFPers appeared to be screaming for a victory for Rajapaksa, while hoping that the Rajapaksa-regime would be finally defeated.

In addition, hubris had consumed him. On the one hand, in being unable to listen to his more realist-advisors, Rajapaksa proved that his methods lacked the nuance and sophistication required to act in a post-war setting; especially in addressing issues relating to accountability and power-sharing. To be sure, Rajapaksa's overarching ideological approach to these issues was not inconsistent with the wishes of a majority. The problem, however, was one of serious 'mismanagement'; and of course, a disgruntled West.

On the other hand, hubris led him to alienate his broader constituency. In particular, having unleashed forces such as the Bodu Bala Sena (BBS) into society, those very forces ran out of control effectively ending all hopes of retaining power. In all this, Rajapaksa failed to learn one of the least regarded lessons from Machiavelli: that in the long run, a ruler cannot run the risk of being hated by his people. In Sri Lanka's case, the people included the minority peoples as well. After long years in democratic politics, Rajapaksa had forgotten the humbling potential of democracy: the possibility of electoral defeat. Yet, democracies work in mysterious ways. In his swift recovery, especially since August 2015, it is Rajapaksa who is slowly reminding his opponents that electoral politics is never for the complacent.

## 'Revolution'

Tired of the mess and mismanagement of affairs, the 8th of January (2015) arrived as a moment when the people (especially a considerable section of the Sinhala constituency) decided to let off some steam. But the resulting change – inaccurately characterized as a 'revolution' – was brought about largely by two factors, hardly recognized in the commentary that glorifies President Sirisena's victory.

The first had to do with the strength and reassurance the anti-Rajapaksa camp attracted through the serious intervention of Sinhala-Buddhist nationalist forces, such as the JHU and the Pivithuru Hetak movement – helped by the timely transformation of these groups into something more national and reformist. This intervention, in turn, was effective because of a 'common candidate' who seemed more presentable to the majority (for the Tamil people, it was anyway an anti-incumbent vote). To a wider public and the world at large, change was coming. Beneath the surface, however, there was another subtle message at work: there were different and more 'progressive' ways in which the Sinhala Buddhist State can be protected. Some in the anti-Rajapaksa camp may have wanted to abandon the Sinhala-Buddhist project; but that project had never abandoned the anti-Rajapaksa camp.

The second factor was the popular slogan: 'yahapalanaya'. Apart from portraying the Rajapaksa-camp in a negative light, its key advantage was its overbroad character which was able to please various different constituent groups in society. It had something for everyone: for the Tamils, for the Sinhala-Buddhists, for the civil society groups, for some leftists, etc. With 'yahapalanaya', any one of your political fantasies had the potential of being (at least partially) realizable in the future.

Yet, the 'yahapalanaya' myth is also an enduring problem; since it created dreams of a fantastic world that cannot be realized. It proclaimed a swift end to corruption and nepotism, tough action against those who had wronged, and reconciliation between peoples. But the context proved that this was not possible, especially if the main goal of the new leadership was the prevention of the return of the Rajapaksas. In constructing the hope of an ideal world, the new establishment exposed itself to be critiqued and ridiculed in case it failed to meet the promised high standards of good governance. In short, to win an election a beautiful promise had to be constructed. But this was also risky: for frustration was bound to arrive more quickly when grand promises appeared unrealizable.

Furthermore, the present frustration with the political leadership has much to do with the image of a depoliticized leader that certain yahapalanaya-activists had come to develop in their own minds. Having emerged victorious in what was potentially a life-threatening electoral battle, the new President was now expected to introduce necessary reforms, abolish the Executive Presidency, forget about his party, and perhaps retire from politics at the earliest opportunity. (The President himself sought to suggest initially, that this was the plan).

On the contrary, the task before the new leader was one of serious power-consolidation, of avoiding the return of the Rajapaksas, of having to re-engage with his party, and seek to ensure its success at future elections. Also, the new leader had to avoid looking overly weak before the likes of Ranil Wickremasinghe and Chandrika Bandaranaike Kumaratunga. In this, the new leader had to be mindful of another irony underlying his election: the Sinhala majority was ready to welcome or tolerate a new leader, as long as he resembled something of the old. Reforming the Presidency was fine; but one had to essentially act like a Commander-in-Chief.

## Some challenges

As honeymoons end and politics becomes more normal and real, President Sirisena confronts a staggering array of political challenges which, if mismanaged, would spell disaster to his stint in power. In seeking to manage them, however, he would find himself having to displease some of his ardent supporters who had come to build fantastic hopes around him.

Of the many challenges confronting the Sirisena-Wickremasinghe government, one is the making of a new Constitution. Having started off on a 'radical' promise of facilitating a final and lasting solution to a bitter conflict, the new government appears to have realized that ultimate success of the proposed new constitution would principally depend on the retention of the provisions concerning the 'unitary state' and the prominence given to the Buddha Sasana. In doing so, considerable opposition to the new constitution would be effectively avoided, making it somewhat more convenient to construct and present to the people a constitution which, inter alia, abolishes the Presidency, while introducing a new electoral system, an enhanced fundamental rights-chapter, and a devolutionary framework which is only a modest improvement on the 13th Amendment. Never a fulfillment of the desire for federalism of the Tamil polity, the new constitution and the political leadership would only be able to promise a more equal and just society where the human rights of all will be protected.

Another key challenge concerns the re-energized ultra-Sinhala-Buddhist nationalist forces, such as the BBS (and the new Sinha-Le movement). As has happened already, President Sirisena is most likely to engage with these groups (especially the BBS). Non-engagement is not an option; because the success of non-engagement can only be guaranteed through the brutal and violent suppression of the monks. Though electorally weak, the BBS represents something more serious and potent in Lankan society, with its main face, Gnanasara thera, having a cult following (as witnessed in public), while also attracting much admiration within the Sangha community.

(Continued on page 13)

ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

BBK Partnership
Croydon.................. 020 8150 9950

Meera Arnold & Co
Southgate............... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]
T.Selvaratnam [Wembley]
K.Durairajah [Greenford]
CAPT. R.C.Rajarayan [Wembley]
T.Thayalaratnam [Harrow]

இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER Ltd**
Bank: **HSBC**
A/C: **02211556**
S/C: **40-07-04**

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள்
யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:

பிரித்தானியா
அ.இரவி - மணி - அகிலன்
மாதவன்

கனடா
தயா - அரவிந்தன் - சிந்து

பொறுப்பாசிரியர்
- கோபி -

விளம்பரம்
அஜந்தா

அச்சு
தர்சினி (கனடா) - சுகன்யா

வடிவமைப்பு
மயூரன் - யுகன்

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா - சாரங்கன்

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
அஜந்தா

வழங்கல்
உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850

தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

ஆக்கங்கள் மற்றும்
அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP

மின்னஞ்சல்:
info@orupaper.com

இணையம்:
www.orupaper.com

*'Oru Paper' is a bi-lingual paper published from London by Oru Paper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# நாற்பது ஆண்டுகளின் பின்னரும் உயிர்ப்புடன் இருக்கும் மக்கள் ஆணை !



வட்டுக்கோட்டைத்தீர்மானத்தின் நாற்பதாவது வருடம் இவ்வருடம் நினைவுகூரப்படுகிறது. அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இத்தீர்மானத்தை சமகால அரசியலுடன் தொடர்புபடுத்து பல நிகழ்ச்சிகள் நடாத்தப்படவிருக்கின்றன. இவ்விடயம் தொடர்பாக நாடுகடந்த அரசாங்கம் வெளியிட்டுள்ள 'வணக்கம்' மின்சஞ்சிகையில் பிரசுரமான கட்டுரையை இங்கு மீள்பிரசுரம் செய்கிறோம்.

இலங்கைத்தீவில் இரண்டு தேசங்கள் என்பதனை உலகிற்கு முரசறைந்து தாயகம், தேசியம், தன்னாட்சியுரிமை எனும் ஈழத்தமிழ் மக்களின் அரசியல் பெருவிருப்பினை வெளிப்படுத்திய வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் நாற்பதாவது ஆண்டாக 2016 ஆண்டு அமைந்துள்ளது.

1976ம் ஆண்டு மே 14ம் நாளன்று, தந்தை செல்வா அவர்களின் தலைமையில் அனைத்து தமிழ் கட்சிகளாலும், அமைப்புக்களாலும் நிறைவேற்றப்பட்ட இத் தீர்மானமானது, தமிழ்மக்கள் தாம் பட்டறிந்த அனுபவங்களின்படி எக்காலத்திலும் சிங்கள பௌத்த பேரினவாத அரச கட்டமைப்புக்குள் வாழ்தல் சாத்தியமற்றது என்பதனைத் தெளிவாக முரசறைந்தது.

இத்தீர்மானம், பின்வரும் விடயங்களை முரசறைந்திருந்தது :

(அ) தமிழ் ஈழ அரசு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்களைக் கொண்டதாக இருக்கவேண்டுமென்பதுடன் இலங்கையின் எந்தப்பகுதியிலும் வசிக்கின்ற தமிழ் பேசுகின்ற மக்களுக்கும் தமிழ் ஈழத்தின் பிரசாவுரிமையை விரும்பித்தெரிகின்ற உலகின் எப்பகுதியிலும் வசிக்கின்ற ஈழ வம்சாவழித் தமிழர்களுக்கும் முழுமையான, சமமான பிரசாவுரிமைகளை உறுதிப்படுத்தவும் வேண்டும். தமிழ் ஈழத்தின் ஏதேனும் சமயத்தைச் சேர்ந்த அல்லது ஆட்சிப்பிரதேசத்தைச் சேர்ந்த சமூகமொன்று வேறு ஏதேனும் பிரிவினரின் மேலாதிக்கத்திற்குட்படாதிருத்தலை உறுதிப்படுத்தும் பொருட்டு தமிழ் ஈழத்தின் அரசியலமைப்பு சனநாயகப் பன்முகப்படுத்தற் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.

(ஆ) தமிழ் ஈழ அரசில் சாதி ஒழிக்கப்பட வேண்டுமென்பதுடன், பிறப்பின் அடிப்படையில் பின்பற்றப்படும் பெருங்கேடான பழக்கமான தீண்டாமை அல்லது ஏற்றத்தாழ்வு முற்றாக ஒழித்துக் கட்டப்படவும் எவ்வகையிலேனும் அதனைக் கடைப்பிடித்தல் சட்டத்தால் தண்டிக்கப்படவும் வேண்டும்.

(இ) தமிழ் ஈழம் அவ்வரசிலுள்ள மக்கள் சார்ந்திருக்கக்கூடிய எல்லாச்சமயங்களுக்கும் சமமான பாதுகாப்பும் உதவியும் வழங்குகின்ற சமயச்சார்பற்ற ஓர் அரசாக இருக்க வேண்டும்.

(ஈ) தமிழ் அரச மொழியாக இருக்க வேண்டும் எனினும் தமிழ் ஈழத்தில் சிங்களம் பேசுகின்ற சிறுபான்மைகள் அவர்களின் மொழியில் கல்வியையும் அலுவல்களையும் தொடர்வதற்கான உரிமைகள் சிங்கள அரசிலுள்ள தமிழ் பேசும் சிறுபான்மைகள் பாதுகாக்கப்படும் சரி எதிரிடையான அடிப்படையில் பாதுகாக்கப்பட வேண்டும்.

(உ) தமிழ் ஈழத்தில் மனிதனால் மனிதன் சுரண்டப்படுதல் தடை செய்யப்படும். உழைப்பின் மகத்துவம் பாதுகாக்கப்படும். சட்டத்தினால் அனுமதிக்கப்படும் எல்லைகளுக்குள் தனியார் துறையின் இருப்புக்கு அனுமதி வழங்கப்படுகின்ற அதே வேளையில், பண்டங்களின் உற்பத்தி மற்றும் விநியோகம் என்பன அரச உரிமையின் கீழ் அல்லது அரச கட்டுப்பாட்டுடன் மேற்கொள்ளப்படும். பொருளாதார அபிவிருத்தி சோசலிசத் திட்டமொன்றின் அடிப்படையில் ஏற்படுத்தப்படும். ஒரு தனிநபரின் அல்லது குடும்பத்தின் செல்வம் தொடர்பில் உச்சவரம்பு விதிக்கப்படும். இவ்வகையில் தமிழ் ஈழம் ஒரு சமதர்ம அரசாக இருக்க வேண்டும்.

தமிழ் தேசிய இனத்தின் இறைமையையும் சுதந்திரத்தையும் வென்றெடுப்பதற்கான போராட்டத்திற்கான செயல்திட்டமொன்றை மிதமிஞ்சிய தாமதமின்றி வகுத்தமைத்து அதனைத் தொடங்க வேண்டுமென தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் செயற்குழுவை இம்மாநாடு பணிக்கின்றது. மேலும் இம்மாநாடு, சுதந்திரத்திற்கான இப் புனிதப்போரில் தம்மை முழுமையாக அர்ப்பணிக்க முன்வரும்படியும் இறைமையுள்ள தமிழ் ஈழ அரசென்ற இலக்கு எட்டப்படும்வரை அஞ்சாது போரிடும் படியும் பொதுவில் தமிழ்த் தேசிய இனத்துக்கும் குறிப்பாக தமிழ் இளைஞர்களுக்கும் அறைகூவல் விடுக்கின்றது.

இவ்வாறு வட தமிழீழத்தின் வட்டுக்கோட்டையில் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த இத்தீர்மானத்தினை தேர்தல் விஞ்ஞாபனமாகக் கொண்டு 1977ம் ஆண்டு இடம்பெற்றிருந்த பொதுத் தேர்தலின் போது போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு வாக்களித்து தமிழ் மக்கள் தங்களது தெளிவான ஆணையையும் வழங்கியிருந்தனர்.

**வரலாற்று முக்கியத்துவமிக்கதொரு இவ்வாண்டில், வட்டுக்கோட்டைத் தீர்மானத்தினை மக்கள் தளத்திலும், அரசியற் தளத்திலும், கருத்தியல் தளத்திலும் அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்வது காலத்தின் கடமையாகவுள்ளது.**

பௌத்த மேலாதிக்க இனவாத அரச கட்டமைப்பினைக் கொண்டிருந்த சிறிலங்காவின் அரசமைப்பு, தனது 6வது அரசியற்சட்டத் திருத்தம் ஊடாக ஓர் இன மக்கள் தாங்கள் விரும்புகின்ற அரசியற்நிலைப்பாட்டினை சுதந்திரமாக தெரிவிப்பதற்கான அடிப்படை மனித உரிமையினை மறுத்திருந்தது.

இது, சிறிலங்காவின் பாராளுமன்ற அங்கத்துவத்தின் ஊடாக தமிழர்கள் தங்களின் அரசியற் விருப்பினை அடைமுடியாது என்ற நிலையும், ஈழத் தமிழர் தேசம் மீது சிங்கள ஆட்சியாளர்கள் அரச பயங்கரவாதத்தினை கட்டவிழ்த்த போக்கும் தமிழ் இளைஞர்களை ஆயுதமேந்த வைத்தது.

சிங்கள அரச பயங்கரவாதத்துக்கு எதிராக கரந்தடி தாக்குதல்களாக விரிந்த தமிழர்களின் ஆயுதப் போராட்டம், ஆயிரம் ஆயிரம் போராளிகளது வீரத்தினாலும், மாவீரர்களதும்,

*(தொடர்ச்சி 20ம் பக்கம்)*

## ஒரு பேப்பருக்காக கிறுக்கனின் கிறுக்கல்..

### தானாக தான் இயங்கும் உடல்.

இந்தப் பிரபஞ்சம் விஞ்ஞான விதிகளுக்கமையவே இயங்குகிறது. அந்த விதிகளுக்கு புறம்பாக வேறு எந்த சக்தியுமே இல்லை. வேண்டுமென்றால் அவ் விதிகளை சிந்தனைக்குமரிய கடவுளால் தோற்றுவிக்கப் பட்டதாக, தோற்றுவிக்கப் பட்டதென்றால் எப்போது என்ற கேள்வி வரலாம், ஆகையால் கண்காணிப்பிற்கமைய இயங்குகின்றது என்று நாங்கள் கொள்ளலாமே அன்றி அதற்குமேல் இம்மியளவு என்றாலும் கற்பனைக்கும் எட்டாத கடவுள் பற்றிப் பேசும் ஆற்றலோ அருகதையோ எம் மூளைக்கோ, சிந்தனைக்கோ கிடையாது. காலம் பற்றியே பேசும் ஆற்றல் எமக்கு இல்லை. 1300 கோடி ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட பெருவெடிப்பில் தோன்றியது பிரபஞ்சமென்கிறார்கள் அந்தக் காலம் ஒட்டுமொத்தக் கால ஓட்டத்தின் ஆயிரத்தில் ஒரு பின்னமோ அல்லது அதற்கமேல் கோடா கோடியில் ஒரு பின்னமோ என்று கேட்டால் விடை தருவார் இல்லை. அது விடையிலியாம் முடிவிலியுள் அடங்கிவிடும்.

காலத்தின் அளவு பற்றி புராணக் கதைகளில் கூறப்படுகிறது. அவை ஆதாரமற்ற புராணக் கதைகள் தான், ஆனாலும் கேட்போர் திகிலடையும் வண்ணம் அக்கதைகள் உள்ளன. எடுத்துக்காட்டிற்கு பிரமாவின் ஆயுள் பற்றிய பதிவுகளை மட்டும் பார்ப்போம். கிட்டத்தட்ட மூன்று இலட்சத்து நூற்றிப்பத்து கோடி ஆண்டுகள்தான் ஒரு பிரமாவின் ஆயுட் காலம் என்கிறார்கள். இப்பொழுதுள்ள பிரமாவுக்கு 50 ஆண்டுகள் முடிந்து அவரின் 51 வது பிறந்த நாளாகும். அவரின் ஒரு நாள் என்பது எமது 864 கோடி ஆண்டுகள். இறந்த பிரமாக்களின் மண்டை ஓடுகளை சிவன் அணிவதாகக் கேள்விப் பட்டிருந்தால் அதைவைத்து எத்தனை பிரமாக்கள் வாழ்ந்தார்கள் என்று மட்டும் கேட்காதீர்கள். நீங்களும் குழம்பி மற்றையவர்களையும் குழப்பும் வேலையாக அது அமைந்துவிடும்.

அடுத்து இறந்தவர்களின் ஆவி பற்றிய கதைகள் அடிபடுகின்றன. ஆவி என்று ஒன்று இருக்கின்றது என்பதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை. என்றாலும் தட்டிக் கழிப்பதற்கு சிரமமான கதைகளும் உள்ளன. எனது நண்பர் ஒருவர் தனது மனைவிக்கு வைத்தியசாலையில் சிகிச்சை நடக்கும் போது அவரிலிருந்து ஏதோ ஒன்று வெளியேபோவது போல் தோன்றியதாகவும், பக்கத்திலிருந்த மருத்துவத் தாதியிடம் தன்மனைவி இறந்துவிட்டதாகத் தான் கூறியவுடன் தாதி அவரையும் அழைத்துக் கொண்டு அவர் மனைவியைப் பார்க்கச் சென்ற பொழுது அவர் உண்மையிலேயே இறந்துவிட்டார் என்பது தெரிய வந்ததாகக் கூறினார்.

இன்னொரு சம்பவம். எங்கள் வீட்டுக்கு முன்பாக இருந்த பெண் ஒருவர் கொலை செய்யப் பட்டார். கொலை வழக்கு என்பதால் அவர் உடல் புதைக்கப் பட்டது. ஆவிபற்றிய எண்ணம் என் மனதில் இருக்கவில்லை. அதனால் மறுநாள் இரவு புதைத்த இடத்திற்கு பக்கமாக உள்ள பாதையால் சென்றேன். எனது சைக்கிள் தளம்பி என்னவோ எல்லாம் நடந்தது. மற்றையவர்களிடம் அதுபற்றிக் கூறியபோது அங்கு நின்ற ஆவிதான் அப்படி ஒரு உணர்வை எனக்கு ஏற்படுத்தியது என்று அடித்துக் கூறினார்கள். ஒருவராவது எனது உள்மனப் பயத்தின் காரணமாகத்தான் அந்நிலை ஏற்பட்டதென்று கூறவில்லை. அவ்வளவுக்கு ஆவி பற்றிய சிந்தனை அவர்கள் மனதில் ஊறியுள்ளது.

சொர்க்கம் நரகம், இறந்த பின் வாழ்வு என்பதெல்லாம் ஒரு புராணம் சார்ந்த ஆதாரமற்ற கதைகளாகும். நாம் வாழ்கின்றோம் எமது மூளை இயங்கும் வரைதான் நாம் உயிர் வாழுகின்றோம். எமது மூளை இயங்குவதை நிறுத்திய மறு கணமே எமது வாழ்வு முடிகின்றது. அதன்பின் எதுவுமே மிஞ்சுவதில்லை. யாரோ என்போன்ற ஒரு கிறுக்கன் உளறுகின்றான் என்று தூக்கி எறியும் கூற்று அல்ல இது. இதைக் கூறுபவர் உலகின் தலைசிறந்த விஞ்ஞானிகளில் ஒருவரான Stephen Hawking அவர்கள்.

மனம் ஆவி உணர்வு அத்தனையும் உடலும் பொருளும் சார்ந்தவையே. எமத மூளைதான் எல்லாவற்றையும் உள்ளடக்கி எங்களை உருவாக்குவதும் இயக்குவதுமான உந்து விசை. அதற்கப்பால் உயிர் ஆத்மா என்பதெல்லாம் உள்ளத்தில் ஆதாரமற்றுத் தோன்றும் தோற்றங்களே. நாம் போதை மருந்துக்களைச் சாப்பிட்டு எமது மூளையைச் சேதப்படுத்தினால், பாதிக்கப் பட்ட மூளைக்கு ஒப்ப நடக்கின்றோமேயன்றி வேறு எந்த சக்தியின் செல்வாக்கும் அங்கே செயல் பட்டு எங்களை நிதானத்துடன் செயல்பட வைப்பதில்லை. சில நோய்களால் மூளை பாதிக்கப் பட்டு சீரழிவு நிலையை அடைந்து விட்டால், எமது மூளையின் சீரழிவிற்கு ஏற்ப எம் நிலை சீரழியுமே அன்றி அந்த மூளையின் செயற்பாட்டை எந்த சக்தியும் தலையிட்டு சீராக்காது.

இந்த நிதார்த்த நிலையிலிருந்து நாம் தளம்புவோம் என்றால் எம்மை சந்தர்ப்ப சூழ்நிலைகளே பல கதைகளை நம்ப வைக்கும். நான் ஆவிகள் இல்லை என்று எழுதுகின்றேன். என்னைஒரு சுடலைக்குள் தனியே இரவில் நிற்க விட்டால் எனது இருதயம் பயத்தில் என்ன வேகத்தில் துடிக்குமோ எனக்குத் தெரியாது. என்ன செய்வது சிறு வயதில் அப்படி வளாந்து விட்டோம். இப்பொழுது நாங்கள் செய்ய வேண்டியது, இந்தப் பேய்க் கதைகளை எம் எதிர்கால சந்ததியினர்களின் உள்ளத்துள் புகவிடாது தவிர்ப்பது தான்

*- கிறுக்கன்*

# தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்ட வரைபு:

## சில அவதானங்கள்



**கோபி**
*ஒரு பேப்பர்*

தமிழ்மக்கள்பேரவையின் அரசியற் தீர்வுதொடர்பான முதல் வரைபு வெளிவந்து மூன்றுவாரங்கள் கடந்துவிட்டன. ஜனவரி முப்பதியோராம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வெளியீட்டு நிகழ்ச்சியைத் தொடர்ந்து, மட்டக்களப்பு, திருகோணமலை நகரங்களிலும் அதனை அறிமுகப்படுத்தும் நிகழ்வுகள் நடந்தேறியுள்ளன. இவ்வைபவங்களில் வழமைக்கு மாறாக அதிகளவு மக்கள் கலந்து கொண்டனர். இருப்பினும், பொதுவெளியில் இவ்வரைவு தொடர்பான கருத்துப் பரிமாற்றங்கள் எதிர்பார்த்ததைவிட குறைந்தளவிலேயே நடைபெற்றுவருவதனை அவதானிக்கமுடிகிறது. சிறிலங்கா அரசதரப்பிலிருந்தோ, வழமையாக இது போன்ற விடயங்களில் முந்திக்கொண்டு கருத்து வெளியிடும் சிங்கள 'லிபரல்' களிடமிருந்தோ எந்தக்கருத்தினையும் அறிய முடியவில்லை. எடின்பரோ பல்கலைக்கழக விரிவுரையாளரும், அண்மையில் எடின்பரோவில் கூட்டமைப்பினர் கலந்து கொண்ட 'ஸ்கொற்லாந்தின் அதிகாரப்பரவலாக்கம்' பற்றிய அறிவூட்டல் பட்டறையை ஒழுங்கு செய்தவர்களில் ஒருவருமான கலாநிதி அஸங்க வெலிக்கல ருவிற்றரில் இவ்வரைபு பற்றிய தனது கருத்துகளைப் பதிவு செய்திருந்தார். அப்பதிவுகளில், இவ்வரைபானது ஆக்கபூர்வமான விடயங்களைக் கொண்டிருப்பதாகவும், அதன் உள்ளடக்கத்தில் வேறுபடுவதற்குரிய விடயங்கள் எதுவுல்லை எனவும் குறிப்பிட்டிருந்தார். ஆனால் இவ்வரைபு குறிப்பிடும் இலக்கினை எட்டுவதற்கு 'படிப்படியான அணுகுமுறையைக்' கடைப்பிடிக்க வேண்டும் என்ற தனது கருத்தினையும் வெளியிட்டிருந்தார். இங்கு படிப்படியான அணுகுமுறை என அஸங்க குறிப்பிடுவதனை அடிக்கோடிட்டுக் கொள்ள வேண்டும். ஏனெனில், ஒரு அரைகுறைத்தீர்வு எவ்வாறு நியாயப்படுத்தப்படப் போகிறது என்பதனை இது கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது.

இவ்வரைபுபற்றி, ஐ.பி.சி. தமிழ் தொலைக்காட்சியில் புளொட் அமைப்பின் சித்தார்த்தனைச் செவ்வி கண்டபோது, தமிழ் மக்கள் பேரவையின் வரைபானது, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வரைபினை ஒத்திருப்பதாகக் கூறியிருந்தார். அண்மைக் காலத்தில் கூட்டமைப்பு அரசியற்தீர்வு தொடர்பான வரைபு எதனையும் வெளியிட்டிருக்கவில்லை. 2009ம் ஆண்டில் கனக ஈஸ்வரன், சுமந்திரன் உள்ளிட்ட கூட்டமைப்பு ஆதரவு கொழும்புத் தமிழ் சட்டத்தரணிகளினால் உருவாக்கப்பட்ட அரசியலமைப்புப் பற்றிய ஒரு ஆவணம் கசியவிடப்பட்டிருந்தது. அவ்வரைபையே சித்தார்த்தன் பேரவையின் வரைபுடன் ஒப்பிட்டிருக்கக்கூடும். அவ்வாறானால், தமிழ் மக்கள் பேரவையில் அங்கம் வகிக்கும் சித்தார்த்தன் இவ்விரண்டு வரைபிலும் உள்ள முக்கிய வேறுபாடுகளை அறிந்திருக்கவில்லையா என்ற கேள்வி எழுகிறது. ஆனால் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனங்களின் அடிப்படையில், அல்லது தமிழ் மக்கள் மத்தியில் கூட்டமைப்பின் தலைவர்கள் வெளியிடும் கருத்துகளை வைத்து, தமிழ் மக்கள் பேரவையின் அரசியல் வரைபுடன் கூட்டமைப்பின் தீர்வு யோசனைகளை ஒப்பிடமுடியும் என்பதனை மறுப்பதற்கில்லை.

லண்டனுக்கு வந்திருந்த சம்பந்தன், சித்தார்த்தனுடனான தனிப்பட்ட உரையாடலின்போது, பேரவையின் வரைபு தமக்கு ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதாகக் கூறியதாக உறுதிப்படுத்தப்படாத ஒரு தகவல் உள்ளது. அதுபோல் அண்மையில் லண்டனில் தமிழரசுக்கட்சியின் ஆதரவாளர்கள் நடாத்திய கலந்துரையாடலிலும் இவ்வரைபு பற்றி வியந்து பேசப்பட்டதாக அக்கூட்டத்தில் கலந்துகொண்ட ஊடகத்துறை நண்பர் ஒருவர் தெரிவித்தார். ஆனால் இது பற்றி மேற்படி குழுவைச் சேர்ந்த ஜேசன் என்பவருடன் தொடர்பு கொண்டபோது, அவர் இதுபற்றி கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டார். அதே சமயம், கூட்டமைப்பினரால் ஒரு எழுத்துமூலமான ஆவணத்தை வெளியிட முடியாத நிலையினை பேரவையின் வரைபு ஏற்படுத்தியுள்ளமை தமிழரசுக் கட்சி வட்டாரங்களில் பதட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது. தற்போதைய சூழலில், (குறிப்பாக ஆறாம் திருத்தச் சட்ட மூலம் அமுலில் உள்ள நிலையில்) இதனை விட அதிகமாக ஒரு வரைபினைத் தயாரிக்க முடியாதுள்ளது. மறுபுறத்தில், கூட்டமைப்பு ஒரு எழுத்துமூலமான ஒரு வரைபை முன்வைக்குமாயின், அது தனது உண்மையான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி ஒற்யைாட்சிக்குள் அதிகாரப் பகிர்வை நோக்கிய தீர்வை நோக்கியதாக அமைந்திருக்கும். ஆகவே இவற்றை வைத்துப் பார்க்கையில், தமிழ் மக்கள் பேரவை உருவாக்கியுள்ள வரைபு முழுமையை அண்மித்தாக அமைந்திருப்பதே அது பற்றிய விமர்சனங்கள் அதிகளவில் எழாமைக்கான காரணம் என எடுத்துக் கொள்ளவேண்டியுள்ளது. இனி, பேரவையின் வரைபினைப் பார்ப்போம்.

இவ்வரைபு விடயத்தில் ஒன்றை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அது என்னவெனில், பல்வேறு நாடுகளில் சட்டமாக்கப்பட்டுள்ள அல்லது கடைப்பிடிக்கப்பட்ட, சர்வதேச சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறைகளை அடிப்படையாகக் கொண்டே இந்த வரைபு தயாரிக்கப் பட்டுள்து. இதுபற்றி சுருக்கமாக்க் கூறுவதானால், இவ்வரைபில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்களுக்கு வேறுநாடுகளிலிருந்து முன்னுதாரணங்களைக் காட்டமுடியும்.

இரண்டு பகுதிகளாகப்பிரிக்கப்பட்டுள்ள இவ்வரைபில், ஒன்று, எத்தகைய தீர்வு முயற்சிக்கும் முன்னதாக சிங்கள - தமிழ் தேசங்களுக்கிடையில் சர்வதேச மத்தியஸ்துடனான ஒரு அரசியல் உடன்படிக்கையில் கைச்சாத்திடுதல் பற்றியது, மற்றயது, சுயநிர்ணய அடிப்படியிலான சமஸ்டி முறையிலான அதிகார அலகு பற்றியது. இவ்விரண்டு விடயங்களும் தமிழ் மக்களின் அரசியற் போராட்டமானது மீளவும் விட்ட இடத்திலிருந்து தொடருவதற்கான விருப்பினைக் குறிகாட்டிநிற்கிறது.

தமிழ் நெற் இணையதளத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, இவ்வரைபானது வெளித்தரப்புகளைத் திருப்திப்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டிருந்தாலும், சில முக்கியவிடயங்களில் சமரசத்திற்கு இடமில்லை என்பதனை வெளிப்படுத்தியிருக்கிறது.

'ஒஸ்லோ ஆலோசனைகளில்' குறிப்பிட்டுள்ளது போன்று 'உள்ளக சுயநிர்ணய உரிமை' போன்ற குழப்பமில்லாமல், முழுமையான சுயநிர்ணய உரிமை வலியுறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், ஆவணத்தில் பகுதி 1.4 இல் குறிப்பிடப்பட்டிருக்கும், 'தமிழ் மக்கள் பாரதீனப்படுத்த முடியாத சுயநிர்ணய உரிமையைக் கொண்ட மக்கட் கூட்டமாவர். தனது சுயநிர்ணய உரிமையை ஏற்று அங்கீகரிக்குமிடத்து பிளவுபடாத ஒற்றுமையான இலங்கை அரசிற்கு தமிழ்மக்கள் தங்கள் பற்றுறுதியை வெளிப்படுத்துகின்றனர்.' என்ற விடயம் மீளவும் உள்ளக சுயநிர்ணய உரிமையை வேறுவிதமாகக் கூறுகிறதோ என்ற ஐயப்பாட்டை எழுப்புகிறது.

ஒற்றையாட்சியை மறுதலித்து, தமிழர் தேசம் சுயநிர்ணய உரிமைக்கு உரித்தான அலகாக கூட்டாட்சியில் இலங்கைத்தீவின் ஆட்சிமுறையில் இணைந்து கொள்கிறது என்பதனை ஆவணம் தெளிவாகக் குறிப்பிடுகிறது. ஒற்றையாட்சியில் அதிகபட்ச அதிகாரப்பரவாலக்கம் என்ற கூட்டமைப்பின் நிலைப்பாட்டை இவ்வாவணம் மறுதலிக்கிறது. தமிழ்மக்களை சுயநிர்ணய உரிமைக்கு உரித்தான மக்கள் கூட்டம் எனக் குறிப்பிடாமல், 'தேசம்' என்றே குறிப்பிடுதல் அவசியமானது. இவ்விடத்தில், பேரவையின் அங்கத்துவம் வகிப்பவர்களின் தனிப்பட்ட நபர்களின் கருத்துகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதுபோல் தெரிகிறது. இறுதி ஆவணத்தில் தமிழ்மக்கள் தேசம் என்றே குறிப்பிடப்படவேண்டும் என்பதே பலரதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

கூட்டமைப்பினர் கூறிவருவதுபோல் தமிழ்மக்கள் பகிரப்பட்ட இறைமையை கொண்டிருப்பதாகக் கூறாமல், பகுதி 2.1. இல் "இறைமை தனித்துவாமான மக்களுக்குரியதும் பாரதீனப்படுத்த முடியாததும் ஆகும். முழு சமஸ்டி அரசின் இறைமையும் அதன் அங்கத்துவ மக்கள் கூட்டங்களின் இறைமை மூலம் உய்த்தறியப்படுவதாகும்." என தமிழ்மக்களின் இறைமைபற்றிக் குறிபிடப்பட்டிருப்பது இந்த ஆவணத்தின் ஒரு சிறப்பம்சம்.

இந்த ஆவணத்தில் காணப்படும் முக்கிய குறைபாடு என்னவெனில் பகுதி 21.1 இல் அவசரகால அதிகாரங்கள் பற்றிய விடயத்தில், "அரசியலமைப்பிற்கு முரணாக மாநில அரசாங்கமொன்று சமஸ்டியிலிருந்து பிரிவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது என்றும் அவ்வாறான பிரிவு உடனடியானதொன்று என மத்தியின் தலைவர் திருப்திப்படுமிடத்து, அவர் அவசரகால நிலையினைப் பிரகடனப்படுத்தலாம். அவ்வாறு பிரகடனப்படுத்துமிடத்து ஆளுநர் நிறைவேற்று அதிகாரங்களையும் மற்றும் முதலமைச்சரினதும் மாநில அமைச்சரவையினதும் அதிகாரங்களையும் அந்நிலமைகளுக்கு ஏற்றவாறு, கையகப்படுத்தலாம்." எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எடுத்த எடுப்பில், இது அரைகுறை கூட்டாட்சி முறையைக் கொண்டிருக்கும் இந்தியக் குடியரசின் சட்டப்பிரிவு 356 ஐ நினைவுபடுத்துகிறது (ARTICLE 356 OF THE CONSTITUTION) ஆனால் இவ்வரைபில் அரசியலமைப்பு நீதிமன்றத்தின் ஒப்பதலின்றி அவசரகால நிலை பிறப்பிக்க முடியாது என்று குறிப்பிடப்பட்டுள்ள போதிலும். அரசியலமைப்புக்கு முரணான சமஸ்டியிலிருந்து பிரிவதற்கான நடவடிக்கை எதுவென்பது பற்றி விளக்கமளிக்கப்படவில்லை. இவ்விடயத்தில் சுயநிர்ணய உரிமைக்கு உரித்தான 'மக்கள் கூட்டத்தின்' நிலை எவ்வாறிருக்கும் ? அவ்வாறான சந்தர்ப்பத்தில் அவர்களது கருத்தறிய ஒப்பங்கோடல் முறையிலான வாக்கெடுப்பு நடாத்தப்படுமா? என்ற கேள்விகள் எழுகின்றன.

தமிழ் மக்கள் பேரவையின் அரசியற்தீர்வு யோசனைகளை நடைமுறைப்படுத்துவதற்கு சிறிலங்கா அரசாங்கம் தயாரக இல்லை என்பதனை இந்த வரைபைத் தயாரித்தவர்கள் நன்கு உணர்வார்கள். இருப்பினும், சர்வதேச தரப்புகளால் மறுதலிக்க முடியாத ஒரு திட்ட வரைபினை கொண்டுவந்ததன் மூலம் தமிழ்மக்களின் அரசியல் வேணவாவை ஐயத்திற்கு இடமின்றி வெளிப்படுத்தியுள்ளார்கள். அதனைச் செழுமைப்படுத்தி இறுதி வரைபாகக் கொண்டுவருவது தமிழ் மக்களின் கைகளிலேயே விடப்பட்டிருக்கிறது.

கருத்துக்களுக்கு - facebook.com/orupaper @orupaper

## ஒரு பேப்பர் கிடைக்குமிடங்கள்

| | |
|---|---|
| **New Malden** | |
| Ayngaran | 020 8949 6734 |
| Megaa Superstore | 020 8336 0061 |
| Vaaniyan | 020 8605 0434 |
| Murugan Kovil | 020 8942 4475 |
| Vaishna Superfoods | 020 8399 4488 |
| Stoneleigh Amman | 020 8393 8147 |
| **Tooting** | |
| Yhaal House | 020 8767 8585 |
| Selvarajah Gold house | 020 8767 3795 |
| Niru Con.Store | 020 8672 3200 |
| Ayngaran | 020 8540 1500 |
| Suvai Aruvi | 020 8543 6266 |
| Adchaya | 020 8540 8192 |
| **Croydon** | |
| Best Foods | 020 8684 6269 |
| Haran Bros | 020 8686 2552 |
| Chennai dosa | 020 8665 9192 |
| Eelam Video | 020 8664 8351 |
| Spice Land | 020 8667 1700 |
| **Lewisham** | |
| Chandra | 020 8333 8680 |
| Eelam Shop | 020 8690 6545 |
| Katpagam | 020 8694 8810 |
| AJ Video | 020 8691 8888 |
| Sivan Kovil | 020 8318 9844 |
| KRS Supermarket | 020 8297 9432 |
| Best Food | 020 8692 9811 |
| **Eastham** | |
| Seelans | 020 8471 5733 |
| Sakthi Cash & Carry | 020 8394 4560 |
| Murugan Temple | 020 8478 8433 |
| Station Super Store | 020 8503 4711 |
| Best Food | 020 8552 9578 |
| Saiva Munneta Sangam | 02085144732 |
| Akilan Enterprise | 020 8548 0033 |
| Anjappar | 020 8552 1155 |
| **Ilford** | |
| Vinnayagar Kovil | 020 8911 8934 |
| Nathan | 020 8514 1744 |
| Angels | 020 8553 0490 |
| Sri store ltd | 020 8553 7737 |
| **Edmonton** | |
| New Kannan Stores | 020 8884 4979 |
| Sayas | 020 8805 9529 |
| Nagapoosani Temple | 020 8884 3333 |
| **Walthamstow** | |
| Vinayagar Kovil | 020 8527 3819 |
| Kumarans | 020 7609 1912 |
| Prabas | 020 8509 3322 |
| **Harrow** | |
| Tsk food & Wine | 020 7622 4258 |
| North Harrow C&C | 020 8863 6160 |
| Prabhas | 020 8866 0977 |
| South Harrow F&W | 020 8423 6321 |
| Best foods | 020 8423 9933 |
| Sambal Express | 020 8799 7171 |
| **Wembley** | |
| Malar Super Market | 020 8795 5797 |
| Ganapathy C & C | 020 8795 4627 |
| Best foods | 020 8900 0100 |
| Vahizan Disc | 020 8795 0648 |
| **Ealing** | |
| Amman kovil | 020 8810 0835 |
| **Greenford** | |
| Ambiha | 020 8813 0967 |
| **Coventry** | |
| Eellakanthan Temple | 02476663554 |
| **South hall** | |
| Thamilini C & C | 020 8606 9900 |
| Abi Fast Food | 0208 813 9494 |
| Palm Palace Restaurant | 020 8574 9209 |
| Spicy Palace Restaurant | 020 8574 4087 |
| Luxmys C & C | 020 8571 4599 |
| Tamilan C & C | 020 8561 8174 |
| Lady Margret | 020 8571 4434 |

# AGILOGIX
connecting the world
CALL – 02033711272

# மறைமுக கட்டணம் இல்லை

எமது சேவைகள்: களஞ்சியம் - காப்புறுதி -
திறந்த வெளி இட வசதி - பொறுப்பேற்றல் மற்றும் விநியோகம்

**தனிநபர் கவனிப்பு - அதிகப்படியான பொதி - இடமாற்றம்**



- இலவச பெட்டிகள்
- பொறுப்பேற்றல் - விநியோகித்தல்
- தொழில்முறை ஆலோசனை

**கப்பல் மூலம் வாகனம் அனுப்புதல்**

- பணியக உதவிகள்
- கடன் கடிதங்கள்
- சுமை அகற்றல் - ஏற்றல்



from £ 1.90*

**வீட்டுக்கு வீடு சேவை**

இலங்கையிலுள்ள உடன்பாட்டாளர்
பெறுபவர் வீட்டிற்கே விநியோகம் செய்வோம்

**வாணிப சரக்கு நிலையம்**



**இயந்திரங்கள் - உபகரணங்கள்**
**- உதிரிப்பாகங்கள்**

- விசேட விலைகள் - தகர்த்தல் மற்றும் தயாரித்தல்

£ 15.00 limited offer




- சுங்க ஏற்றுமதி
- ஆவணங்கள்
- செயலாக்கம்
- இறுதி வரை கையாளுதல்



from £ 685*

**Office: 46, Mead Court, Buck Lane,**
**Kingsbury, London, NW9 0XN**
**Tel: 0203311272 Mob: 07913842265**
**Email: sales@agologix.co.uk**

**Warehouse & Yard**
**Unit1 & 2, Renwick Industrial Estate, Renwick Road, Barking, IG110SD**
**Tel: 0203311272 Mob: 07913842265**



MERLYN KUDOS hansgrohe Hudson Reed

# JSN HEAT SUPPLIES LTD
WIDE RANGE OF BATHROOMS, SHOWERS & KITCHENS

Ideal Standard GROHE Armitage Shanks



COMPACT RADIATOR PANELS
Genuine 80% DISCOUNT to trade customers



BEST PRICES AROUND ON VARIOUS DIFFERENT BOILERS AND MEGAFLOW

FLEXIBLE TILE ADHESIVE
with Life time guarantee
£14 inc. VAT

550 CABINET WITH BASIN
+ FREE MIXER TAP
£85 inc. VAT

450 CABINET WITH BASIN
+ FREE MIXER TAP
£75 inc. VAT

FREE

FREE
BATHROOM SET
with 550 Cabinet with basin
+ FREE MIXER TAP
£260 inc. VAT



SPECIAL OFFER
Thermostatic 2 way outlet
LIMITED OFFER
£149 inc. VAT
£129 inc. VAT

GROHE
G1000 COSMO BSM WITH NEW TEMPESTA
£201.00 inc. VAT

WC INC. SOFT CLOSE SEAT
£65 inc. VAT

LED LAMP BULB
WITH FITTING FIRE-RATE DOWN LIGHT
Starts from £10 inc. VAT
2 YEAR Guarantee

BATHROOMS • SHOWERS • GRANITE TILES • MARBLE TILES • PORCELAIN TILES ALL AT DISCOUNT PRICES

162 PINNER ROAD, HARROW HA1 4JJ TEL: 020 8427 0553

# துன்பியல் ராகம் - நமோ நமோ மாதா தமிழில்



ச.ச.முத்து

அண்மையில் சிங்கள தேசத்தின் சுதந்திர தினத்தன்று காலிமுகத் திடலில் தமிழிலும் சிங்கள தேசிய கீதம் பாடப்பட்டதை நேரடியாக பார்த்தும் இப்போது அதனை யூரியுப்பில் மீண்டும் மீண்டும் பார்த்தும் சிலர் கண்ணீர் (ஆனந்தக் கண்ணீர்) வடிப்பதாக எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

பாடப்பட்டுக் கொண்டிருக்கும் போதே சிங்கள தேச பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் நெக்குருகி கண்ணீர் விட்டதாக நேரில் பார்த்த ஊடகவியலாளர்கள் தெரிவித்து இருந்தார்கள். ஆங்கிலத்தில் அடிபணிவு அரசியலை வடிக்கும் ஒரு பத்தி எழுத்தாளரும் கூட தனது வலையில் தனக்கு கண்ணீர் பெருகியதை தான் விம்மியழுததை பதிந்து இருந்தார்.

இதனை விட இன்னும் சிலர் ஒரு படி மேலே போய் நமோ நமோ மாதா தமிழில் பாடப்பட்டது தமிழுக்கே பெருமை என்றளவில் கூட எழுதவும் கூறவும் தலைப்பட்டு விட்டார்கள். பாவம் தமிழ். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தண்டியலங்காரத்தில் 'ஓங்கலிடை பிறந்து உயர்ந்தோர் தொழ விளங்கி என்று ஆரம்பித்து தன்னேரில்லாத தமிழே என்று புகழப்பட்ட தமிழுக்கு,

*'வானமளந்த தனைத்தும் அளந்திடும்*

*வண்மொழி வாழி*

*ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி இசை கொண்டுவாழியவே!'* என்று பாரதி வானமளந்த அனைத்தையும் அளக்கக்கூடிய வலிமையும் செழுமையும் நிறைந்த தமிழ் என்று பாடிப் போற்றிய தமிழுக்கு, ஆயிரத்துக்கும் மேற்பட்ட வருடங்களுக்கு முன்னரே தான் எழுதிய அதிகாரங்களில் ஒன்றுக்கு படைச்செருக்கு என்று பெயர் வைத்து

*'கான முயல் எய்ந்த அம்பினில் யானை பிழைத்த வேந்தல் இனிது'* என்று எப்போதும் பெரியதை இலக்கு வை.. தோற்பினும் அது பெருமை என்று வள்ளுவர் சொன்ன தமிழுக்கு, எல்லாவற்றிலும் மேலாக எந்த இடைவெளியும் இல்லாத தொடர்ந்த பல ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்று நீட்சியும், எந்த மொழியின் இலக்கணத்துடனும் கலந்திடாத வேர் இலக்கணமும், காப்பியங்களும் நிறைந்த ஒரு செம்மொழியான தமிழுக்கு,

காலிமுகத்திடலில் இனப் படுகொலையாளிகளுக்கு முன் நின்று நமோ நமோ மாதாவை தமிழில் பாடியது பெருமை என்று யாராவது நினைத்து உருகினால் அவர்களின் அடிமை புத்திக்கு உறைக்க சொல்ல தமிழில்கூட வார்த்தை இல்லை.

முள்ளிவாய்க்காலில் சொந்த இனம் லட்சம் கொல்லப்பட்டு சிதைக்கப்பட்டதை பார்த்தும் வராத கண்ணீர் நமோ நமோ மதா தமிழில் பாடப்பெறும் போது மட்டுமே பீறிட்டு மடை உடைக்கின்றது என்றால் அந்த கிஸ்றீரியா நோய் தன்மைக்கு நாம் சொல்ல என்ன இருக்கிறது?

அது ஒரு பக்கத்தில் கிடக்கட்டும். நான் அடிமை என்பதை அவனது சிங்களத்தில் ராகத்துடன் பாடினால் என்ன அதனையே தமிழில் மெட்டு போட்டு ராகத்துடன் ஆலாபனை செய்தால் என்ன எல்லாம் ஒன்று தான். கன்னத்தில் அடி வாங்கிவிட்டு முன்னர் மாத்தயா என்று சொன்னதை இப்போது ஐயா என்கிறோம் அவ்வளவே..

தமிழில் பாடப்பட்டது தமிழுக்கு கிடைத்த மிகப்பெரும் கௌரவம் அது இது என்றெல்லாம் எழுதி குவிப்பவர்களுக்கு ஒன்று தெரிந்திருக்க நியாயமில்லை.

இதன் மூலப்பாடலான சிங்கள மொழியின் நமோ நமோ மாதாவை எழுதிய கவிஞனையே கொன்ற தேசியகீதம் தான் சிங்கள தேசத்தினது என்று. நமோ நமோ மாதா சிங்கள தேசத்தின் தேசியகீதமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட 52ம் ஆண்டின் பின்னர் சிங்களதேசத்தில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்கள், வெள்ளம், புயல் என அத்துடன் இந்த நமோ நமோ மாதா தேசிய கீதமாக இசைக்கப்பட்ட பின்னர் சிங்கள தேசத்தில் ஏற்பட்ட அரசியல் நிலையின்மை எல்லாவற்றுக்குமான பழி இந்த நமோ நமோ மாதா மீதே போடப்பட்டது.

இந்த பாடல் 'ந' சத்ததுடன் ஆரம்பிப்பதாலும் 'க' வரி வருவதாலும் அதன் நெடில் சத்தங்கள் அமங்கலம் என்று பழி சுமத்தப்பட்டது.

சிங்களத்தின் மிகப்பெரும் இனவாதியும் போர் என்றால் போர் என்று தமிழர்களை நோக்கி அறைகூவல் விட்டவருமான ஜே.ஆர் ஜெயவர்த்தனா நிதி அமைச்சராக இருந்தபோது அவரது வேண்டுகோளுக்கு இணங்க அப்போதைய உள்நாட்டு அமைச்சர் எட்வின் சமரக்கோன் தலைமையிலான குழுவால் தேசியகீதமாக 1952ல் ஏற்றுக்கொள்ளப்பட்ட நமோ நமோ 61ல் மாற்றத்துக்கு உள்ளானது.

அதுவும் அதனை எழுதிய ஆனந்த சமரக்கோனின் எதிர்ப்பையும் மீறி. ஆனந்த சமரக்கோன் எழுதிய நமோ நமோ பாடலின் முன்பாக சிறீலங்கா மாதா என்ற சொல் சேர்க்கப்பட்டதை எதிர்த்து மனமுடைந்து ஆனந்த சமரக்கோன் 62ல் அளவுக்கு அதிகமான தூக்க மாத்திரை சாப்பிட்டு தற்கொலை செய்து கொண்டார். எழுதியவனையே கொன்று போட்ட துன்பியல் ராகத்தில் தான் நமோ நமோ இருக்கிறது.

இந்த நமோ நமோ மாதா இப்போது தமிழில் பாடப்பெற்றது ஏதோ மைல் கல் என்பது போன்றும் சிங்கள தேசத்தின் நற்காரியங்களின் மிக ஆரம்பம் இது என்றும் பிரச்சாரம் சிங்கள தரப்பாலும் தமிழ் பாணபத்திர ஓணாண்டிகளாலும் மேற்கொள்ளப்படுகின்றது. நான் அறிந்தவரையில் தமிழர் தேசத்தில் சிங்கள படைகளின் ஆயுதப் பாதுகாப்பு இன்றி எந்தவொரு பொது இடத்திலும் கூட சிங்கள தேசக்கொடி பறக்கவே முடியாத நிலைதான் எப்போதும்.

ஆனால் 2010 இறுதியில் ஒக்ஸ்போர்ட் பல்கலைகழகத்தில் உரையாற்ற என்று வந்து தமிழர்களின் மகத்தான எதிர்ப்பால் தோல்வியில் தலைகுனிந்து, ஒக்ஸ்போர்ட் உரையும் ரத்தாகி அவமானத்தின் உச்சியில் நாடு திரும்பிய மகிந்தரை குளிர்விக்க எடுத்த முயற்சிதான் தமிழில் சிங்கள தேச கீதத்தை பாடுவதை தடை செய்யும் எத்தனம்.

மேலும் பன்னாட்டு நீதிபதிகள் அடங்கிய விசாரணை அது இது என்று சர்வதேச அழுத்தங்களில் இருந்து ஓரளவு தளர்ந்து கொள்ள இந்த தமிழில் நமோ நமோ பெரிதும் உதவும் என்பது சிங்கள இராஜதந்திர பட்டறிவு.

இந்த மொழி வலையை தமிழர்கள் அறியாதவர்கள் அல்ல. ஏற்கனவே கருணாநிதியும் இதனை போன்ற ஒரு நாடகத்தினை நடாத்தியதை அவ்வளவு எளிதில் மறந்திருக்க மாட்டார்கள் தமிழ்மக்கள். 2009 இனஅழிப்பின் போது அதனை தடுத்து நிறுத்தாதது மட்டும் அன்றி இன அழிப்புக்கு எதிராக தமிழகம் எழுச்சி கொண்ட போது அதனைநசுக்கிய கருணாநிதி அந்த கறையை போக்குவதற்காக தமிழுக்கு செம்மொழி மாநாடு என்று 2010 யூனில் நடாத்திய போது மிக இயல்பாக தமிழ் மக்கள் அதனை நிராகரித்து நின்றது ஒரு பெரும் வரலாறு.

அதனை ஒத்த ஒரு நடாகமாகவே இப்போது தமிழ்மொழியில் நமோ நமோ மாதா தேசிய கீதம் என்ற ஒன்றை சிங்களமும் அதன் ஒட்டுண்ணியாக வாழும் தமிழ் அரசியல்வாதிகளும் அரங்கேற்றி இருக்கிறார்கள்.

இவர்கள் ஒன்றே ஒன்றை மறந்து போகிறார்கள் என்பதுதான் உண்மை. தமிழர்களின் பிரச்சனை என்பதன் ஆரம்ப புள்ளியாக 50களில் சிங்களம் மட்டும் சட்டம் இருந்தது என்பது உண்மைதான். தமிழர்களின் தேசிய பிரச்சனை என்பது வெறுமனே மொழி என்பதையும் தாண்டி ஏறத்தாழ 50வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதை சிங்களம் எவ்வளவு பாடம் படித்தும் இன்னும் புரிந்து கொண்ட பாடில்லை.

தமிழர்களின் பிரச்சனையின் தீவிரம் கட்டுநாயக்க விமான நிலையத்தை கந்தக புகை காடு ஆக்கிய போதும் கூட இது புரிந்து இருக்கவில்லையா.. தமிழர்களின் பிரச்சனை என்பது அவர்களின் தேசிய இன உரிமை சார்ந்தது.

அவர்களின் பராம்பரிய நிலத்தினில் யார்க்கும் குற்றேவல் புரிந்திடாமல் அவர்கள் வாழும் வாழ்க்கை முறைமையை அவாவி நிற்கின்றது.

அதனை வெறுமனே ஒரு 2 நிமிட 28 செக்கன் தமிழ் நமோ நமோ மாதா பாடலினால் நிரவிவிட முடியாது என்பதை சிங்களம் உணர வேண்டும். சர்வதேசத்தை, அதனிலும் முக்கியமாக நடக்க இருக்கும் ஜெனீவா அமர்வுகளை கணக்கிலெடுத்து ஒரு அஸ்திரத்தை சிங்களம் லாகவமாகவே எய்துள்ளது.

தமிழர்கள் நிலத்தில் இன்னும் தொடரும் நில ஆக்கிரமிப்பு, திடீரென கண்டெடுக்கப்படும் சடலங்கள், ஆயுதப்படைகளால் வலிந்து மேற்கொள்ளப்படும் தமிழ் பகுதி போதை நுகர்வு, இயல்பு நிலை இன்னும் தோன்றிடாத நிலை, ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை இன்னும் விடுவிக்காத படைத்தரப்பு என்று எதுவுமே தீர்க்கவோ விரும்பாத அரசு அதனை மறைத்து தேசிய நல்லிணக்கம் தோன்றி இருக்கு என்று காட்ட கொண்டு வந்த மாயமானே தமிழில் நமோ நமோ மாதா.

சிங்களதேச சுதந்திரதினம் என்பது தமிழர் தாயகத்தில் அரசு நிகழ்வுகளாக அங்கொன்றும் இங்கொன்றுமாக நிகழ்ந்ததை தவிர தமிழர்கள் எவரையும் சிறீலங்கா சுதந்திர தினம் என்பது ஒரு பொருட்டாக கருத வைத்ததாக இம்முறையும் இல்லை-எப்போதும் இல்லை.

தமிழுக்கு இது பெருமை என்பதையும் தமிழர் எவருமே ஒரு பொருட்டாககூட நினைத்தது இல்லை. அவர்களுக்கு தெரியும் தமிழுக்கு இருக்கின்ற தொன்மைகளுடன் தமிழுக்கு இருக்கின்ற பெரிய பெருமை அது மில்லர்கள் பேசிய மொழி, அது திலீபன் பேசிய மொழி, அது ஆயிரமாயிரம் எம் தேசப் புதல்வர்கள் களத்தினில் பேசிய மொழி, எல்லாவற்றிலும் மேலாக அது எங்களின் தலைவன் பேசிய மொழி. அதுதான் தமிழுக்கு பெருமையே தவிர நமோ நமோ மாதாவை தமிழில் பாடியது அல்ல.

எங்களுக்கென்று ஒரு தேசம் நிச்சயமாக ஒருநாளில் உருவாகும். அந்த நாளில் என் தேசத்து சின்னஞ்சிறுசுகள் வானில் பறந்திடும் தாயக கொடியை பார்த்தபடியே எங்கள் தேசிய கீதத்தை பாடிடுவார்கள். அன்றுதான் தமிழ் அழகு பெறும்.

Immigration | Asylum | Family | Criminal Defence | Civil Litigation

**Expert in Criminal Defence Services.**
24 Hour Police Station Attendance
Magistrates' & Crown Court Representation

**Contractual Disputes**
Matrimonial - Divorce ancillary relief matters
Emergency Injunction

**Immigration Law Specialists**
Asylum & Immigration
Bail Application (Immigration Detention)
Removals, Deportation
Judicial Review & Emergency Injunction

**Civil Litigation**

We offer Legal Aid (FREE) in Crime, Immigration and Asylum matter

அகதி விண்ணப்பம், குடிவரவு, குற்றச்சாட்டு போன்றவற்றுக்கு இலவசமான சட்ட உதவிக் கொடை கொடுக்கப்படும்

Criminal Defence Service
Community Legal Service
The Law Society Accredited Immigration & Asylum

RAJ LAW SOLICITORS
169, Tooting High Street, London, SW17 0SY Tooting Broadway
Tel: 0203 133 0000 | Fax: 0203 133 0092 | www.rajlaw.co.uk
We are authorised and regulated by the Solicitors Regulation Authority (No. 421 980) Mail : info@rajlaw.co.uk

Emergency
079 4764 1876
079 1225 3418

# தமிழ் மொழியும், எம் பிள்ளைகளும்



**சுகி**

*(ஒரு பேப்பருக்காக)*

தாய் மொழி என்பது ஆங்கிலத்தில் mother tongue என்பர். ஆங்கில அகராதியில் ஒருபிள்ளை வளரும் பருவத்தில் பேசப்பட்ட மொழி என்கிறார்கள். (The language which a person has grown up speaking from early childhood). ஆராட்சியாளர்கள் ஒரு குழந்தைக்கு இரண்டுக்கு மேற்பட்ட மொழிகளை பேசவும், கற்கவும் ஆளுமை உள்ளது என்கிறார்கள். ஆனால் எம்மவர்களோ தமிழைப் படிப்பித்தால் ஆங்கிலம் சரியாக கற்க முடியாமல் போய்விடும் என்று ஆங்கிலத்திலேயே தாமும் வீட்டில் பிள்ளைகளுடன் கதைப்பதுடன், தமக்குள்ளும் ஆங்கிலத்திலேயே உரையாடிக் கொள்கின்றனர். இது பிள்ளைகளின் மொழி ஆளுமையில் வருகின்ற சந்தேகத்தில் பெற்றோர் முடிவெடுப்பது. இன்னொரு வகையான பெற்றோர் பிரித்தானிய அரசின் வாரிசுகள் போல, ஆங்கிலத்தில் கதைப்பது நாம் மெத்த படித்தவர்கள் என்பதையும், மேட்டுகுடியினர் என்பதையும் உறுதிப்படுத்தும் என்பதற்காக தமிழ் நன்றாக தெரிந்திருந்தும், விருப்பப்பட்டு நுனிநாக்கில் ஆங்கிலத்தில் உரையாடிக்கொள்கின்றனர். காலப்போக்கில் அவர்கள் தமிழை மறந்தவர்களாகவும், அல்லது ஆங்கிலத்தில் பேசுவது தமக்கு தமிழை விட சௌகரிகமானது என்றும் கூறிக்கொள்கின்றனர், அவர்கள் சொல்வது ஒருவிதத்தில் சரியாக இருக்கலாம். 'சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப் பழக்கம், வைத்ததொரு கல்வி மனப் பழக்கம், நித்தம் நடையும் நடைப்பழக்கம், நட்பும், தயையும், கொடையும் பிறவிக்குணம்' என்ற வெண்பா அதை உறுதி செய்கிறது.

அண்மையில் நடந்த இரு சம்பவங்கள் என்னை துருத்திக் கொண்டுள்ளன. ஒன்று எனது பல்கலைக்கழக நண்பி ஒருவர், தான் தமிழில் எழுதி பல வருடங்கள் ஆகிவிட்டது, அதுவும் வாழ்த்து எழுதுவது என்றால் இன்னும் கடினம், எனக்காக நீயே எழுதிவிடு என்று சொன்னது, மற்றது தமிழ் ஊடகவியலாளர் ஒருவர் தமிழ் ஒன்றுகூடல் ஒன்றில், ஆங்கிலத்தில் உரையாடுவது தனக்கு புரியாது என்று சொன்ன ஒரு வருடன், தான் ஆங்கிலத்தில் தான் தொடர்ந்தும் உரையாடுவேன் என்று அடம்பிடித்தது. அதற்கு அவர் சொன்ன இரு காரணங்கள். ஒன்று அது தனக்கு சௌகரிகமான மொழி, மற்றது நீர் இந்த நாட்டுக்கு வந்து எவ்வளவோ காலம், உமக்கு என்னென்று ஆங்கிலத்தில் உரையாட முடியாமல் உள்ளது என்பது. மற்றவரின் விளக்கம், அவர் வந்தவுடன் வேலைக்கு போகத் தொடங்கி விட்டதால், ஆங்கிலம் பயில நேரம் கிடைக்கவில்லை. மனமும் நாடவில்லை என்பது. இங்கே எனக்கு இரு கேள்விகள் உள்ளன. பிரித்தானியாவிற்கு வந்து 20,25 வருடங்கள் ஆகிவிட்டது இன்னும் ஆங்கிலம் தெரியவில்லை என்று ஆச்சரியமும், கோபமும் படும் இவர்கள், 20,25 வருடங்களாக படித்து, பேசிய தமிழை ஒருவர் மறந்து விட்டேன் என்று கூறும் பொழுதும், தமிழில் பேச கடினமாக உள்ளது, என்று சொல்லும் போதும் ஆச்சரியப்படாமல் கேள்வியும் இன்றி ஏற்றுக்கொள்கிறார்கள். இங்கு எவ்வளவோ தமிழ் நிறுவனங்களில், தனிய தமிழிலேயே உரையாடிக்கொண்டு வருடங்கணக்கில் வேலை செய்பவர்கள் உள்ளனர்கள். இது மொழி, கலாச்சாரம், திருமணம், நாட்டுப்பற்று, குழந்தை வளர்ப்பு என்று பல்வேறு விடையங்களிலும் நான் உட்பட எல்லோரும் தத்தம் நிலைமைகளையும், தம்மையுமே அளவுகோலாகக் கொண்டு அதில் இருந்து கொண்டு மற்றவர்களைப் பார்ப்பதால் வரும் சிக்கல் என்றுதான் கூறவேண்டும்.

இதே சிக்கல்தான் பிள்ளைகளுக்கு தமிழ் கற்பிக்கும் பொழுதும், நாம் எம்மையே அளவுகோலாகக் கொள்கிறோம், இங்குள்ள தமிழ் பாடசாலையின் நிர்வாகி ஒருவர் என்னிடம் குறைப்பட்டுக்கொண்டார், இங்குள்ள பாடத்திட்டங்கள் பிள்ளைகளுக்கு கடினமாக உள்ளது. சைக்கிளுக்கு எமக்கு தெரிந்த தமிழ் துவிச்சக்கரவண்டி, இங்கே உந்துருளி என்று சொல்வதால் பிள்ளைகளுக்கு கடினமாக உள்ளது என்று. பிள்ளைகளுக்கு இதில் ஒரு கடினமும் இல்லை, அவர்களைப் பொறுத்தவரை இரண்டுமே அவர்களுக்கு தெரியாத சொல், அத்தோடு படிக்கும் போது ஆங்கிலச்சொற்களை (சைக்கிள்) பாவிக்காமல், அதற்குரிய படத்தைக் காட்டி உந்துருளி என்று சொன்னால் பிள்ளைகளுக்கு விளக்கிக்கொள்கிறார்கள். உங்களுக்கு வேணும் என்றால் விளக்கம் சொல்லலாம், இரண்டு சக்கரம் உள்ள வண்டிகள் எல்லாம் சைக்கிள் ஆகிவிடமுடியாது. பொறிமுறையின் படி, எமது உந்து சக்தியால் உருளும் வண்டி என்பதால், அதற்கு எத்தனை சக்கரம் உள்ளது என்பதை விட, உந்துருளி என்பதே பொருந்தமான பெயராக தெரிவு செய்யப்பட்டுள்ளது. மொழி என்பது, மக்களின் தேவைக்கேற்ப வளர வேண்டியதொன்று, பிள்ளைகளுக்கு அதைப்படிப்பது கடினம் இல்லை, பெற்றோர்கள் இப்படி அலுத்து சலித்துக்கொள்வது அவர்கள் காதில் விழுவதால், அவர்களும் சிறு வயதில் தமிழ் வேண்டாம் என்கிறார்கள். தமிழ் ஆசிரியர்களும் அதைக் கற்பிக்கும் போது புது புது உத்திகளைக் கையாண்டு அவர்கள் அதை மறக்காமல் இருக்கும் வகையில் விளங்கப்படுத்த வேண்டும்.

சிறு வயதில் பிள்ளைகள் தமிழை எப்படி படிக்கிறார்களோ இல்லையோ வளர்ந்த பின், தமிழ் தெரியும் என்பதற்காக பெருமைப்படுகிறார்கள், தெரியவில்லை என்பதற்காக கவலையும் அடைகிறார்கள். இன்னுமொரு மொழி தெரிந்திருப்பது எப்பொழுதும் குறைவாக இருக்காது. இப்போது எமக்கு முந்திய தலைமுறையை விட, அடுத்த தலைமுறை, தமிழ் என்று சொல்வதற்கு தயங்குவதில்லை. காலனித்துவ மோகம் அவர்களுக்கு இல்லை. எமது கலாச்சாரம் புதுவருடம், பொங்கல், மொழி, சைவ உணவுமுறை என்று எல்லாவற்றையும் பெருமையாகவே பார்க்கிறார்கள். தமிழ் பாடசாலைகள் spoken English என்று உள்ளது போல, பேச்சு தமிழ் என்ற தனியான வகுப்பை உள்வாங்கி தமிழ் பேசத்தெரியாத, பேச விருப்பும் வளர்ந்தவர்களையும் உள்வாக்கிக் கொள்ளவேண்டும்.

**சிறு வயதில் பிள்ளைகள் தமிழை எப்படி படிக்கிறார்களோ இல்லையோ வளர்ந்த பின், தமிழ் தெரியும் என்பதற்காக பெருமைப்படுகிறார்கள், தெரியவில்லை என்பதற்காக கவலையும் அடைகிறார்கள்.**

பெற்றோரில் ஒருவர் தமிழரல்லாதவிடத்து, தமிழ் பிள்ளைகள், தமிழர்களை திருமணம் முடித்த தமிழர் அல்லாதவர்கள், தமிழ் பேசத் தெரியாத தமிழ்பெற்றோருக்கு பிறந்த தமிழ் பிள்ளைகள், என பலர் தமிழைப் பயிலும் ஆர்வத்தில் இன்னும் உள்ளார்கள். வயது முதிர்ந்த, அனுபவம் உள்ள தமிழ் ஆசிரியர்கள் தமது நேரத்தை முதியோர் கழகங்களில் வீணாக்காது, பிறருக்கு பயன்தரும் வகையில் செலவழிக்க முன்வருவது அவர்களுக்கும் மனஆரோக்கியத்தைக் கொடுக்கும்.

[https://www.soas.ac.uk/languagecentre/languages/tamil/the-elementary-tamil-evening-

DUNN SHIPPING LTD.
DELIVERY TO ANYWHERE IN SRI LANKA AND WORLDWIDE



At Dunn Shipping we provide following services
- Door to Door services to anywhere in Sri Lanka & World wide
- Pickup services from anywhere in the UK
- Special Air freight rate to sri lanka, India and rest of the world
- Custom clearance at your door for full container
- Motor spare parts shipping

Air Freight Up to warehouse in Colombo, Kandy or Addalaichenai
£ 2.85 per kg(More than 10kg)

மேலதிக விபரங்களை எமது புதிய இணையத்தளத்தில் காணலாம்.
புதிய இணையத்தளத்தில் உள்ள 'Shipment Tracking' மூலம் உங்கள் பொருட்களின் தற்போதைய நடவடிக்கைகளையும் பொருள் தற்போதுள்ள இடத்தையும் காணலாம்

Warehouse:
750, Greenford Road,
Greenford,
UB6 8QQ

East London Collection point
Serendib Lanka Travels
22,Woodford Avenue
GantsHill, Ilford, IG26XQ

Tel : 020 8842 2020 | Mob : 07949 361 434 | M : 07949 361 313

DUNN SHIPPING LTD.
Office - No: 06, 12,Jenner Avenue, London,W36EQ
Mail : info@dunnshipping.co.uk | Web : www.dunnshipping.co.uk

விசேட சலுகை !
கொழும்பு
£35.00 இலிருந்து
ஏனைய பாகங்களுக்கு
£ 50.00 இலிருந்து
(வீட்டுக்கு வீடு சேவை உள்ளடங்கலாக)

Air Freight
Door to door rate
£ 5.50 per kg
(More than 10kg)
Box ,Freight, Custom duty and delivery to door (Nothing to pay in Sri Lanka)
We deliver any electronics ( TV, Fridge, Washing machine, Cooker etc.)

யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, முல்லைத்தீவு மட்டக்களப்பு, மன்னார் போன்ற இடங்களுக்கு எங்களது சேவை தொடர்ந்து இடம்பெறுகிறது
** UK collection charges apply**

# தாழ்ந்து வரும் தமிழ்ப் பேரம் பேசும் சக்தி



**நிலாந்தன்**

விக்னேஸ்வரன் அரசியலில் இறங்கியபோது தயான் ஜெயதிலக அவரை மென்சக்தி என்று அழைத்திருந்தார். அவர் ஏன் அப்படி அழைத்தார்? இலங்கைத்தீவின் நீதிபரிபாலன கட்டமைப்புக்குள் நீண்டகாலமாக உயர் பொறுப்புக்களை வகித்த ஒருவர் அந்த நீதிபரிபாலனக் கட்டமைப்பினால் பாதுகாக்கப்படும் சிங்கள பௌத்த மேலாதிக்கவாதத்திற்கு விசுவாசமாகவே இருப்பார் என்றஓர் எதிர்பார்ப்பில் தான். விக்னேஸ்வரனும் ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் ஒப்பீட்டளவில் தீவிரத்தன்மை குறைந்தவராகவே காணப்பட்டார்.

ஆனால் ஆட்சிமாற்றத்தின் பின் அவர் தயான் ஜெயதிலகபோன்றவர்கள் எதிர்பார்த்திராத ஒருவளர்ச்சிக்குப் போய்விட்டார். தயான் ஜெயதிலக இப்பொழுதும் அவரை ஒரு மென்சக்தி என்று அழைப்பாரோ தெரியாது. விக்னேஸ்வரனின் விடயத்தில் மட்டுமல்ல ராஜபக்ஷ சகோதரர்களின் ஆட்சிகுறித்தும் தயான் ஜெயதிலக போன்றவர்கள் எதிர்பார்த்திராத திருப்பங்கள் கடந்த ஓர் ஆண்டுக்குள் நடந்துமுடிந்துவிட்டன.

மைத்திரி-ரணில் அரசாங்கமானது கடந்தசில தசாப்தங்களில் இலங்கைத்தீவை ஆட்சிசெய்த எல்லா அரசாங்கங்களையும் விட அனைத்துலக கவர்ச்சிமிக்கதாக தோற்றம் பெற்றுவருகிறது. அண்மைத் தசாப்தங்களில் இச் சிறிய தீவை ஆண்ட அரசாங்கங்களுக்குள் சந்திரிக்காவின் அரசாங்கமும், குறுகியகாலம் ஆட்சி செய்த ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கமும் குறிப்பிடத்தக்கஅளவிற்கு அனைத்துலக அளவில் கவனிப்பைப் பெற்றன.

இப்பொழுது ரணிலும் சந்திரிக்காவும் ஓர் அணியில் நிற்கிறார்கள். இவர்களைத் தவிர வெளியுலகத்தால் ஆசைகள் குறைந்த எளிமையான ஒருதலைவராகப் பார்க்கப்படும் மைத்திரியும் இந்த அணிக்குள் காணப்படுகிறார். இப்படிப் பார்த்தால் அண்மைத் தசாப்தங்களில் இலங்கைத்தீவில் தோன்றிய எல்லா அரசாங்கங்களைவிடவும் அதிகளவில் உலக சமூகத்தால் எதிர்பார்ப்போடு பார்க்கப்படும் ஓர் அரசாங்கமாக இந்த அரசாங்கம் காணப்படுகிறது.

அரசியலமைப்பு மாற்றங்களில் ஜனாதிபதி முறைமை நீக்கப்படுமாக இருந்தால் இலங்கைத்தீவின் நிறைவேற்று அதிகாரமுடைய கடைசி ஜனாதிபதியாக மைத்திரியே இருப்பார். நிறைவேற்று அதிகாரங்களை இழக்கத் தயாராக இருந்த ஒரே ஜனாதிபதியாக அவர் நினைவு கூரப்படுவார். ஆட்சிமாற்றம் ஒன்றின் கருவியே தான் என்பதை அவர் நன்கு விளங்கி வைத்திருக்கிறார். அதனால் அவர் இப்பொழுது அமர்ந்திருக்கும் சிம்மாசனம் நிரந்தரமானதல்ல என்பதும் அவருக்கு நன்கு தெரிந்திருக்கிறது. இது காரணமாக தனக்கு முன்பிருந்த எல்லா ஜனாதிபதிகளிடமிருந்தும் அவர் சிலவிடயப்பரப்புக்களில் துலக்கமான விதங்களில் வேறுபட்டுநிற்கிறார்.

இதுவரையிலும் இருந்த எல்லா ஜனாதிபதிகளுமே தங்களுடைய நிறைவேற்று அதிகாரங்களை எப்படித் தக்கவைக்கலாம். அல்லது எப்படி அதிகப்படுத்தலாம் என்ற திசையிலேயே சிந்தித்தார்கள். ஆனால் மைத்திரியோ 19 ஆவதுதிருத்தத்தின் மூலம் தனது அதிகாரங்களில் ஒருபகுதியை இழக்கத் தயாராக இருந்தார்.

இதற்கு முன்பிருந்தசில ஜனாதிபதிகள் பதவிக்குவரும் வரையிலும் ஜனாதிபதி முறைமையை எதிர்த்தார்கள். தாம் பதவிக்கு வந்த பின் அதை நீக்கப்போவதாகவும் நம்பிக்கையூட்டினார்கள். ஆனால் பதவியில் அமர்ந்ததும் அவர்கள் அந்தசிம்மாசனத்தை இழக்கத் தயாராக இருக்கவில்லை. நிறைவேற்று அதிகாரங்களின் ருசி அப்படிப்பட்டது. ஆனால் மைத்திரி ஒரு அரசனைப் போல நடந்து கொள்வதில் ஆர்வமற்றவராகக் காணப்படுகின்றார்.

அவர் தற்காப்பு உணர்வின்றி மிகவும் எளிமையாக நடந்து கொள்வதை மகிந்தவின் ஆதரவாளர்கள் கேலி செய்கிறார்கள். மகிந்த யுத்தத்தை வெற்றி கொண்டபடியால்தான் மைத்திரி இப்படி சுதந்திரமாகச் செயற்பட முடிகிறது என்றும் அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். ஆனால் வெற்றிவாதத்தின் பின்னரான சுமார் ஆறாண்டுகால ஆட்சியின் போது பெற்ற கசப்பான அனுபவங்களின் விளைவே மைத்திரி எனலாம். அதுவும் அவர் ஓர் அரசனைப் போல நடந்துகொள்ளத் தயாரற்றிருப்பதற்கு ஒருகாரணமாக இருக்கலாம்.

தனக்குள்ள நிறைவேற்று அதிகாரங்கள் தற்காலிகமானவை என்ற ஒரு விளக்கத்தின் அடிப்படையில் செயற்படும் ஓர் அரசுத் தலைவராக இருப்பதனால் மைத்திரி எளிமையானவராகவும், பேராசை குறைந்தவராகவும், மூர்க்கமிலாதவராகவும் காணப்படுகிறார். அவருடைய இந்தத் தோற்றம் இப்போதுள்ள அரசாங்கத்தின் அனைத்துலக கவர்ச்சிசையை அதிகப்படுத்தியிருக்கிறது.

அதேசமயம் ரணில் விக்கிரமசிங்கவோ ஒரு கண்டிப்பான நிர்வாகி போலவும், கறாராகக் கதைப்பவர் போலவும் காணப்படுகிறார். முன்னைய தசாப்தங்களில் அவர் ஒரு மென்மையான தலைவராகவே பார்க்கப்பட்டார். ஆனால் அவருடைய கட்சிக்குள்ளேயே அவரைக் கவிழ்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் காரணமாகவும், வயது முதிர்ச்சி காரணமாகவும் அவர் ஓர் இறுக்கமான நிர்வாகியாக உருவாகியிருப்பதாக தென்னிலங்கை அரசாங்க வட்டாரங்களில் கருதப்படுகிறது.

தனது அமைச்சர்களோடு கண்டிப்பாக நடந்துகொள்ளும் அவர் அதே அளவு கண்டிப்போடு இனவாத ஊடகங்களையும் அண்மையில் நாடாளுமன்றத்தில் சாடியிருந்தார். அது மட்டுமல்ல இலங்கைத் தீவின் நீதிபரிபாலன அமைப்பைக்குறித்தும் இறந்தகாலத்தில் இழைக்கப்பட்ட சிலதவறுகளைக் குறித்தும் அவர் வெளிப்படையாகப் பேசியிருப்பதை கடந்தவாரம் இலங்கைக்கு வந்துபோன ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஒருபுறம் பேராசைகள் குறைந்தசாதுவான ஒரு ஜனாதிபதி இன்னொருபுறம் கண்டிப்பான, கறாரான ஒரு பிரதமர். இந்த இருவருடையதும் சேர்க்கையானது அனைத்துலக அளவில் அதிகம் எதிர்பார்ப்புக்களைத் தோற்றுவித்திருக்கிறது. முதலாவதாக இச் சேர்க்கையானது மேற்குக்கும், இந்தியாவுக்குமான கதவுகளை அகலத் திறந்திருக்கிறது. இரண்டாவதாக கடந்தகாலத் தவறுகளுக்குரிய ஏதோ ஒரு பரிகாரத்தைக் கண்டடையப் போவதானஒருதோற்றத்தையும் காட்டுகிறது.

இது காரணமாகவே இலங்கைக்கு வந்துபோகும் மேற்கத்தையத் தூதுவர்கள் சிலசமயங்களில் இந்த அரசாங்கத்தின் பிரச்சாரகர்கள் போலமாறி விடுகிறார்கள். உதாரணமாக அண்மையில் வந்து போன சமந்தாபவர் யாழ்ப்பாணத்தில் விக்னேஸ்வரனைச் சந்தித்தார். இதன் போது விக்னேஸ்வரன் நடப்புநிலைகள் தொடர்பாகத் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளார். ஆனால் சமந்தாபவரோ ஆட்சிமாற்றத்தின் பின் நிகழ்ந்த நல்லமாற்றங்கள் என்று அவர் கருதுபவற்றை பட்டியலிட்டுக் காட்டியுள்ளார்.

இவ்வாறாக மைத்திரி-ரணில் அரசாங்கமானது தனது அனைத்துலக அந்தஸ்தை மேலும் மேலும் பெருக்கிக்கொண்டு வருகிறது. இது இப்படியேபோனால் ஒருகட்டத்தில் மேற்குநாடுகள் இந்தஅரசாங்கத்தை ஒரு மென்சக்தி அரசாங்கம் என்று வர்ணித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இவ்வாறாக இந்தஅரசாங்கத்தின் அனைத்துலகக் கவர்ச்சி அதிகரித்து வருவதனால் பேரம்பேசும் சக்தியும் அதிகரித்துவருகிறது. அதனால் தான் மைதிரியும் ரணிலும் கடந்த ஜெனிவாத் தீர்மானத்தின் போது ஐ.நாவில் வாக்குறுதி அளித்ததற்குமாறாக இப்பொழுது உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை குறித்துப் பேசிவருகிறார்கள். தேர்தலில் தோற்ற சரத் பொன்சேகாவை நாடாளுமன்றத்துக்குள் கொண்டு வந்திருக்கிறார்கள்.

போர்க்குற்றம் தொடர்பிலான விசாரணைப் பொறிமுறைகளைப் பொறுத்தவரை கடந்த ஓராண்டு காலத்திற்குள் படிப்படியாக ஒருவித தேய்மானத்தைப் பார்க்கக்கூடியதாக இருக்கிறது. நவிப்பிள்ளை அம்மையார் பொறுப்பில் இருந்தபோது பன்னாட்டு விசாரணைக்கான கோரிக்கையே வலுவாகக் காணப்பட்டது. ஆனால் ஆட்சிமாற்றத்தின் பின் மேற்குநாடுகள் அந்தக் கோரிக்கைக்கு அழுத்தம் கொடுக்க விரும்பவில்லை.

> **அதாவது தமிழ் மென்சக்தியானது துலக்கமான ஒரு முழு வளர்ச்சியை இனிமேற்றான் பெற வேண்டியிருக்கிறது. அப்படியொரு வளர்ச்சியை அடைவதற்கிடையில் தமிழ் மக்களின் தலையில் மேலுமொரு தீர்வற்ற தீர்வு கட்டியடிக்கப்பட்டுவிடுமா ?**

ஆட்சிமாற்றத்தைப் பாதுகாப்பதற்காக அவர்களும் ஒருவிதகலப்புப் பொறிமுறையைத்தான் தெரிவுசெய்தார்கள். ஆனால் தீர்மானம் நிறைவேற்றுப்படும் போது இலங்கை அரசாங்கம் அதற்குள்ளும் திருத்தங்களைக் கொண்டு வந்தது. அனைத்துலக நிபுணர்களை உள்ளடக்கிய கலப்புப் பொறிமுறைக்குப் பதிலாக பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த நிபுணர்களை உள்ளடக்கிய கலப்புப் பொறிமுறை என்று தீர்மானம் மாற்றப்பட்டது. இப்பொழுது சில மாதங்களின் பின் உள்நாட்டுப் பொறிமுறை தான் என்று கூறப்படுகிறது. அதாவது ஆட்சிமாற்றத்தின் கீழான கடந்த ஓராண்டு காலகட்டத்திற்குள் விசாரணைப் பொறிமுறை படிப்படியாகத் தேய்ந்துவருகிறது.

இது தொடர்பாககடந்தவாரம் ஐ.நா மனித உரிமை ஆணையாளரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இடம்பெயர்ந்தோர் முகாம்களுக்கு அவர் விஜயம் செய்த போது அங்குவைத்து அல்ஜசீரா செய்தியாளர் மேற்படி கேள்வியை அவரிடம் கேட்டுள்ளார். ஆனால் அவரோநேரடியாகப் பதிலளிப்பதைத் தவிர்த்து சுற்றி வளைத்துப் பதில் சொல்லியுள்ளார். அவரது விஜயத்தின் முடிவிலும், பின்னரும் அவர் தெரிவித்திருக்கும் கருத்துக்களை வைத்துப் பார்த்தால் அதுவிடயத்தில் அவர் அரசாங்கத்திற்கு நோகக் கூடியவிதத்தில்

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்)

www.tamilpages.com
தமிழ் ஓலைகள்
TAMIL PAGES
TO ADVERTISE CALL OR EMAIL
0770 319 0768 / 0771 800 3838
020 8543 2126
editor@tamilpages.com
52 Kingsley Road, Wimbledon London SW19 8HF
Tamil Pages readership is second to none and its advertising portfolio is comprehensive and innovative
We are now calling for advertisements from Businesses for the 2016 Directory - 23rd Edition
A box advert cost only £35 for a full year
THINK DIFFERENT AND GO FURTHER WITH TAMIL PAGES
New look, New Content, Same Market Penetration

# திருச்சபைகளும் இரண்டாம் பனிப்போரும்

**வேல் தர்மா**

*(ஒரு பேப்பருக்காக)*

1979-ம் ஆண்டு சோவியத் ஒன்றியப் படைகள் ஆப்கானிஸ்த்தானை ஆக்கிரமித்தன. அங்கு சோவியத் ஒன்றியப் படையினருக்கு எதிராகப் போராட ஐக்கிய அமெரிக்கா, சவுதி அரேபியா, பாக்கிஸ்த்தான் ஆகியவை இணைந்து இஸ்லாமியத் தீவிரவாதிகளை உருவாக்கி அவர்களுக்கு எதிராகப் போராட வைத்தனர். சோவியத்தின் படைத்துறைச் செலவு ஒரு புறம் அதிகரிக்க வைக்கப்பட்டது. மறுபுறம் அதன் எரிபொருள் ஏற்றுமதி வருமானத்தை வீழ்ச்சியடையச் செய்ய சவுதி அரேபியா எரிபொருள் உற்பத்தியைப் பெருமளவில் அதிகரித்தது. புதிதாக எரிபொருள் உற்பத்தி செய்யும் நாடுகளில் உற்பத்திச் செலவிலும் குறைந்த விலை உலகச் சந்தையில் எரிபொருள் விற்கப்படும் போது அந்தப் புதிய உற்பத்தி நிலையங்கள் மூடப்படும் பின்னர் எரிபொருள் விலை அதிகரிக்கும் என சவுதி அரேபியா அப்போது தெரிவித்தது. ஆனால் ஆப்கானிஸ்த்தான் போரும் எரிபொருள் விலை வீழ்ச்சியும் சோவியத் ஒன்றியத்தை 1991-ம் ஆண்டு வீழ்ச்சியடைய வைத்தது.

### ◆ அப்பன் காட்டிய வழி

2014-ம் ஆண்டு மார்ச் மாதம் ஊடகம் ஒன்றில் வெளி-ஆசிரியத் தலையங்கம் எழுதிய றோனால்ட் றீகனின் மகன் மைக்கேல் றீகன் தனது தந்தை எப்படி சவுதி அரேபியாவை உலகச் சந்தையில் எரிபொருளைக் கொட்டிக் குவிக்கும் படி சொன்னார் என்பதை அம்பலப் படுத்தினார். இதன் நோக்கம் சோவியத் ஒன்றியத்தின் வருமானத்தைச் சிதைத்து அதன் நாணயமான ரூபிளை வீழ்ச்சியடையச் செய்வதுமாகும். மைக்கேல் றீகன் தனது கட்டுரையில் அப்போது சோவியத் ஒன்றியத்திடம் இருந்த உலகில் விற்கக் கூடிய ஒரே பொருள் எரிபொருள் மட்டுமே எனத் தெரிவித்ததுடன் பராக் ஒபாமா தனது தந்தையின் வழியைக் கடைப்பிடிக்க வேண்டும் எனத் தெரிவித்திருந்தார். ஆனால் மைக்கேல் அந்த ஆலோசனையைச் சொல்ல முன்னரே ஒபாமா அதைப் பின்பற்றத் தொடங்கிவிட்டார்.

### ◆ செயல் மீளியக்கம் - Action Replay

தற்போது1980களில் நடந்தவையின் செயல் மீளியக்கம் இப்போது அரங்கேறிக் கொண்டிருக்கின்றது. எரிபொருள் விலை கண்டபடி வீழ்ச்சியடைகின்றது. உக்ரேனின் கிழக்குப் பிராந்தியத்தில் இரசியப் படைகள் இரகசியமாக நிலை கொண்டிருக்கின்றன. அது இரசியாவிற்கு ஒரு செலவு. அது போதாது என்று சிரியாவில் இரசியப் படை நிபுணர்களும் சிறுபடைப்பிரிவும் நிலை கொண்டுள்ளது. இந்த நிலையில் 20,000 போர்த்தாங்கிகள், 2,450 போர் விமானங்கள், 460 உழங்கு வானூர்திகள், சகிதம் சவுதி அரேபியா தலைமையில் துருக்கி உட்பட 25 நாடுகளைச் சேர்ந்த 350,000 படையினர் சிரியா மீது படையெடுக்கத் தயாராகி உள்ளனர். சிரியாவில் தனது ஆதிக்கத்தைத் தொடர்ந்து நிலை நிறுத்த வேண்டுமாயின் இரசியா தனது பல படைப் பிரிவுகளை சிரியாவிற்கு அனுப்ப வேண்டியிருக்கும். இரசியா கடல்வழியாக சிரியாவிற்குப் படையினரை அனுப்புவதற்கு தனது வோல்கா நதியில் ஆரம்பித்து கருங் கடலூடாகவும் துருக்கிக்கும் கிரேக்கத்திற்கும் இடையில் உள்ள துருக்கி நீரிணையூடாகவும் ஏகன் கடலூடாகவும் சென்று மத்தியதரைக் கடலை அடையவேண்டும். துருக்கியால் இரசியாவை இலகுவாக துருக்கி நீரிணையில் வைத்து இரசியக் கடற் போக்குவரத்தைத் தடுக்க இயலும். இரண்டாம் உலகப் போரின் போதும் துருக்கி அப்படிச் செய்தது.

### ◆ இரசியாவின் மேற்கு கறுக்கின்றது

அமெரிக்கப் பாரளமன்றத்திற்கு அனுப்பிய 2017-ம் ஆண்டிற்கான பாதுகாப்புச் செலவுக் கோரிக்கையில் அதிபர் பராக் ஒபாமா ஐரோப்பாவிற்கான பாதுகாப்புச் செலவாக 3.4 பில்லியன் டொலராக ஒதுக்கியிருந்தார். இது 2016-ம் ஆண்டிற்கான ஒதுக்கிட்டிலும் பார்க்க நான்கு மடங்காகும். இரசியாவின் விரிவாக்கத்தைத் தடுப்பதற்கான அதன் எல்லையில் உள்ள கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நேட்டோப் படைகளையும் படைக்கலன்களையும் குவிப்பது ஐக்கிய அமெரிக்காவின் தற்போதைய தந்திரோபாயமாக இருக்கின்றது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த அமெரிக்கப் பாதுகாப்புத் துறைச் செயலர் அஸ்டன் கார்ட்டர் 2015- ஜுன் மாதம் 22-ம் திகதி நேட்டோவின் ஐயாயிரம் படையினரைக் கொண்ட அதி உயர் தயார் நிலை இணை அதிரடிப்படைப் (Very High Readiness Joint Task Force) பிரிவுகள் கிழக்கு ஐரோப்பாவில் நிலை கொள்ளச் செய்யப் படும் என்றார். அத்துடன் மறு நாள் எஸ்த்தோனியத் தலைநகருக்குச் சென்ற அஸ்டன் கார்டர் எஸ்தோனியா, லத்வியா, லித்துவேனியா, பல்கேரியா, ருமேனியா ஆகிய நாடுகள் உட்படப் பல மைய மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் முன் கூட்டியே பல படைத்துறைப் பார ஊர்திகளும் உபகரணங்களும் நிலை கொள்ளச் செய்யப்படும் என்றார். அந்த நாடுகளில் தேவை ஏற்படும் போது நேட்டோப்படையினர் ஒரு 48 மணித்தியால அவகாசத்தில் சென்று தரை இறங்கக் கூடிய வகையில் முன்னேற்பாடுகள் செய்யப்படும் என்றார். இந்த நகர்வுகளும் நடவடிக்கைகளும் இரசியா உக்ரேனில் செய்யும் அத்துமீறல் நடவடிக்கைகளினால் அச்சமடைந்த நாடுகளுக்கு நம்பிக்கை ஊட்டுவனவாக அமைந்தது. ஜுன் 16-ம் திகதி இரசிய அதிபர் விளடிமீர் புட்டீன் இரசியா நாற்பது அணுக்குண்டுகளைத் தாங்கிச் செல்லக் கூடிய கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளை இந்த ஆண்டு தனது படையில் சேர்த்துக் கொள்ளும் என அறிவித் திருந்தார். இந்த அறிவிப்பும் அஸ்டன் கார்ட்டரின் அறிவிப்பும் ஐரோப்பாவில் ஒரு பனிப்போரை ஆரம்பித்து விடவில்லை என்றார் கார்ட்டர்.

### ◆ இரண்டாம் பனிப்போர்

2016 பெப்ரவரி 12-ம் திகதி ஆரம்பமான மூன்று நாள் மியூனிச் பாதுகாப்பு மாநாட்டில் உரையாற்றிய இரசியத் தலைமை அமைச்சர் டிமிட்ரி மெட்வெடேவ் தற்போது இரசியாவிற்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையில் உள்ள உறவை புதிய பனிப்போர் என விபரிக்கலாம் என்றார்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் படைவலுவை அதிகரிப்பதன் மூலம் ஐரோப்பாவின் உறுதிப்பாட்டை அமெரிக்கா குலைக்கின்றது. ஐக்கிய அமெரிக்காவும் நேட்டோப் படையினரும் செய்யும் நகர்வுகளை அடிப்படையாகக் கொண்டே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். நேட்டோப் படைத்துறைக் கூட்டமைப்பின் உச்சத் தளபதி ஜெனரல் பிலிப் பிரீட்லவ் அப்படி ஒரு பனிப்போர் இல்லை என்றார். ஜேர்மனியில் நடந்த மியூனிச் பாதுகாப்பு மாநாட்டில் உரையாற்றிய அமெரிக்க வெளியுறவுத் துறைச் செயலர் ஜோன் கெரி இரசியப் படைகள் சட்டபூர்வமான அமைப்புக்களுக்கு எதிராகத் தாக்குதல்கள் செய்வதாகக் குற்றம் சாட்டினார்.

### ◆ கருங்கடலில் நெருங்கும் எதிரிகள்

கிறிமியாவை 2014-ம் ஆண்டு மார்ச் மாதம் தன்னுடன் இணைத்த இரசியா மிகவும் துரிதமாக அங்கு தனது போர் விமானங்களையும் கடற்படைக் கப்பல்களையும் ஏவுகணை எதிர்ப்பு முறைமைகளையும் குவித்தது. அத்துடன் கருங்கடலில் தனது கடற்படை வலுவையும் பெருக்கியது. எஸ்த்தோனியா, லித்துவேனியா, லத்வியா ஆகிய நாடுகளின் வான்பரப்பை நேட்டோப் படைகள் 24 மணித்தியாலமும் கண்காணிப்பது போல் கருங்கடலையும் கண்காணிக்கும் திட்டத்தை நேட்டோப் படையினர் செயற்படுத்தலாம். இதுவரை கருங்கடலை ஒட்டி துருக்கியில் ஒரு நேட்டோ கடற்படைத் தளம் அமைப்பதை அனுமதிக்காத துருக்கி இனி ஒரு கடற்படைத் தளம் அமைக்க ஒத்துக்கொள்வதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது.

### ◆ நேட்டோவின் பிரச்சனை

விளடிமீர் புட்டீன் ஆட்சிக்கு வந்ததில் இருந்து ஐரோப்பிய நாடுகள் தமது பாதுகாப்பையிட்டு கவலையடைந்தன. உக்ரேனில் இரசியா செய்த ஆக்கிரமிப்பிற்குப் பின்னர் பல ஐரோப்பிய நாடுகள் அச்சமடையவும் தொடங்கின. போதாக் குறைக்கு இரசிய அரசுறவியலாளர்கள் அடிக்கடி அணுப் படைக்கலப் போர் என்றும் மிரட்டிக் கொண்டுருக்கின்றனர். ஐரோப்பாவில் உள்ள நேட்டோவின் அணுப்படைகலன்கள் பழமையானவை. அதன் செயற்திறன்களையிட்டு ஐக்கிய அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் கரிசனை கொண்டுள்ளன. அடுத்த பத்து ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்கா ஐரோப்பவில் உள்ள அணுப் படைக்கலன்களை மேம்படுத்துவதற்காக பல பில்லியன் டொலர்களை செலவழிக்க எண்ணியுள்ளது.

### ◆ இரு திருச்சபைகளின் தலைகளின் சந்திப்பு

2016-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13-ம் திகதி சனிக்கிழமை கியூபாத் தலைநகர் ஹவானாவில் இரசிய மரபுவழித் திருச்சபையின் உயர் போதகர் பட்ரியாக் கிரில்லும் கத்தோலிக்கத் திருச்சபையின் போப் ஆண்டவர் பிரான்சிஸ் அவர்களும் சந்தித்து உரையாடியதுடன் இருவரும் இணைந்து ஒரு பிரகடனத்திலும் கைச்சாத்திட்டனர். இருவரினதும் சந்திப்பில் ஐரோப்பிய ஒருமைப்பாட்டுக்கும் கிருத்தவர்களுக்கு எதிரான வன்முறைகளுக்கும், பயங்கரவாத எதிர்ப்பிற்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அவர்கள் கைச்சாத்திட்ட பிரகடனத்தில் நாம் உடன்பிறப்புக்கள் பகைவர்கள் அல்லர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ◆ புட்டீனின் உதவியாளராகக் கடவுள்

ஐ எஸ் அமைப்பின் வளர்ச்சி வெற்றியில் முடிந்தால் வட ஆபிரிக்கா, மேற்காசியா, மத்திய ஆசியா ஆகிய பெரு நிலப்பரப்பு இஸ்லாமிய அரசாக உருவெடுக்கும். இதில் அணுப்படைக் கலனகளைக் கொண்ட பாக்கிஸ்த்தானும் அடக்கம். அதனால் ஒரு பெரு வல்லரசாக உருவெடுக்கலாம். இதையிட்டி திருச்சபைகள் கரிசனை கொண்டுள்ளன போல் தெரிகின்றது. அமெரிக்காவையும் மேற்கு ஐரோப்பாவையும் கிறிஸ்த்தவம் இணைத்து வைத்திருக்கின்றது என்பது உண்மையாகும். அதுதான் நேட்டோக் கூட்டமைப்பு. கடந்த இருபது ஆண்டுகளாக இரசியா தம்முடன் இணையும் என எதிர்பார்த்திருந்த இந்தக் கூட்டமைப்பு உக்ரேன் விவகாரத்துடன் அந்த எதிர்பார்ப்பு தவிடு பொடியானது. இப்போது வேறு விதமாக அணுகப்படுகின்றது. இரசியாவிற்கு எதிரான பொருளாதாரத் தடை, எரிபொருள் விலை திட்டமிட்டு விழச்செய்தமை, இரசியாவை சிரியாவில் ஒரு போரில் மாட்ட வைத்தமை ஆகியன புட்டீனின் செல்வாக்கை அடுத்த சில ஆண்டுகளில் தவிடு பொடியாக்கும் நோக்கதிலேயே செய்யப்படுகின்றது. சோவியத் ஒன்றியத்தை ஒரு துப்பாக்கி குண்டு கூட வெடிக்க வைக்காமல் 11 ஆண்டுகளில் சிதைத்தது போல புட்டீனின் பிடியில் இருந்து இரசியாவை மீட்டெடுக்கும் போது ஏற்படும் அதிகார இடைவெளியால் இரசியாவில் பெரும் குழப்பம் ஏற்படாமல் தடுக்க இரசிய மரபுவழித் திருச்சபையின் தலையீடு அவசியம். சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் இரசியாவில் மரபுவழித் திருச்சபையின் செல்வாக்கு அதிகரித்துள்ளது.

ஈரானிற்கு எதிரான பொருளாதாரத் தடை கொண்டுவந்த போது அதை ஐநா பாதுகாப்புச் சபையில் இரசியா தனது வீட்டோ அதிகாரத்தைப் பாவித்து இரத்துச் செய்யாமல் இருக்க இரசியத் திருச்சபை உதவியாக இருந்தது. இரசியாவில் திருச்சபைக்கும் புட்டீனிற்கும் இடையில் நல்லுறவு இருந்தாலும் திருச்சபையை புட்டீன் தனக்கு அடங்கி நடக்கும் ஒன்றாகவே வைத் திருக்கின்றார். ஒரு அமெரிக்க ஊடகம் இஸ்லாமிய நாடுகளில் கடவுளே அரசர் சீனாவிலும் ஜப்பானிலும் அரசரே கடவுள் இரசியாவில் கடவுள் புட்டீனின் உதவியாளர் என நகைச் சுவையாக புட்டீனிற்கும் திருச்சபைக்கும் உள்ள தொடர்பை விபரித்தது. புட்டீனுடன் திருச்சபை ஒத்துழைத்தாலும் அவர் தம்மீது காட்டும் மேலாண்மையை திருச்சபை விரும்பும் எனச் சொல்ல முடியாது.

உலகத்தை ஒரே ஒழுங்கில் கொண்டு வருதல் என்னும் போர்வையில் அமெரிக்க ஐரோப்பியப் பெருமுதலாளிகளின் கட்டுப்பாட்டில் உலகத்தைக் கொண்டு வர திருச்சபைகளின் கியூபச் சந்திப்பு வழிவகுக்குமா ?

கருத்துக்களுக்கு - facebook.com/orupaper @orupaper

**கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?**

**தனிநபரோ... வியாபாரமோ...**

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

BBK PARTNERSHIP

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்

R3

THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS IN ENGLAND AND WALES

www.bbkca.com
Email: admin@bbkca.com



Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Bookkeeping

BARNET-LONDON 020 8216 2520 MR. ANANDAN
CROYDON 020 8150 9950 MR. SIVA RANJAN
CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN

SOUTHGATE : KANDEEPAN
2A, ASHFIELD PARADE
SOUTHGATE, N14 5EJ.
0208 886 9589 | southgate@bbkca.com

# Sri Lanka: Looking for a deal, not truth and justice



By Frances Harrison

Sri Lanka's fledging transitional justice process is in trouble already. It's getting impossible to paper over embarrassing public differences between the country's President and its Prime Minister on the issue of war crimes. Sceptics of course say neither man really acknowledges the gravity and scale of the atrocities committed.

The most immediate crisis is over interviews the President gave to the BBC and Al Jazeera in which he rolled back on the country's commitments in Geneva regarding international involvement in a special court yet to be set up. Tamil victims don't have faith in a process that's purely domestic - it's not a question of ability and professionalism - but one of trust, given many of the alleged war criminals are still in positions of power.

Worse still, the President now says there were no war crimes, perhaps just a few human rights violations by the odd rotten apple in the military. No matter that a UN investigation has been very clear the violations were systematic and widespread and could result in convictions for war crimes and crimes against humanity when tested in a court. But perhaps not in the court currently envisaged for Sri Lanka.

The best people in the new Government seem to be looking for a compromise between the victims and the perpetrators, without really knowing what that looks like. They are not seeking truth or justice. They are seeking a deal. Deep rooted reform - that would benefit Sinhalese as well as Tamils - is not on the agenda.

Singing the national anthem in Tamil at Independence Day may seem a huge step forward in Colombo, but what does that mean to someone who's been kept naked and dirty in the tiny dark torture cells of Joseph Camp for months on end listening to others screaming while not being raped and tortured themselves?

For the Tamil victims abroad none of this is any surprise but it is still another disappointment to add to the stockpile amassed over thirty years. A new report by Freedom From Torture gathers the views of 8 Tamil torture survivors in London about what justice for them would look like.

What's striking is how connected they are to Sri Lanka and concerned about people worse off than them back home. The compassion, the commitment to making the world a better place and the strength they exhibit are remarkable from people who have been subjected to horrific acts aimed at systematically destroying them as individuals. But they're survivors, brave and resilient enough to be able to speak out at all in a closed, anonymous group. A shining example of what expert care, a secure environment and time can do to heal at least some of the wounds. Not everyone has reached this point on the journey of recovery.

There's the young mother in the UK who is still dangerously suicidal six years after she was gang raped by the security forces. Her only crime is she tried to help people in the IDP camps pass messages out to their families. She is the victim of a past violation. But it's not past for her. It's present every single day.

Or the boy in Scotland who tried to kill himself last week before anyone could find out the details of what he endured in late 2015 that made him flee. There's the Tamil accountant who was so traumatised by being raped with a coca cola bottle in detention that he slept rough in London until the police picked him up. All these people only wanted to help other Tamils and now they desperately need help themselves.

Or the mother and toddler who were kept naked together in a dark room in 2009. For weeks she was sexually abused in front of him and she still had to try and breastfeed him as he was starving from the war. Every time the phone rings she thinks it's someone with information about her husband who's disappeared after surrendering.

These survivors have to swallow the fact that they will likely never receive truth or justice. The past haunts them every single day but their suffering is rapidly being buried in the public memory – another stinking layer of the compost of Sri Lanka's past. It's not only the President who denies all this ever happened.

Singing the national anthem in Tamil at Independence Day may seem a huge step forward in Colombo, but what does that mean to someone who's been kept naked and dirty in the tiny dark torture cells of Joseph Camp for months on end listening to others screaming while not being raped and tortured themselves?

For the survivors, transitional justice is not about deal making. They have agonising questions about those they love - did they die frightened and in pain or are they still alive somewhere? It sounds improbable so many years later but there is a Tamil woman whose husband turned up last year, living in the same country in Europe but having lost all contact while they were both in detention. He saw her on TV. It might be called a happy ending if they hadn't both been tortured.

Worse still, the President now says there were no war crimes, perhaps just a few human rights violations by the odd rotten apple in the military. No matter that a UN investigation has been very clear the violations were systematic and widespread and could result in convictions for war crimes and crimes against humanity when tested in a court. But perhaps not in the court currently envisaged for Sri Lanka.

Women have to live, hiding from their children the fact that they were brutalised and raped by countless men. Keeping a traumatic secret like that from those you're close to is not easy. It's not something reparations will erase or a bit of devolution of power will fix. The architects of the future Sri Lanka don't spend time with these victims and that's perhaps why they are able to regard the process as a series of political trade offs. Aided of course by healthy doses of denial.

*Courtesy: www.jdslanka.org*

# The morning..

*(continued from page 5)*

..The uncomfortable reality that has emerged given the developments of the last few years is that the task before any leader is to prevent the dangers (i.e. harm for minorities) by swift and forceful action, while continuing to engage with them, and at times seeking to exploit them to further one's political agendas. With the incidents in Homagama, a mix of these different approaches will ensue. This is also because of the likelihood that the problems of the BBS will also become the problems of the Sangha, with the problems of the Sangha now being the problems affecting the Sinhala-Buddhists too.

## Conclusion

In 2015, President Sirisena appeared to be an illusive, enigmatic, character. He was often viewed as a leader who, elected by the people (and with considerable foreign assistance – something that the majority polity is aware of), was politically closer to the projects of the West and civil society groups. The political context demanded that he either played such a role or allowed himself to be interpreted as being such a leader. The politics of 2016 is set to be different. Striking a more nationalistic tone, President Sirisena will find himself having to manage competing values and interests of different and more disgruntled political forces, while also trying to learn from the prominent mistakes his predecessor made; a difficult task, since mistakes often begin to appear differently with the passage of time.

But with the return of a re-energized Mahinda Rajapaksa (given the developments during the past week), President Sirisena would be compelled to take maximum use of the authoritarian tendencies of his Prime Minister, the commitment of the likes of Minister Champika Ranawaka, and most importantly, the involvement in active politics of the establishment's final trump card: Field Marshal Sarath Fonseka. If the lesson was not clear for the new leadership, it appears to be clear now: to defeat the Rajapaksas, it will have to be like the Rajapaksas in certain ways. Yet, the problems don't end there. In having to be like the Rajapaksas, the new leadership will now need to be more open to the vagaries of life.

*Courtesy: groundviews.org*

Mass Global Shipping
Reliable, Dependable and honourable







Special Offer
Freight
+
Wooden Box
£65.00




உங்கள் பொருட்களை ஆகாய தரை கடல் மார்க்கமாக பாதுகாப்பாகவும் துரிதமாகவும் குறைந்த செலவிலும் அனுப்புவதற்கு நம்பிக்கையுடன் நாட வேண்டிய ஒரே நிறுவனம்.

CITY WAREHOUSE
Located at BIG YELLOW STORAGE, Wandsworth
Mass Global Shipping – 100 Garratt Lane, London SE18 4DJ
T: 020 8864 4244 M: 07940108177

Special Offer
Within London Collection
£10/-*
* Within London Postcode Only
Door 2 Door Island-wide
within Colombo £40*
* T carton

VEHICLES SHIPMENT
From £725 all inclusive*
Conditions Apply
No Hidden Charges
No 3rd Party Agents
Fully Gated Yard Facility 24X7 CCTV Monitoring

No. 58, THE ARCHES, HARROW, HA2 8AA
Tel : 0208 422 1232, 0208 864 4244
Opening Times - Monday to Friday 9am – 6pm | Saturday 9am-6pm
E-Mail: info@massshipping.com Web : www.massshipping.com
4 Collection Points :
Harrow, Watford, Knightsbridge, Croydon

# 'The Sri Lankan Government with no option but to turn to the IMF'

The Sri Lankan government has asked the International Monetary Fund (IMF) for a bail out facility to resolve the current balance of payments crisis. A loan facility is urgently needed owing to the critical state of the balance of payments. This crisis in the external finances has been brought about by the mismanagement of the economy over several years.

## Previous requests

In similar situations in the past, governments resorted to a rescue package from the IMF. In 1977 the government obtained a Structural Adjustment Facility (SAF) to undertake trade liberalisation and economic reforms. In July 2009 the IMF approved a 20-month Stand-By Arrangement (SBA) of approximately US$ 2.6 billion, as a Balance of Payments (BOP) support.

## Macroeconomic weaknesses

Once again the severe difficulties in external finances have made the government request the IMF for a loan facility to resolve the critical balance of payments situation. This situation arose owing to fundamental macroeconomic weaknesses: high fiscal deficits, large foreign debt, and widening of the trade and balance of payments deficits. Recent capital outflows that accentuated the balance of payments problem were due to these weaknesses as well as international factors.

## IMF facility

The current request for an IMF facility is absolutely necessary at this critical point in the external finances. The government is sensible in turning to the IMF rather than depend on higher cost commercial borrowing. There is a high probability that a facility would be given after the IMF processes the request and obtains approval of the IMF Board.Without such a loan the economy would be in a severe crisis. The economic instability caused by the balance of payments difficulties would impose severe hardships and disable an economic recovery.

## Advantages

Had we resolved the crisis by international borrowing from commercial sources, the cost of borrowing would have been much higher and the repayment period much shorter. This would have meant that debt servicing, that is already a severe strain on the balance of payments, would be more onerous.

The IMF loan that is likely to be given in several instalments would support the balance of payments and boost the depleted reserves. The international confidence that it creates would stabilise the exchange rate, encourage more capital inflows and foreign investment into the country.

## Conditions

The government must take the fiscal, trade and balance of payments problems seriously and implement remedial polices. The IMF should impose conditions that would lessen the complacency of the government in fiscal management and compel it to take adequate measures to reduce the high fiscal deficit and trade imbalance.

The IMF itself has had a complicity in the government's complacency in fiscal policy in the past. The advice on fiscal policy has not been backed up by severe admonitions or withdrawals of later tranches of loans. IMF advice has been polite and diplomatic rather than stern and serious. IMF evaluations of the economy should be more forthright and ensure fiscal discipline in particular.

## IMF assessment

In its latest statement, the IMF pointed out the serious weaknesses of the economy. It stated that "the government fiscal deficit for 2015 is estimated to have exceeded the original budget target. Based on the budget framework for 2016, IMF staff estimates suggest the fiscal deficit could widen further. Meanwhile, Sri Lanka's public debt has risen to over 74 per cent of GDP by end-2015. Despite the narrowing of the current account, capital outflows have intensified and the overall balance of payments (has) deteriorated. These outflows were accompanied by downward pressure on the rupee and a decline in central bank gross foreign exchange reserves mainly due to short-term capital outflows as experienced in many emerging markets."

These are serious flaws in the country's economic policies and performance that are not indicative of a "positive economic performance".

## Fiscal weakness

The underlying cause of economic problems is the fiscal weakness. The IMF has stressed this: "The mission has advised the government to urgently make a stronger effort to narrow the fiscal deficit and put the public finances on a sustainable path. While several measures in the budget (such as elimination of several special purpose levies, and the commitment to eliminate tax exemptions and bolster the efficiency of tax administration) are welcome, the mission highlighted the macroeconomic and financial risks of a large deficit and the associated need to borrow from domestic and international markets."

## Fiscal crisis

The government has not been disciplined in its fiscal policy to reduce the fiscal deficit. The amendments made to budget 2016 has forced the Treasury to introduce adjustments towards bridging the higher deficit by cutting down capital expenditure to cushion the impact of the amendments made to several revenue and expenditure proposals.

The revenue estimates in the 2016 budget were unrealistic. There was no way by which the targeted 40 per cent increase in revenue envisaged in the budget could have been realized. The subsequent amendments to revenue proposals made the revenue target even more unlikely. The Finance Minister himself admitted in parliament that the amendments made to the budget increased government expenditure by Rs.35.5 billion.

## Less revenue

Instead of increasing income tax to generate more revenue to meet the increasing expenditure, the budget reduced taxes from both individuals and companies. There were other measures too that would bring down revenue. Due to these revenue shortfalls are likely. Since expenditure overruns are inevitable, the fiscal deficit is likely to increase much above 6 per cent of GDP, unless new revenue measures are introduced to increase revenue.

## Conclusion

The serious balance of payments crisis left the government with no option but to turn to the IMF. It must use the new breathing space to correct the fiscal imbalance and reduce the pressures on the balance of payments. The IMF facility is yet another opportunity for economic reforms and realistic policies. Will the government take stern measures to reduce the fiscal deficit?

*Courtesy:Sunday Times (Sri Lanka)*


THE MORTGAGE ORGANISATION

AUTHORISED BY THE FINANCIAL CONDUCT AUTHORITY

RESIDENTIAL & COMMERCIAL MORTGAGES

Contact:

**David Eva**
OR
**Ernest Sri**

258- High Street North
Manor Park, London E12 6SB

Tel: **020 8475 0755**
Fax: **020 8470 4755**
Mob: **07803 600 543**

Commercial Loans

- Petrol Stations, Social Clubs
- Hotels, Restaurants &
- Takeaways
- Convenience Shops
- Pharmacies, Care Homes,
- Optician, Dentist
- Children Nurseries

Residential Mortgages

- Re-Mortgages
- Buy to Let
- Bridging Loans
- Right to Buy
- Help to Buy



Loans can be arranged for leasehold and freehold businesses

Arrangements are made to meet senior business manager from leading banks in our premisesTHE MORTGAGE ORGANISATION

How will a 'YES' make you feel ?

YOUR HOME MAY BE REPOSSESSED IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON YOUR MORTGAGE

# THE JACKAL AND THE DRUM

Once upon a time, in a jungle there lived a jackal by the name of Gomaya. One day, he was very hungry and was wandering in search of food. While wandering, he came across a battle field. There he saw a big drum lying under a tree.

When the wind blew, a tender branch grown at the root of the tree struck the drum producing sound of a drum beat. The jackal examined the drum from all sides and then beat the drum with his front paws. The drum made a sound.

Now the jackal thought that there might be some other small animal inside the drum and that would make a very tasty meal for him. But he found the top of the drum too tough to tear off.

The jackal thought of a plan and began to beat the drum with both his front paws.The sound of drumbeat filled the whole jungle. A




leopard who was attracted towards the sound of the drum, came near it. The jackal said to the leopard, "Your Majesty, there is some animal hiding inside the drum.

Since you have sharp claws and strong teeth, you can tear off the top of the drum and catch your prey inside the drum. The leopard was himself hungry So he hit the top of the drum with his heavy paws. The drum burst with a sound, but there was no animal inside. The drum was empty.

Seeing the empty drum, the leopard became very angry and said to the jackal, "You have wasted my time. There is no food inside the drum. So I will kill and eat you."

The leopard pounced upon the jackal and killed and ate him.

## Spot the Difference



# Egg



**The eggs are one of the most complete and versatile foods available. A whole egg contains all the nutrients required to turn a single cell into a baby chicken.**

**They contain every vitamin, particularly high in vitamins A, D and B12. The only vitamin absent in eggs is C.**

**They are a good source of iron and phosphorus and also supply calcium, copper, iodine, magnesium, manganese, potassium, sodium, zinc, chloride and sulphur. All these minerals are present as organic chelates, highly bioavailable, in the edible part of the egg.**

**HDL stands for High Density Lipoprotein which is known as the good cholesterol. People who have higher levels of HDL usually have a lower risk of heart disease, stroke and various health problems. Eating egg is a great way to increase HDL.**

## Colouring - 260




## Last Issue (259) Colouring Kids




Ubasana

## Kids' Endless Questions

### Q: How do airplanes stay up? ??

**A:** To overcome the forces of drag and gravity, an airplane must generate two forces of its own: thrust and lift.

Thrust is the force that propels an airplane forward on the runway. By Newton's third law every action has an equal and opposite reaction the plane's engine generates forward thrust by spewing fuel backwards. Next, as the plane hurtles down the runway, each of its wings slices the air into two streams, one that flows above it and the other, below. The wings are shaped in such a way that the air flowing over them is ultimately deflected downward, and, again because of Newton's third law, the downward motion of the air causes an equal and opposite upward motion of the plane. This is lift.



Every airplane has a specific takeoff speed the point at which lift overcomes gravity. That critical speed changes based on how much a particular plane weighs. The plane's engine, meanwhile, has to work to provide enough thrust to overcome drag friction with the air

ஸ்ரீ:


பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம்

THE FEDERATION OF SAIVA (HINDU) TEMPLES U.K

2-4 Bedford Road, Walthamstow, London E17 4PX

Contact: 0208 527 3819 | 07956 919 511


# 17வது 17th SAIVA CONFERENCE

# நடராஜ தத்துவமும் திருமந்திரமும்

பிரித்தானிய சைவத்திருக்கோயில் ஒன்றியம்

இவ்வருடம் 2016 ஏப்ரல் 30ம் மே 01ம் திகதிகளில் நடத்தவிருக்கும்

மாபெரும் சைவ மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகிறோம்.



*Chief Guest* • Hon. **Sri Sivagnana Balaya Swamigal**

## *Guests*

- Hon. **Gareth Thomas** MP, *Harrow West.*
- Hon. **Virendra Sharma** MP, *Ealing South.*

## *Guest Speakers*



- Kavignar A **Arivoli**



- Dr. **Kandiah Shriganeshan**
  *Staff and Educational Development Association (SEDA).*



- Kalaimaamani
  **Smt . Desa Mangaiyarkarasi**



- Hon. **S. Shritharan** MP



## *Devotional Songs*

- Kalaimamani **P. Unnikrishnan**

**Saturday 30th April 2016**
**@ 9.00am to 8.00pm**
Loxford School Trust
Loxford Lane
Ilford, Essex IG1 2UT.

**Sunday 1st May 2016**
**@9.00am to 8.00pm**
**Highgatehill Murugan Temple**
200A Archway Rd
London N6 5BA

# பிரித்தானிய சைவத் திருக்கோயில் ஒன்றியம்

# The Federation of Saiva (Hindu) Temples UK


200A Archway Road, London N6 5BA

Tel: 020 8348 9835 | Fax: 020 8482 6508

WEB : www.saivafedaration-uk.org  Email: saivamahanadu@saivafedaration-uk.org

Correspondence: 2-4 Bedford Road, Walthamstaw, London E17 4PX


## பிரித்தானிய சைவத் திருக்கோவில்கள் ஒன்றியம் 2016 ஆண்டில் நடாத்தும்

- திருமுறை ஓதல் போட்டி
- தமிழ் பேச்சு போட்டி
- ஆங்கிலப் பேச்சு போட்டி
- சைவ வினாவிடை போட்டி
- சமய நாடகப் போட்டி (குழு)

**விண்ணப்ப முடிவு திகதி**
**11-03-2016**

எல்லாம் வல்ல இறைவன் திருவருளாலே பிரித்தானியா வாழ் சைவ மக்களிடையே சைவ சமய அறிவையும் புலமையையும் ஊக்குவிக்கும் பொருட்டு பிரித்தானிய சைவ திருக்கோவில்கள் ஒன்றியம் 17 வது ஆண்டாக மேற்படி போட்டிகள் நடாத்த உள்ளது. அதற்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.

### போட்டிகளுக்கான விண்ணப்ப படிவம் - 2016

திருமுறை ஓதுதல் ☐ தமிழ்ப் பேச்சு ☐ ஆங்கிலப் பேச்சு ☐

சமய நாடகம் ☐ சைவ வினாவிடை ☐

(பங்குபற்ற விரும்பும் போட்டிகளின் அருகில் புள்ளடி இடவும்)

பெயர் (Name): ........................................................................

........................................................................

(Write clearly in English)

முகவரி (Address): ........................................................................

........................................................................

Post Code: ........................................................................

Telephone:........................................................................

பிறந்த திகதி: (Date of Birth)........................................................................

(Copy of Birth certificate to be enclosed)

வயது பிரிவு:( As at 01-03-2016)........................................................................

Email address: ........................................................................

முதல் நிலை போட்டி செய்ய விரும்பும் கோயில்:

........................................................................

(லண்டனுக்கு வெளியே வதிபவர்களுக்கு மட்டும்)

போட்டியாளரின் அல்லது போட்டியாளரின் பெற்றோரின்

கையொப்பம்........................................................................

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய விலாசம்:

Application to be posted to: **Mr. S. Pathmamohan,**
**Saiva Temples Federation Competition 2016**
Croydon Metropolitian College
30-32, Southend, Croydon, Surrey, CR01DN

### பிரித்தானிய சைவத் திருக்கோவில்கள் ஒன்றியம் 2016 ஆண்டில் நடாத்தும் போட்டிகளுக்கான விதிமுறைகள்

1) பிரித்தானியாவில் வாழும் சைவ சமயத்தவர்கள் எவரும் பங்குபற்றலாம.;

2) திருமுறை ஓதல் போட்டி, தமிழ்/ஆங்கிலப் பேச்சுப் போட்டி, சைவ வினாவிடை போட்டிகளுக்கான வயது எல்லை: (i) 5 வயதுக்குட்பட்டோர், (ii) 5 – 7 வயது, (iii) 8 – 10 வயது, (iv) 11 – 13 வயது, (v) 14 – 17 வயது, (vi) 18 – 25 வயது.

3) ஒன்றியத்தினால் தரப்பட்ட தேவார புராணம், பேச்சுக்கள் மட்டுமே போட்டியில் பயன்படுத்தப்பட வேண்டும் (தேவார புராணம், பேச்சுக்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது)

4) திருமுறை ஓதுதல் போட்டியில் பங்குபற்றுபவர்கள் ஆலயத்தில் நின்று இறைவனை வழிபடுவது போன்று செயல்பட வேண்டும். (சுருதிப்பெட்டியையும் தாளத்தையும் பாவிக்கலாம்).

5) சமய நாடகப் போட்டிகளுக்கான வயது எல்லை:
(i) 17 வயதுக்குட்பட்டோர் (ii) 18–30 வயதுக்குப்பட்டோர்

6) சமய நாடகம் இவ்வருட ஒன்றியத்தின் இலக்கான பெரியபுராணக் கதையை ஒட்டியதாகவும் 20 நிமிடங்களுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும். (குழுத்தலைவர் மாத்திரம் விண்ணப்பித்தால் போதும்.)

7) போட்டிக்கான கட்டணம் இலவசம்
(போட்டிக்கான செலவுகள் ஒன்றியத்தினால் வழங்கப்பட மாட்டாது)

8) போட்டிகள் முதல்நிலை பிரதேச ரீதியில் பின்வரும் கோவில்களில் **20-03-2016** ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

வடக்கு, மேற்கு லண்டன் Harrow ஐயப்பன் கோவில், உயர்வாசற்குன்று முருகன் கோவில்
கிழக்கு லண்டன் Manor Park சைவ முன்னேற்றச் சங்கம்
தென் மேற்கு லண்டன் Stoneleigh அம்மன் கோவில்
தென் கிழக்கு லண்டன் Lewisham சிவன் கோவில்

லண்டனுக்கு வெளியில் வதிபவர்கள் மேற்குறிப்பிட்ட ஏதாவது கோவில்களில் பங்குபற்றலாம்

9) இறுதி நிலைப் போட்டி Archway முருகன் கோவிலில் 10–04–2016 ஞாயிற்றுக்கிழமை இல் நடைபெறும்.

10) ஒன்றியத்தினால் வழங்கப்பட்ட விணண்ப்பப்படிவம் மூலம் பங்குபற்றலாம் முடிவு திகதி 11–03–2016.

11) ஒவ்வொரு நடுவர் குழுவிலும் மூன்று நடுவர்கள் அங்கம் வகிப்பார்கள். இவர்கள் பங்குபற்றும் பிள்ளைகளின் உறவினர்களாக இருக்கமாட்டார்கள்.

12) நடுவர்களின் தீர்ப்பே போட்டியின் இறுதி முடிவாகும்.

13) போட்டியில் முதலாவதாக வருபவர்கள் 30.04.2016, 01.05.2016 நடைபெறும் 17வது சைவமாநாட்டில் பங்குபற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

Note: Tamil, English Speeches could be obtained from the affiliated temples to the Federation or visit www.katpakapathy.com , www.ghanapathy.co.uk

திரு.க.வி.கணேசமூர்த்தி செயலாளர் | திரு.மு.கோபாலகிருஷ்ணன் தலைவர் | திரு.க.நாகராசா பொருளாளர்

**போட்டிக்கான பிரிவுகளும் அவற்றுக்கான விபரங்களும்**

| பிரிவு | வயது எல்லை | பிறந்த திகதி எல்லை | திருமுறைகள் | தமிழ் பேச்சு தலைப்புகள் | English Speech Topics |
|---|---|---|---|---|---|
| 1 | 5 வயதுக்குட்பட்டோர் | 01.09.2011 இற்குப் பின்னர் | தேவாரம் | என்தாய் | Sivaism |
| 2 | 5–7 வயது | 01.09.2007 தொடக்கம் 31.08.2009 வரை | தேவாரம், புராணம் | ஆலயங்களின் அவசியம் | Maha Shivarathri |
| 3 | 8–10 வயது | 01.09.2004 தொடக்கம் 31.08.2007 வரை | தேவாரம், புராணம், வாழ்த்து | சைவசமயம் | My Favourite Samaya Kuruvar |
| 4 | 11–13 வயது | 01.09.2001 தொடக்கம் 31.08.2004 வரை | பஞ்சபுராணம், வாழ்த்து | நான் விரும்பும் சமயக்குரவர் திருநாவுக்கரசநாயனார் | Manigavasakar Suwamy |
| 5 | 14–17 வயது | 01.09.1997 தொடக்கம் 31.08.2001 வரை | பஞ்சபுராணம், திருப்புகழ் வாழ்த்து | ஔவையார் | Savasim in the west |
| 6 | 18–25 வயது | 01.09.1989 தொடக்கம் 31.08.1997 வரை | பஞ்சபுராணம், திருப்புகழ் வாழ்த்து | சிவராத்திரியின் சிறப்பு | Thirumular Nayanaar |

Copy of application form could be obtained from the affiliated temples to the Federation or visit www.katpakapathy.com , www.ghanapathy.co.uk

# ஈர்ப்பு அலைகள்



ஜே.கே

கடந்த சில நாட்களாக மொத்த உலகமும் பரபரக்கின்ற விடயம் இது. நூறு வருடங்களுக்கு முன்னாலே ஐன்ஸ்டீனால் உய்த்தறியப்பட்டிருந்த ஈர்ப்பு அலைகளை இப்போது அதிநவீன கருவிகள் மூலம் அவதானிக்க முடிந்திருக்கிறது. நாம் எல்லோருமே ஈர்ப்பு சக்தியைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். அதென்ன ஈர்ப்பு அலைகள் வெண்முரசு நீளத்துக்குப் பாகம் பாகமாக விவரிக்கவேண்டியதை அம்புலிமாமா சைசுக்குள் சுருங்கச்சொல்ல முயல்கிறேன்.

ஈர்ப்பு அலைகளை விளக்குவதற்குமுன்னாலே சார்பு விதிகளைப்பற்றி மேலோட்டமாகப் பார்க்கவேண்டும்.

நீங்கள் 100km/h வேகத்தில் செல்லும் ஒரு ரயில் வண்டியினுள்ளே அமர்ந்திருக்கிறீர்கள். உங்களுக்கு முன்னே உசைன் போல்ட் உட்கார்ந்திருக்கிறார். ரயில் நூறு கிலோமீட்டர் வேகத்தில் சென்றாலும் ரயிலுக்குள்ளே உட்கார்ந்திருக்கும் உங்களுக்கு ரயில் கண்ணாடிகளை மூடிவிட்டால் அதனை உணர்வது கடினம். முன்னே உட்கார்ந்திருக்கும் உசைன் போல்ட் 100km/h வேகத்திலே பயணம் செய்வது போலவும் உங்களுக்குத் தோன்றாது. ஏனெனில் நீங்கள் இருவருமே ரயிலுக்குள் இருப்பவர்கள். ரயிலின் சட்டத்தில் நீங்கள் இருவரும் நிலையாக இருக்கிறீர்கள். சீரான வேகத்தில் இயங்கும் ஒரு சட்டத்தில் (inertial systems) உள்ள பொருட்கள் எல்லாவற்றுக்கும் பௌதீகவிதிகள் ஒன்றாகவே இருக்கும். மாறாது. இப்போது திடீரென்று பயிற்சி செய்கிறேன் என்று சொல்லிக்கொண்டு உசைன் போல்ட் ரயிலுக்குள்ளேயே எழுந்து ஓடத்தொடங்குகிறார். அப்படி அவர் ஓடும் வேகம் 50km/h என்று வைப்போம். ரயிலுக்குள் இருக்கும் உங்களுக்கு அவர் ஓடுவது 50km/h வேகமாகவே தெரியும். அதே சமயம் ரயிலுக்கு வெளியே நின்று உசைன் ஓடுவதைப் பார்ப்பவருக்கு உசைனின் வேகம் வேகம் ரயிலின் வேகத்தையும் சேர்த்த 150km/h ஆகத் தெரியும்.

இது நியூட்டன் விதித்த சார்பு விதி. இதனை நியூட்டனுக்கு முன்னமேயே கலிலியோ சொல்லிவிட்டார். கலிலியோவுக்கு முன்னரேயே உலகின் ஏதாவது மூலையிலிருந்த சியாங்யுங்கோ சுப்பையாவோகூட இதனைச் சொல்லியிருக்கலாம். ஏனெனில் இதனைப் பொதுப்புத்தியாலேயே அனுபவத்தின்மூலம் கண்டறியலாம். இந்த விதி அவ்வளவு சிக்கல் இல்லாதது.

ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்த விதிக்கு ஆப்பு காத்திருந்தது. நியூட்டனின் சார்புவிதி எல்லா இயக்கங்களுக்கும் பொருந்தியது. எல்லா சட்டங்களுக்கும் பொருந்தியது. ஒன்றைத்தவிர. அதுதான் ஒளி.

நீங்கள் பயணம் செய்கின்ற ரயில் திடீரென்று அதிவேகமாக 250,000km/h வேகத்தில் செல்ல ஆரம்பிக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். இப்போது ரயிலுக்கு வெளியிலிருந்து பார்ப்பவருக்கு ரயில் 250,000km/h வேகத்தில் செல்வது போலவே தோன்றும். சிக்கல் இல்லை. ரயிலுக்குள்ளே உட்கார்ந்திருக்கும்போது நீங்களும் உசைன் போல்டும் ரயிலின் சட்டத்தில் அசையாமலேயே இருப்பீர்கள். அதுவும் சிக்கல் இல்லை. ஆனால் திடீரென்று உசைன் போல்ட் ஒளியாகமாறி ஒளியின் வேகத்தில் ரயிலுக்குள்ளேயே ஓடத்தொடங்குகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒளியின் வேகம் கிட்டத்தட்ட 300,000km/h. அப்போதுதான் இடியப்பச்சிக்கல் ஆரம்பிக்கிறது. ரயிலுக்குள் இருக்கும் உங்களுக்கு உசைன் போல்ட் 300,000km/h வேகத்தில் செல்வதாகவே தெரியும். ரயிலுக்கு வெளியே நின்று பார்ப்பவருக்கு உசைன் போல்ட் ரயிலின் வேகத்தையும் சேர்த்து 550,000 km/h வேகத்தில் ஓடுவதுபோலத் தெரியவேண்டும் அல்லவா ? ஆனால் வெளியின் நிற்பவருக்கும் உசைன்போல்ட் 300,000km/h வேகத்தில் ஓடுவதாகவே தெரிவார். ரயிலுக்கு வெளியே இன்னொருவர் காரிலே எந்த வேகத்தில் போனாலும் அவருக்கும் உசைன் போல்ட் 300,000km/h வேகத்தில் ஓடுவதாகவே தெரிவார். ஒளியின் வேகமான 300,000 km/h எந்தச் சட்டத்திலும் மாறவில்லை. ஒளியின் வேகம் நியூட்டனின் சார்புவிதிக்குள்ளே அகப்படவில்லை.

விஞ்ஞானிகள் குழம்பிப்போனார்கள். அதெப்படி எந்தச்சட்டத்திலும் ஒளியின் வேகம் ஒன்றாகவே இருக்கிறது ? ஒரு சமாளிபிகேஷனாக மக்ஸ்வெல் என்றவர் ஒளி ஒரேயொரு சட்டத்தில்தான் பயணம் செய்யும். அந்தச்சட்டத்தில் அதன் வேகம் மாறாது என்று உல்டா விட்டு அந்த உல்டாவுக்கு ஈதர் என்று ஒரு பெயரும் வைத்தார். மொத்த உலகமுமே ஈதர் என்று ஒரு ஊடகம் வெற்றிடத்தில் இருப்பதாக நம்பிக்கொண்டது. ஆனால் இல்லாத ஈதரை இருக்கென்று அழிச்சாட்டியம் பண்ணும்போது சிக்கல்கள் இன்னமும் பெரிதாகியதே ஒழிய தீர்ந்தபாடில்லை. எல்லா பரிசோதனைகளும் தோல்வியடைந்தன. ஒளியின் வேகத்தில் இயங்கும் சட்டங்களில் சார்புவிதிகளில் குழப்பங்கள் வந்து தொலைத்தன. நேரக்கணிப்புகளும், தூரக் கணிப்புகளும் மக்கர் பண்ணின. மண்டையைப் பிய்த்துக்கொண்டார்கள்.

அப்போதுதான் ‘மன்னவன் வந்தானடி’!

ஈதர் எல்லாம் தேவையில்லை. எந்தச்சட்டத்திலும் ஒளியின் வேகம் மாறாதது என்று ஐன்ஸ்டீன் சொன்னார். அதேசமயம் எந்தச் சட்டத்திலும் எது மாறாதது என்று நாங்கள் முன்னர் நினைத்தோமோ அது மாறுகிறது என்று சொன்னார். அதுநாள் வரைக்கும் காலம் என்பது சீராக நகரும் ஒன்று என்று எல்லோரும் நம்பிக்கொண்டிருந்தார்கள். எட்டு மணி பத்து நிமிடத்துக்கும் எட்டு மணி பதினொரு நிமிடத்துக்குமிடையில் கால இடைவெளி ஒரு நிமிடம்தான். அறுபது செக்கன்கள்தான். இது எந்தச்சட்டத்திலும் யாருக்கும் மாறாதது என்றே எல்லோரும் நினைத்து வந்தார்கள். அது சாதாரண வேகத்தில் இயங்கும் ரயிலுக்கோ அல்லது பூமிக்கோ உண்மைதான். ஆனால் ஒளியின் வேகத்தை நெருங்க நெருங்க காலம் ‘மெதுவாக’ நகர்கிறது என்பதை ஐன்ஸ்டீன் உய்த்தறிந்தார்.

மேலே சொன்ன 250,000மஅ்ஃள வேகத்தில் பயணம் செய்யும் ரயில் உதாரணத்தையே எடுத்துக்கொள்ளுங்கள். உள்ளே உசைன் ஒளியாக மாறி ஓடிக்கொண்டிருக்கிறார். உள்ளே இருக்கும் உங்களுக்கும் வெளியே நிற்கும் இன்னொருவருக்கும் ஒளியின் வேகம் ஒன்றாகவே இருக்கிறது. அதெப்படி சாத்தியமாகலாம்? உள்ளே இருக்கும், அதாவது ஒரு செக்கனுக்கு 250,000 கிலோமீட்டர் வேகத்தில் பயணம் செய்யும் உங்களுக்கும் ஒளி ஒரு செக்கனுக்கு 300,000 கிலோமீட்டர்கள் பயணம் செய்வது போலவே தெரிகிறது. வெளியே பூமியின் அசையாமல் நிற்பவருக்கும் ஒளி ஒரு செக்கனுக்கு 300,000 கிலோமீட்டர்கள் பயணம் செய்வது போலவே தோன்றுகிறது. ஆனால் ரயிலின் சட்டத்தைவிட பூமியின் சட்டத்தில் ஒளி அதே ஒரே செக்கனில் அதிகமான தூரத்தைக் கடக்கவேண்டும் அல்லவா. வேறு வேறு சட்டங்களில் தூரங்கள் வேறாக இருக்கின்றன. வேகம் மாறவில்லை. அப்படி என்றால் நேரம் மாறவேண்டும்! ‘ஒரு செக்கன்’ இடைவெளி என்பது ரயிலின் உள்ளே இருப்பவருக்கும் வெளியே இருப்பவருக்கும் ஒரேமாதிரியாக இருக்க சாத்தியமேயில்லை. வெளியே இருப்பவரின் சட்டத்தில் ரயிலுக்குள்ளே காலம் மெதுவாக இயங்குகிறது. உதாரணத்துக்கு ஓடும் ரயிலுக்குள்ளே எட்டுமணி பத்து நிமிடத்திலிருந்து எட்டு மணி பதினொரு நிமிடத்துக்கு மணிக்கூட்டு முள்ளுக்கம்பி செல்வதற்கு வருடங்கள் பிடிக்கலாம். உதாரணத்துக்கு காலையில் அப்படியான அதிகதி ரயிலில் பிரயாணம் செய்பவர் மாலையில் திரும்பும்போது வீட்டிலேயே பல தலைமுறைகள் கழிந்துபோய் அவரின் படம் முன்னோர்கள் லிஸ்டில் சேர்க்கப்பட்டிருக்கும். ஆனால் பயணம் செய்பவர் அதனை உணர்ந்திருக்கமாட்டார். ஒளியின் வேகத்தை நெருங்க நெருங்க காலம் மிக மிக மெதுவாக நகர்ந்து ஒளியின் வேகத்தில் பயணிப்பவருக்கு காலம் நகராமல் அப்படியே ஸ்தம்பித்துவிடுகிறது. அதாவது ஒருவர் ஒளிக்கதிரில் தொங்கிக்கொண்டு பயணம் செய்தால் அவருக்கு வயதே ஏறாது. (அதே சமயம் அவரின் திணிவு மிகவும் ஒடுங்கி காணாமல் போய்விடுவார் என்பது வேறு). இப்படி ஒளியின் வேகத்தில் காலம் ஸ்தம்பித்துவிடுவதால் அதற்குமேலே அதன் சட்டத்தில் வேகம் என்பதே இருக்காது. இப்படிப் பல காரணங்களால் பிரபஞ்ச அமைப்பில் ஒளியின் வேகத்திலும் அதிகமான ஒன்று இருக்கவே முடியாது.

காலம் என்பது சீரானது, எங்கேயும் ஒரு செக்கன் ஒரு செக்கன்தான், கால இடைவெளிகள் ஒருபோதும் மாறாதவை என்று உலகம் இத்தனைகாலமும் முடிந்தமுடிபாக நினைத்திருந்ததை உடைத்தெறிந்தார் ஐன்ஸ்டீன். அது ஐன்ஸ்டீனின் முதல் விதியான ‘விசேட சார்பு விதி’ The special theory of relativity. இதை ஐன்ஸ்டீன் அறிவித்தது 1905ம் ஆண்டு.

ஆனால் சார்புவிதி சும்மா ட்ரையிலர்தான். மெயின் பிக்சர் பத்து வருடங்கள் கழித்து வெளிவந்தது. அதுதான் ‘பொதுச்சார்பு விதி’. General theory of relativity. ஐன்ஸ்டீனை மனித குலத்தின் அதிபுத்திசாலி விஞ்ஞானி என்கின்ற அசைக்க முடியாத சிம்மாசனத்தில் கொண்டு போய் இருத்திய விதியும் இந்தப் ‘பொது விதியே’.

ஐன்ஸ்டீன் எப்போது ‘விசேட சார்பு விதி’யை அறிமுகப்படுத்தினாரோ அன்றிலிருந்தே பௌதீகத்திலிருந்த பல குழப்பங்கள் கொஞ்சம் கொஞ்சமாக தெளியத்தொடங்கின. நியூட்டனின் விதிகள் பல கிறீன் பிட்சிலே விளையாடும் இந்திய அணியின் விக்கட்டுகள்போலக் குலையத் தொடங்கின. ஒளியின் வேகத்துக்கு நெருங்கிய வேகத்தில் இயங்கும் சட்டங்களில் தூரம் கூட சீரானதல்ல. திணிவுகூட சீரானதல்ல என்பதெல்லாம் தெளிவடைய ஆரம்பித்தன. ஒளியின் வேகத்தில் ஓடும் ரயிலுக்குள் உட்கார்ந்திருக்கும் குஷ்புவின் இடுப்பு இலியானாவின் இடுப்பு போலத் தெரியும். (வெறும் பேச்சுக்குத்தான், இடுப்பே போய்விடும் என்பதே உண்மை!). வெளியே நிற்கும் இலியானாவை உள்ளிருக்கும் குஷ்பு பார்த்தால் “என்னம்மா இப்டி இளைத்திருக்கிறாய்?” என்றுதான் கேட்பார். ஏனெனில் குஷ்புவின் சட்டத்தில் இலியானாவும் எதிர்த்திசையில் பயணம் செய்வதால் அவரும் ஒடுங்கித்தான் தெரிவார்.

இப்படியான பல குழறுபடிகளால் காலத்தையும் நேரத்தையும் தீர்மானிப்பது சிக்கலாகியது. காலமும் வெளியும்(space) வேறு வேறு பரிமாணங்கள், ஒன்றோடொன்று தொடர்பற்றசீரான தளங்கள் என்ற கலிலியோ, நியூட்டன் போன்றோரின் சிந்தனைகளை ஐன்ஸ்டீனின் விதி தூக்கியெறிந்துவிட்டது. காலமும் வெளியும் (Space and Time) ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டவை. அதி உயர் வேகத்தில் தொழிற்படும் பிரமாண்டமான பொருட்களின் வெவ்வேறு இயங்கு சட்டங்களில் காலமும் நேரமும் மாறக்கூடியவை. அதாவது பிரபஞ்ச அளவுகோல்களில் ஒரு மீட்டர் தூரம் காலத்தோடு கூடவும் குறையவும் செய்யலாம். ஒரு செக்கன் இடைவெளியும் தூரத்தோடு மாறுபடலாம். ஒன்றின்றி மற்றையதை கணிக்கமுடியாது. ஒரு வெளியை வெறுமனே நீளம், அகலம், உயரம் என்கின்ற முப்பரிமாணங்களுடன் மாத்திரம் விவரிக்க முடியாது. அதுபோல காலத்தையும்

(தொடர்ச்சி 26ம் பக்கம்)

பிரித்தானியா
TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312

உங்கள் வாழ்க்கைத் துணையை
தேர்ந்தெடுக்க வேண்டுமா?

TEL: 647 724 4188 FAX : 416 438 7855
கனடா
www.orumanam.com



# ஒன்றாக அசையும் எரிபொருள் விலையும் பங்குச் சந்தையும்




## வேல் தர்மா
*(ஒரு பேப்பருக்காக)*

நடனத்தில் இணைந்த இருவரைப் போல கடந்த ஓராண்டாக எரிபொருள் விலையும் பங்குச் சந்தை விலையும் ஒன்றுடன் ஒன்று ஒத்து இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த ஒத்த அசைவு சீனாவின் பங்குச் சந்தை 2015இன் நடுப்பகுதியில் பிரச்சனைக்கு உள்ளாகியதில் இருந்து மேலும் ஒன்றுபட்டுள்ளது. 72 விழுக்காடான வேளைகளில் ஒன்றுவீழ்ச்சியடையும் போது மற்றதும் வீழ்ச்சியடைந்தது. அமெரிக்க ஊடகமான வோல் ஸ்றீட் ஜேர்ணல் பங்குச் சந்தை விலைக்கும் எரிபொருள் விலைக்கும் இடையில் தற்போது நிலவும் உடனுறவு (correlation) கடந்த 26 ஆண்டுகளில் காணாத ஒன்றாக இருக்கின்றது எனத் தெரிவித்துள்ளது.

2008-ம் ஆண்டு உருவான உலகப் பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் எரிப்பொருள் விலை அதிகரிப்பு எனக் குற்றம் சாட்டப்பட்டது. உற்பத்திச் செலவிலும் விநியோக செலவிலும் எரிபொருள் விலை கணிசமான பங்கு வகிக்கின்றது. எரிபொருள் விலை அதிகரிக்கும் போது உலகெங்கும் உள்ள நிறுவனங்களின் வெளியிட்டுச் செலவு அதிகரித்து இலாபத்தைக் குறைக்கும். அதனால் பங்குகளின் விலை வீழ்ச்சியடையும். எரிபொருள் விலை குறையும் போது உற்பத்திச் செலவும் விநியோகச் செலவும் குறைந்து விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும். பங்கு விலைகள் அதிகரிக்கும். ஆனால் இப்போது எரிபொருள் விலை குறையும் போது பங்கு விலை அதிகரிக்க வில்லை.

இந்த நூற்றாண்டு பெரும் பொருளாதார வளர்ச்சியுடன் ஆரம்பித்தது. 2007-ம் ஆண்டு வளர்முக நாடுகள் 8.7 விழுக்காடு பொருளாதார வளர்ச்சியைக் கண்டன. வளர்முக நாடுகள் செல்வந்த நாடுகளை எட்டிப் பிடிக்கப் போகின்றன. சீனா உலகின் முதல்தரப் பொருளாதார நாடாக மாறப்போகின்றது என்றெல்லாம் பொருளாதார நிபுணர்கள் கருத்து வெளியிட்டனர். ஆனால் 2008-ம் ஆண்டில் இருந்து எல்லாம் குழம்பிப் போய்விட்டது. பொருளாதார மந்த நிலை தோன்றி எட்டு ஆண்டுகள் ஆகியும் இன்னும் உலகப் பொருளாதார வளர்ச்சி மந்த நிலையிலேயே இருக்கின்றது. சென்ற நூற்றாண்டின் இறுதியில் உலகெங்கும் மத்திய தர வர்க்கத்தினரின் தொகை அதிகரித்தது. அந்த அதிகரிப்பு இப்போது நின்றுவிட்டது. அத்துடன் வளர்ச்சியடைந்த நாடுகள் பலவற்றிலும் சீனாவிலும் இளையோர் தொகை குறைந்தும் முதியோர் தொகை அதிகரித்தும் உள்ளது. இது பொருளாதார வளர்ச்சிக்கு உகந்தது அல்ல. எரிபொருள் வீழ்ச்சியைத் தொடர்ந்து பல நாடுகளிலும் புதிய எரிபொருள் இருக்கைகளை எரிபொருள் உற்பத்தி நிலையங்களாக மாற்றும் பல முதலீடுகள் கைவிடப்பட்டுள்ளன. உலகெங்கும் 68 இடங்களில் கண்டறியப் பட்ட எரிபொருள் இருப்புக்களில் செய்ய முயன்ற முப்பத்தியெட்டு பில்லியன் டொலர்கள் பெறுமதியான முதலீடுகள் கைவிடப்பட்டுள்ளன. இவற்றில் நாளொன்றிற்கு 2.9பில்லியன் பீப்பாய் மசகு எண்ணெய் உற்பத்தி செய்ய முடியும்.

### ◆ எரிபொருள் விலையும் உலக அரசியலும்

ஒரு பொருளின் விலையை அந்தப் பொருள் எந்த அளவு சந்தையில் விடப்படுகின்றது என்பதும் மக்கள் அதை எந்த அளவு வாங்க முன் வருகின்றார்கள் என்பதும் தீர்மானிக்கும். அதை பொருளியலாளர்கள் வழங்கலும் கேள்வியும் (demand and supply) விலைகளைத் தீர்மானிக்கின்றன என்கின்றனர். ஆனால் எரிபொருளின் வழங்கலை பல காரணிகள் தீர்மானிக்கின்றன. புவிசார் அரசியல் உலக எரிபொருள் வழங்கலில் பெரும் தாக்கம். 1973-ம் ஆண்டு அரபு-இஸ்ரேல் போரைத் தொடர்ந்து அரபு நாடுகள் ஏரிபொருள் ஏற்றுமதித் தடையை நடைமுறைப் படுத்தின. அதனால் மசகு எண்ணெயின் விலை பீப்பாய் ஒன்று $2.83இல் இருந்து $10.41ஆக உயர்ந்தது. 1979-ம் ஆண்டு உருவான ஈரானிய மதவாதப் புரட்சியால் ஏரிபொருள் விநியோகம் பாதிக்கப் படலாம் என ஜப்பான் பெருமளவு எரிபொருளை வாங்கியது. அதனால் எரிபொருள் விலை உலகச் சந்தையில் அதிகரித்தது. 1980-ம் ஆண்டு ஈராக் ஈரானை ஆக்கிரமித்த போது எரிபொருள் விலை $40 ஆக உயர்ந்தது. பின்னர் 1990-ம் ஆண்டு ஈராக் குவைத்தை ஆக்கிரமித்த போது மசகு எண்ணெயின் விலை $42 ஆக உயர்ந்தது. 1998--ம் ஆண்டில் ஆசியப் பொருளாதார நெருக்கடி உருவான போது மசகு எண்ணெயின் விலை பீப்பாய் ஒன்று $10 இலும் குறைவாக வீழ்ச்சியடைந்தது. பின்னர் உலக பொருளாதார வளர்ச்சி முக்கியமாக சீனா இந்தியா போன்ற மக்கள் தொகை அதிகம் கொண்ட நாடுகளின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்த போது எரிபொருள் விலை உலகச் சந்தையில் விலை ஏறத் தொடங்கியது. 2008-ம் ஆண்டு சரித்திர சாதனை விலையாக மசகு எண்ணெயின் விலை $147.27ஆக உயர்ந்து இருந்தது. 2008-ம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார மந்த நிலையைத் தொடர்ந்து எரிபொருள் விலை சரியத் தொடங்கியது. எரிபொருள் இல்லாமல் வல்லரசுகள் இல்லை. பன்னாட்டு வாணிபமும் இல்லை. 1900ம் ஆண்டு உலக எரிபொருள் தேவையின் 55 விழுக்காட்டை நிலக்கரி உற்பத்தி திருப்தி செய்தது. எண்ணெயும் எரிவாயுவும் அப்போது 3 விழுக்காடு பாவனை தான். நூறு ஆண்டுகள் கழித்து உலக எரிபொருள் பாவனையில் நிலக்கரி 25 விழுக்காடு, இயற்கை வாயு 23 விழுக்காடு, எண்ணெய் நாற்பது விழுக்காடு. 2000ம் ஆன்டு நாளொன்றுக்கு ஏழரைக்கோடி பீப்பாய்களாக இருந்த உலக எண்ணெய்க் கொள்வனவு 2030ம் ஆண்டு இருமடங்காகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அமெரிக்காவிலும் கனடாவிலும் ஷேல் என்னும் மாற்று எரிபொருள் கண்டறியப்பட்டன. உலகில் அதிக அளவு எரிபொருள் பாவிக்கும் அமெரிக்கா 2015-ம் ஆண்டு எரிபொருள் உற்பத்தியில் தன்னிறைவு கண்டது.

2016 பெப்ரவரி 16-ம் திகதி சந்தித்த சவுதி அரேபியாவும் இரசியாவும் தமது எரிபொருள் உற்பத்திகளை அதிகரிக்காமல் 2016-ம் ஆண்டு ஜனவரி உற்பத்தி நிலையைத் தொடர்ந்து பேணுவதாக ஒத்துக் கொண்டன. ஆனால் அதற்கு அந்த இரு நாடுகளும் விதித்த நிபந்தனை மற்ற எரிபொருள் உற்பத்தி நாடுகளும் அதே நிலையைப் பேண வேண்டும் என்பதாகும். ஆனல் இந்த உடன்பாடு எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கு மாறாக குறையச் செய்தது. இந்த உடன்பாடு நிறைவேற்றப்படுவதற்கு ஈரானின் ஒத்துழைப்பு அவசியம். உடனே எல்லோர் பார்வையும் ஈரான் பக்கம் திரும்பின. எல்லோரும் எதிர்பார்த்தது போல் ஈரான் தனது உற்பத்தி அதிகரிப்பைக் குறைக்க மறுத்தது. 2016-ம் ஆண்டு வளைகுடா நாடுகள் முன்னூறு பில்லியன் டொலார்கள் பெறுமதியான வருமான இழப்பைச் சந்திக்க வேண்டியிருக்கும். தற்போது எரிபொருள் விலை பீப்பாய் ஒன்று முப்பது டொலர்களாக இருக்கும் நிலையில் ஐக்கிய அமெரிக்காவின் எந்த ஒரு புதிய எண்ணெய்க் கிணற்றையும் தோண்டுவது நட்டத்தையே ஏற்படுத்தும். எரிபொருள் விலை வீழ்ச்சியால் இரசியா, வென்சுவேலா, நைஜீரியா, எக்குவேடர், பிரேசில் ஆகிய நாடுகளின் பொருளாதாரங்கள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளன. உலகெங்கும் பல எரிபொருள் உற்பத்தி நிலையங்கள் வங்குரோத்து நிலையை அடைந்ததால் 250,000 பேர் வேலைகளை இழந்துள்ளார்கள். சவுதி அரேபியாவும் ஐக்கிய அமெரிக்காவும் இரசியாவையும் ஈரானையும் தண்டிக்க எரிபொருள் விலையை விழச் செய்கின்றன.

### ◆ கள்ளத் தொடர்புதான்

இப்போது உள்ள பெரும் கேள்வி எரிபொருள் விலை நகர்விற்கும் பங்குச் சந்தை விலை நகர்விற்கும் உள்ள தொடர்பு ஏன் இப்படி இருக்கின்றது? ஏன் எரிபொருள் விலை வீழ்ச்சியடையும் போது பங்குகளின் விலைகள் உயராமல் ஏன் விழுகின்றது ? எரிபொருள் விலை வீழ்ச்சி உலகெங்கும் பொருளாதராத வளர்ச்சியை ஏன் தூண்டவில்லை? பங்குச் சந்தை, நிதிச் சந்தை, பொருட்களிற்கான சந்தை ஆகியவற்றில் விலைகளின் நகர்வுகளுக்குப் பெரும்பாலான கட்டங்களில் தர்க்க ரீதியான விளக்கம் கொடுக்க முடியாது. அதுவும் உலக முதலீட்டாளர்கள் பெரும் அச்சத்தில் இருக்கும் போது அவர்கள் எடுக்கும் முடிவுகளை தர்க்கரீதியானதாக இருக்காது. எரிபொருள் விலை வீழ்ச்சியை பங்குச் சந்தைக்காரர்கள் உலகப் பொருளாதாரம் வலுவிழந்திருப்பதைக் காட்டுவதாக நினைக்கின்றார்கள். அதனால் பங்குகளை விற்கின்றார்கள். பங்குச் சந்தை வீழ்ச்சி உலகப் பொருளாதாரம் மந்த நிலையில் இருப்பதைச் சுட்டிக் காட்டுவதாக எரிபொருள் உற்பத்தியாளர்கள் கருதுகின்றார்கள்.

அதனால் அவர்கள் தேங்கிக் கிடக்கும் கையிருப்பை மலிவான விலைகளில் விற்றுத் தள்ளுகின்றார்கள். Federal Reserve Bank of Cleveland எரிபொருள்விலைக்கும் பங்குச் சந்தை விலைக்கும் தொடர்பு உண்டா என ஒரு ஆய்வு நடத்தியது. அதன் முடிவில் அப்படி ஒரு தொடர்பும் இல்லை எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. Wall Street Journal எரிபொருள் விலைக்கும் பங்குச் சந்தை விலைக்கும் இடையில் உள்ள ஒரே தொடர்பு உலகப் பொருளாதாரம் தொடர்பான பயம் என்கின்றது.

எரிபொருள் விலைக் குறைப்பு முழுமையாக உலக மக்களைப் போய்ச் சேரவில்லை. பல நாடுகள் முன் கூட்டியே எரிபொருளை வாங்கி விட்டன. பல நாடுகள் எரிபொருளிற்கு வழங்கி வந்த உதவிகளை (மானியன்ங்களை) நிறுத்தி விட்டன. பல நாடுகள் எரிபொருள் மீதான வரியை அதிகரித்துள்ளன. பாதீட்டுப் பற்றாக் குறை உள்ள நாடுகள் இந்த வரி அதிகரிப்பின் மூலம் தமது வருமானத்தை அதிகரித்தன. ஐக்கிய அமெரிக்கா இறக்குமதி செய்யும் எரிபொருளுக்கான வரியை பீப்பாய் ஒன்றிற்கு $10களாக அதிகரித்துள்ளது. எரிபொருள் விலை வீழ்ச்சி எரிபொருள் உற்பத்தி செய்யும் நாடுகளைப் பாதித்ததுடன் அவற்றிற்கான ஏற்றுமதியிலும் அவற்றில் பணிபுரியும் தொழிலாளர்களின் ஊதியத்திலும் தங்கி இருக்கும் பல நாடுகளையும் பாதித்துள்ளது. இதனால் இந்த நாடுகளில் எரிபொருள் பாவனை குறையும். அது ஒரு தொடர் சுழற்ச்சியாகப் பாதிப்பை ஏற்படுத்தும்.

பயம் என்ற ஒரு தாளத்திற்கு பங்குச் சந்தையும் எரிபொருள் சந்தையும் ஆடுவதால் அவை நடனத்தில் இணைந்த இருவரைப் போல ஒன்றுடன் ஒன்று ஒத்து இயங்கிக் கொண்டிருக்கின்றன.

*கருத்துக்களுக்கு -*
*facebook.com/orupaper @orupaper*

AYURMEDICS®
Ayurvedic Medical Practice
BRCP British Register of Complementary Practitioners 2015
ICNM Institute for Complementary and Natural Medicine Affiliated 2015



What specialist treatments we offer?
We offer time tested authentic Ayurvedic treatments for the following disorders:

- Rheumatoid Arthritis
- Osteoarthritis
- Gout
- Psoriasis
- Eczema
- Insomnia
- Lumbar Spondylosis
- Cervical Spondylosis
- Diabetes
- Neurological Disorders
- Paralysis
- Multiple Sclerosis
- Post Natal Care
- Acne And Pimples
- Hair Loss And Dandruff
- Infertility
- PCOD, PCOS, Irregular Menstrual Disorders
- Asthma & Bronchitis
- Stress, Anxiety & Depression
- Obesity
- Hypertension
- Hyper And Hypothyroidism
- Post Cancer
- Rejuvenation
- Sports Injuries And Sprains
- Non-Specific Low Back Ache

Dr RAJALAKSHMI RAMESH
BAMS, SMBRCP, YIC
505, London Road, Thornton Heath, Croydon, CR7 6AR
For an appointment call us now at
0203 6206 999 or
0785 0439 999
Web : www.ayurmedics.org
Mail : ayurmedics@gmail.com



# இன்று எனது அப்பாவின் ஏழாம் ஆண்டு நினைவுநாள்...



ஒப்பற்ற ஊடகவியலாளன் சத்தியமூர்த்தியின் செல்லக் கண்மணியான அவரால் அன்போடு கொஞ்சி போற்றப் பட்ட செல்வம்

‘சிந்து’ குட்டியம்மா அன்று தந்தையை இழந்து பரிதவித்து இறந்த தந்தையின் சடலத்தில் நெற்றியில் முத்தமிட்ட காட்சி கண்டு உலகத் தமிழினம் கண்ணீர் சிந்தியது.

ஈழத் தமிழினப்படுகொலைக் காட்சிகளில் உயிரை சுடும் காட்சிகள் பலவற்றில் இதுவும் ஒன்று.

இன்று அகவை பத்தில் காலடி எடுத்து வைத்துள்ள கண்மணி இவள் தன் பருவ முன் வயது காலங்களில் தன் அன்பு தந்தையை நினைத்து ஏங்கி புலத்தில் ஒதுங்கி வாழும் ஒரு தேசத்தில் இருந்து எழுதிய கவிதை உயிரை சுடுகிறது.

இன்று எனது அப்பாவின் ஏழாம் ஆண்டு நினைவுநாள்..

அப்பாவைப்பற்றி எழுதச்சொல்லி அம்மா சொன்னா. நான் கொப்பியில் இப்படி எழுதிக்கொடுத்தேன்... இரண்டரை வயதுவரை நான் செய்த அனைத்தையும் “ஒருவயதில் உங்கள் டயறியில் ஏதோ கிறுக்கியதையும் சுவரில் நான் கிறுக்கிவைக்கும் அனைத்தையும் படம் பிடித்து வருபர் எல்லோருக்கும் காட்டி மகிழ்ந்தீர்களாமேயப்பா? ”

அத்தோடு அதையும் பத்திரப்படுத்தி வைத்தீர்களாம் ரசிக்க நீங்கள் இருந்தீர்களப்பா. இப்போ பத்துவயது மகளாக வளர்ந்து நிற்கும் நான் எவ்வளவோ செய்கிறேன். நன்றாகப் படிக்கிறன், அம்மாவோடு சேர்ந்து குட்டிக்குட்டியாக சமைக்கிறன், வீட்டுவேலைகள் சின்னச் சின்னதாகச் செய்கிறேன், இன்னும் ஏராளமானவை..

இப்போ நீங்கள் பாராட்டி நான் மகிழ முடியாதவளாக இருக்கிறேனே என்று மனமெல்லாம் வலிக்கிறது அப்பா.

என் போன்ற எத்தனை பிள்ளைகள் போரில் அப்பாக்களை தொலைத்துவிட்டு.. அப்பா என்ற உருவத்தை படத்தில் மட்டுமே பார்த்து வலியோடு வாழ்கின்றோம்?.

நீங்கள் கண்ட கனவை நான் நிறைவேற்றி உங்கள் மகளாக வாழ்ந்து காட்டுவேன் அப்பா..

அதுவரை எங்கள் உள்ளுணர்வோடு பேசிக்கொள்வோம் இருவரும்!

*அன்புடன் குட்டியம்மா*



*நன்றி : சங்கதி24 இணையம்*

# நடக்க இருக்கும் நிகழ்வுகள்

**FEB 20 SATURDAY**

*ஆண்டு விழா*

தனிநாயகம் தமிழ்ப் பள்ளி வழங்கும் ஆண்டு விழா.

நேரம்: மாலை 03:00 மணி முதல்

இடம்: Sir James Hawkey Hall
Broomhill Rd, Woodford Green, IG8 0BG.

தொடர்புகளுக்கு : துரை சிவபாலன் - 07958 007 132

**FEB 26 FRIDAY**

*Musical Programme*

A treat of carnatic music by sanggtha Kalanithy Sri Sanjay Subramaniam.

நேரம்: 07:00 PM

இடம்: Tolworth Girls School,
Fullers Way, Surbiton, Surrey, KT6 7LQ.

தொடர்புகளுக்கு : 07949 269 426 - 07957 682 083
07919 388 355 - 07702 404 531

**FEB 27 SATURDAY**

*கலைச்சாரல் 2016*

North East Sports for Tamil வழங்கும் எம்மவர் கலைஞர்கள் கலந்து கொள்ளும் கலைநிகழ்வு.

நேரம்: மாலை 6.30 மணி முதல்

இடம்: The Intimate Theatre 521, Green Lane,
Palmers Green, London N13 4DH.

தொடர்புகளுக்கு : 0773 660 0644, 0795 644 6195
0747 421 2023

**FEB 28 SUNDAY**

Western Thaalam 2016

பிரித்தானிய பல்கலைக்கழக மாணவர்களால் நடாத்தப்படும் மாபெரும் வருடாந்த கலை நிகழ்ச்சி.

நேரம்: மாலை 5.30 மணி

இடம்: indigo at The O2, SE10 0DX.

தொடர்புகளுக்கு : 07456 574 730

# தாழ்ந்து வரும்

*(11ஆம் பக்கத் தொடர்ச்சி)*

பதில் சொல்ல விரும்பவில்லை. இதுதான் இப் போதுள்ளநிலைமை.

தமிழ்மக்களிடம் இப்பொழுது வன்சக்தி கிடையாது. மென்சக்தியும் முழு வளர்ச்சி பெறவில்லை. இத்தகையதோர் பின்னணியில் போர்க் குற்றவிசாரணைகளில் இறுதியாகக் கிடைக்கப்போகும் நீதியே தமிழ்மக்களின் அடுத்தகட்ட அரசியலுக்கான பாதுகாப்புக் கவசமாகும். அதனால்தான் தமிழ்மக்களில் ஒரு பகுதியினர் தமக்குப் பரிகாரநீதியே வேண்டும் என்றுகோரிவருகிறார்கள். இறுதிக்கட்டப் போரில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள்தான் அவர்களுடைய அடுத்தகட்ட அரசியலுக்கான முதலீடாகக் காணப்பட்டது. இந்த இழப்புக்களுக்கு எதிரானநீதியே இனப்பிரச்சினைக்கான தீர்வுமாகும் என்று தமிழ்மக்களில் ஒரு பகுதியினர் கூறி வருகிறார்கள். அதாவது இனப் படுகொலைக்கு எதிரானபரிகார நீதியே இனப் பிரச்சினைக்கான தீர்வுமாகும்.

இவ்வாறு பரிகார நீதியைப் பெறுவதாக இருந்தால் அதற்குரிய விசாரணைப் பொறிமுறை ஆகக்கூடிய பட்சம் அனைத்துலக மயப்பட வேண்டும். எவ்வளவுக்கு எவ்வளவு விசாரணைப் பொறிமுறை அனைத்துலக மயப்படுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு தமிழ்மக்களுடைய பேரம் பேசும் சக்தியும் அதிகரிக்கும்.

ஆனால் கடந்த ஓராண்டு காலமாக அந்த விசாரணைப் பொறிமுறையை அனைத்துலக மயநீக்கம் செய்வதில் மைத்திரி-ரணில் அரசாங்கம்படிப்படியாக வெற்றிபெற்று வருகிறது. அதாவது தொகுத்துக் கூறின் தமிழ் மக்களுடைய பேரம்பேசும் சக்தி குறைந்துவருகிறது.

இவ்வாறு தமிழ்மக்களுடைய பேரம்பேசும் சக்தியை குறைத்து வரும் அரசாங்கத்தின் அனைத்துலகக் கவர்ச்சியோ உயர்ந்து கொண்டே போகிறது. தமிழ் வன்சக்தி அகற்றப்பட்டிருக்கும் ஒரு வெற்றிடத்தில் கடந்த ஆறே முக்கால் ஆண்டுகாலப்பகுதிக்குள் தமிழ் மென்சக்தியானது அதன் முழு வளர்ச்சியை இது வரையிலும் பெறவில்லை.

இப்போதுள்ள நிலைமைகளின்படி தமிழ் மென்சக்தியானது முதலாவதாக கோட்பாட்டுத் தெளிவுடையதாக கொள்கைப் பிடிப்புள்ளதாக இருக்க வேண்டும். இரண்டாவதாக அந்தக் கொள்கையின் பிரகாரம் அர்ப்பணிப்புக்களைச் செய்வதற்கும், தியாகங்களைச் செய்வதற்கும் தயாராக இருக்கவேண்டும். மூன்றாவதாக மைத்திரி-ரணில் அரசாங்கத்தை அதிகம் எதிர்பார்ப்போடுபார்க்கும் ஓர் உலகச்சூழலில் சக்திமிக்க நாடுகளின் நிகழ்ச்சி நிரல்களை சுழித்துக் கொண்டோடத் தெரியவேண்டும்.

ஆனால் இங்குவிபரீதம் என்வெனில் தன்னை ஒரு மென்சக்தி போல கட்டியெழுப்பமுற்படும் மைத்திரி-ரணில் அரசாங்கமானது போர்க் குற்றவிசாரணைப் பொறிமுறையைப் படிப்படியாக அனைத்துலக மயநீக்கம் செய்துவரும் ஒருபின்னணியில் தமிழ்மக்களின் ஆணையைப் பெற்ற மிதவாதிகளோ ஒரு கட்சி ஏக போகத்தை நோக்கி காய்களை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள். அண்மையில் ஈ.பி.ஆர்.எல்.எப் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தமிழரசுக்கட்சியில் இணைந்திருக்கிறார்.

அதேசமயம், தயான் ஜெயதிலகவால் மென் சக்தி என்று அழைக்கப்பட்ட விக்னேஸ்வரனோ கூட்டமைப்புக்கு எதிராகத் திட்டவட்டமாகத் தலைமை தாங்கத் தயங்குகிறார்.

தமிழ் மக்கள் பேரவை எதிர்காலத்தில் ஒரு கட்சியாக மாறப்போவதில்லை என்ற நிபந்தனையோடுதான் அவர்அதில் இணைத்தலைவராக இணைந்திருக்கிறரர். ஒருமாற்றுத் தலைமையைக் கட்டியெழுப்ப அவர் இன்று வரையிலும் தயாரில்லை.

அதாவது தமிழ் மென்சக்தியானது துலக்கமானஒரு முழு வளர்ச்சியை இனிமேற்றான் பெறவேண்டியிருக்கிறது. அப்படியொரு வளர்ச்சியை அடைவதற்கிடையில் தமிழ் மக்களின் தலையில் மேலுமொரு தீர்வற்றதீர்வு கட்டியடிக்கப்பட்டுவிடுமா ?

# நாற்பது ஆண்டு

*(06ஆம் பக்கத் தொடர்ச்சி)*

மக்களதும் விலை மதிக்க முடியதா அர்பணிப்புக்கள் தியாகங்கள் ஊடாக, மரபுழி இராணுவ முறைமையாக பரிமாணம் பெற்றது. இது தமிழீழத் தனியரசுக்கான படிநிலையாக ஓர் நடைமுறைத் தமிழீழ அரசினை ஈழத் தமிழர் தேசத்தில் நிறுவியது.

இலங்கைத் தீவில் தமிழீழம் - சிறிலங்கா என்ற இரண்டு தேசங்கள் எனும் வலுச் சமநிலையினை மட்டுமல்ல, தமிழர்களுக்கான ஓர் அரசியல் வெளியினையும் இந்த நடை முறைத் தமிழீழ அரசு வெளிப்படுத்தியிருந்த நிலையில், பெரும் இனவழிப்பு போர் ஒன்றின் ஊடாக நடைமுறைத் தமிழீழ அரசினை அழித்து ஈழத் தமிழர் தேசத்தினை சிங்கள அரச பயங்கரவாதம், மே 2009ல் ஆக்கிரமித்துக் கொண்டது என்பது ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றின் துயர் நிறைந்த பக்கங்களாகும்.

ஈழத்தமிழர் தேசம் சிங்கள அரச கட்டமைப்பினால் ஆக்கிரமிக்கப்பட்டு இலங்கைத்தீவில் தமிழர்களுக்கான அரசியல் வெளியற்ற வேளை, இலங்கைத் தீவுக்கு வெளியேயான அனைத்துலக வெளியில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தினை ஈழத் தமிழர்கள் உருவாக்கிக் கொண்டனர். ஈழத்தமிழர் தேசம் சிங்கள அரச கட்டமைப்பி னால் ஆக்கிரமிக்கப்பட்டு இலங்கைத்தீவில் தமிழர்களுக்கான அரசியல் வெளியற்ற வேளை, இலங்கைத் தீவுக்கு வெளியேயான அனைத்துலக வெளியில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தினை ஈழத்தமிழர்கள் உருவாக்கிக்கொண்டனர்.

புலம்பெயர் தேசங்களில் சனநாயக வழிமுறைத் தேர்தல் ஒன்றின் மூலம் இந்த அரசாங்கத்தினை உருவாக்கி, உலகெங்கும் வாழும் தமிழர்களின் மூச்சு, தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை உயிர்ப்புடன் வைத்திருக்கும் என்ற செய்தியினை 2010 மே18ல் உலகிற்கு உரக்க தமிழ்மக்கள் கூறினர். இதன் தொடர்சியாக, நாளைய தமிழீழம் எத்தகைய உரிமைகளை வழங்கி நிற்கும் என்பதனை உலகிற்கு எடுத்துக்கூறும் பொருட்டு, மக்களின் கருத்துக்களின் அடிப்படையில் தமிழீழ சுதந்திர சாசனம் 2013, மே18ல் முரசறையப்பட்டது.

இவ்வாறு ஈழவிடுதலைப் போராட்டத்தின் வரலாற்றுத் தடம், பல்வேறு ஏற்ற இறக்கங்களோடு பயணித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில், மலர்ந்துள்ள 2016ம் ஆண்டு, வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் நாற்பதாவது ஆண்டாக அமைந்துள்ளது. வரலாற்று முக்கியத்துவமிக்கதொரு இவ்வாண்டில், வட்டுக்கோட்டைத் தீர்மானத்தினை மக்கள் தளத்திலும், அரசியற் தளத்திலும், கருத்தியல் தளத்திலும் அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்வது காலத்தின் கடமையாகவுள்ளது.

வட்டுக்கோட்டைத் தீர்மானம் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த மே14 நாளினை மையப்படுத்தி, வரும் மே 13 முதல் 18 வரையிலான காலப் பகுதியில், மெய்நிகர் தமிழீழ அரசாங்க செயன்முறையொன்றின் ஊடாக தமிழீழத்துக்கான அரசியல் யாப்பு வரைதல், பொதுசன வாக்கெடுப்பு ஆகியவிடயங்களுக்கான செயன்முறை பெரு நிகழ்வரங்குகளை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அமெரிக்காவில் நிகழ்த்துகின்றது.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் நாற்பதாவது ஆண்டினை வெறும் சடங்காக கைக்கொள்ளாமல், அரசியல் ரீதியாக அதனை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்வதற்குரிய செயல் முனைப்பாக இது மேற்கொள்ளப்படுகின்றது.

இதேவேளை சிறிலங்காவின் தற்போதைய ஆட்சியாளர்கள், புதிய அரசியல் அமைப்பின் ஏற்பாடொன்றின் ஊடாக, தமிழர் பிரச்சனைக்கு அரசியற் தீர்வு என்ற பெயரில் ஒன்றினை தமிழ் மக்கள் மீது திணிப்பதற்கு முற்படுகின்றனர்.

இந்நிலையில், வட்டுகோட்டைத்தீர்மானத்தினை மையப்படுத்தி தமிழீழத் தனியரசுக்கான அரசியல் யாப்பு வரைவுக்கான முனைப்பு மற்றும் அரசியற் தீர்வுக்கான பொறிமுறையாக தமிழீழம் உள்ளடங்கிய வகையில் பொதுசன வாக்கெடுப்புக்கான அறைகூவல் ஆகியன ஈழத் தமிழர்களின் தெளிவான நிலைப்பாட்டினை உலகிற்கு வெளிப்படுத்தும் விடயமாக அமைகின்றது.

# வன்னியில் ஒரு காலத்தில் தன்னிறைவு கொண்டு விளங்கிய மூன்று கிராமங்களின் கதை




**மகாலிங்கம் பத்மநாபன்**

*பெரிய பரந்தன், குஞ்சுப்பரந்தன். செருக்கன் கிராமங்களின் பொற்காலமும் நீலனாறு, கொல்லனாறுகளால் சூழப்பட்டு பொறிக்கடவை அம்பாளின் அனுக்கிரகத்தால் வாழ்ந்த மக்களின் வரலாறும்.*

**பட்டிக்காட்டிலிருந்து பட்டணத்திற்குப் படிக்கப்போன கதை.**

நாங்கள் பிறந்து வளர்ந்த பட்டிக்காட்டில் சேவைகள் யாவற்றிற்கும் கூலியாக நெல்லை அளந்து கொடுத்தகாலம் அது. அண்ணனும் நானும் பட்டணத்திலுள்ள ஓரளவு பெரிய பாடசாலையில் சேர்ந்து படிக்க இருந்த நேரம். நாங்கள் பட்டணத்தில் படித்தாலும் கிராமத்தில் இருந்துகொண்டே எங்களைப் பாதித்த மூன்று பேரைப்பற்றியே பிரதானமாக இங்கு எழுதப்போகின்றேன்.

ஆச்சி எங்கள் தந்தை வழிப் பேர்த்தியார். பரமர் எங்கள் கிராமத்து சிகையலங்கார நிபுணர். பீப்பாக் கட்டாடியார், எங்கள் கிராமத்துக் கட்டாடியார். ஆச்சிக்கு எங்கள் தந்தையார் ஒரே மகன். அவர் குடும்பகாரன் ஆகிவிட்டதால் ஆச்சியின் அதிகாரம் அவரிடம் செல்லவில்லை. ஆகவே ஆச்சி எங்கள் மீதுள்ள தனது அதிகாரத்தை மிகவும் இறுக்கமாக கடைப்பிடித்தார். எங்கள் ஐயாவும் தன்னை நேரடியாகப்பாதிக்காத எல்லா விடயங்களையும் ஆச்சியிடமே விட்டுவிடுவார். சனிக்கிழமைகளில் எங்களுக்கு மேலெல்லாம் எண்ணைதடவி, கண்கள் எரிய எரிய சீயாக்காய் வைத்துத் தேய்த்து முழுகவார்த்தல். மாதமொருமுறை மீசாலையின் பரியாரி வீரரிடமிருந்து வாங்கிவந்த பேதி மருந்தை குடிக்கவைத்தல்.

இவற்றையெல்லாம் ஒருவாறு சமாளித்து விடலாம். ஆனால் பங்குனி வேள்வி, தீபாவளி, புதுவருடம் முதலியவற்றிற்கு எனது பேரப்பிள்ளைகளுக்கு நான் தான் புது உடுப்புக்கள் எடுப்பேன் ஆச்சி உறுதிபடக்கூறி விடுவார். ஐயாவும் பேசாமல் இருந்து விடுவார். ஆச்சி எங்களுக்கு எப்போதுமே நீலநிறக்கால்சட்டை தான் எடுப்பார். அதுவும் எங்களுக்கு பிரச்சனையில்லை. ஆனால் சேர்ட்டுத்துணி எங்கு தான் தேடிப்பிடித்து வாங்குவாவோ எங்களுக்குத் தெரியாது. ஐநூறு ஆயிரம் மாணவர்களுக்கிடையில் நாங்கள் நின்றாலும் எங்களை ஒரு நொடியில் கண்டு பிடித்துவிடமுடியும். எங்கள் சேர்ட்டுத்துணியின் நிறம் அந்த ஆயிரம் மாணவர்களும் நிராகரித்த கடும் நிறமாக இருக்கும். சரி அதையும் ஒருவாறு சகித்து விடலாம் பாஸ்கரன் ரெயிலரைக்கொண்டு தைப்பிப்பதில் தான் விசேஷம் உண்டு.

பாஸ்கரன் ரெயிலர் சிறந்த தையல் நிபுணர். ஆனால் ஆச்சியின் சொல்லைத் தட்டமாட்டார். “இஞ்சைபார் பாஸ்கரன் பொடியன்கள் வளர்கிற வயது. வளர வளர போடவேண்டும். பெரிதாகத் தை. துணியை எடுக்கிறதுக்கா கச் சின்னதாக தைத்துவிடாதே.” என்று ஆச்சி முதலிலேயே எச்சரித்துவிடுவா. “ஐயோ பெரியம்மா நான் அப்படிச்செய்வேனே” என்று கூறும் ரெயிலர் அந்தத்துணியில் எவ்வளவு பெரிதாகத் தைக்க முடியுமோ அத்தனை பெரிதாகத் தைத்து விடுவார். ஏன் தான் எங்களை அப்படியும் இப்படியும் அளவுநாடா கொண்டு அளந்தாரோ அது அவருக்குத்தான் வெளிச்சம். கால் சட்டை இடுப்பில் நிற்காது. கீழ்ப்பகுதி முழங்காலிற்குக் கீழே தொங்கிக்கொண்டிருக்கும். இடுப்பில் இறுக்கிக்கொண்டு நிற்பதற்காக அம்மா ஊசி குத்தி விடுவா. முழங்காலிற்குக்கீழே ஆடிக் கொண்டிருக்கும் பகுதியை அவரினாலும் ஒன்றும் செய்ய முடியாது. எங்களுக்குப் போடவே அவமானமாய் இருக்கும். இப்போ 2015 ஆம் ஆண்டு நாகரீகமென்று கருதி பெரியவர் முதல் சிறியவர் வரை முக்கால் ஜீன்ஸ் என்று அதைப்போல போடப்போகின்றார்கள் என்று 55 வருடங்களுக்கு முன்னர் அன்றே தெரிந்திருந்தால் அதைப்போடுதல் அவமானமென்று கருதியிருக்கமாட்டோமோ என்னவோ? சேர்ட்டின் தோள்மூட்டுப்பகுதி வழிந்து இறங்கிக் கையில் நிற்கும். சேர்ட்டின் கீழ்ப்பகுதி முழங்கால் வரை நீண்டிருக்கும். இதில் வேடிக்கை என்னவென்றால் வளர வளர போடுவதற்காக தைக்கப்பட்ட கால் சட்டைகளும் சேர்ட்டுகளும் நாங்கள் வளருவதற்கிடையில் கிழிந்துபோய்விடுவதுதான்.

சிகையலங்காரம் ஒரு தனிக்கதை. பரமர் அந்தக்கலையில் சாதாரணம் தான். கத்தரிக்கோலும் சீப்பும் பரவாயில்லை. மயிர் வழிக்கிற கத்தியை நன்கு தீட்டி வைத்திருப்பார். பார்க்கவே பயமாயிருக்கும். போதாதற்கு ஐயாவிற்கும் அப்புவிற்கும் முகம் வழிக்கும் போதும் தீட்டும் பட்டையில் தீட்டிக்கூராக்கிக்கொள்வார். ஐயாவிடமோ அல்லது அப்புவிடமோ ஏதாவது வேண்டுதல்விடவோ கோரிக்கைவைக்கவோ சேவ் எடுக்கும் சந்தர்ப்பத்தையே பரமர் தேர்ந்தெடுப்பார். அதுவும் முகமெல்லாம் வழித்துப் பின்னர் தலையைப்பின் சாய்த்து கழுத்தில் வழிக்கும் தருணத்திற்காக காத்திருந்து கழுத்தில் கத்தியை வைத்தபடி பரமர் தனதுகோரிக்கையை முன் வைப்பார். அவ்வளவு கூரான கத்தி கழுத்தான் குத்தியில் இருக்கும்போது யாரால் தான் அவரது கோரிக்கையை மறுக்க முடியும்? பரமர் மிஷின் என்று ஒரு கருவியையும் புதிதாக அறிமுகப்படுத்தினார். அந்தக்கருவியில் தான் ஏதும் கோளாறோ அல்லது அதைப்பயன்படுத்தும் முறையை பரமர் சரியாகப்பழகவில்லையோ தெரியாது. அந்த மிஷினைப் பாவிக்கும் போது அரைவாசி மயிரை வெட்டும். மிகுதி அரைவாசியை இழுத்துப்பிடுங்கும். உயிரே போகிற மாதிரி நோகும். கிராமத்துப் பொடியள் எல்லாம் பரமரைக்கண்டால் ஓடி ஒழிப்பார்கள். ஆனால் பரமரோ அவர்கள் எதிர்பாராத தருணங்களில் பிடித்து அவர்களுக்கு எப்படியும் மாதமொருமுறை தலைமயிர் வெட்டிவிடுவார். அவ்வாறு செய்தால் தான் நெல் அளத்தலின் போது தனக்குரிய நெல்லை கறாராக அளந்து வாங்க முடியும். இது எல்லாம் சாதாரண விடயங்கள். பரமரின் மனைவி பிள்ளைகளைப் படிப்பிப்பதற்காக ஊருக்குச் சென்ற கையோடு பரமரும் போய் விட்டார். தனது கடமைகளைச்செய்ய மாதம் ஒருமுறை வந்துபோவார். சில வேளைகளில் வரச்சற்றுத் தாமதமாகி விடும். ஊரார் எல்லோரும் முணுமுணுக்கத் தொடங்கினர். பரமரின் பிரதான தொழில் சிகையலங்காரம் என்றாலும் அதைவிடப் பெரும் சேவையையும் அவர் ஆற்றி வந்தார். பரமர் தன் தொழிலின் நிமித்தம் அந்தக்கிராமத்தின் எல்லா வீடுகளுக்கும் சென்று வருபவர். எல்லோர் வீட்டுப் புதினங்களையும் அவர் அறிவார்.

புதினப்பத்திரிகைகள் பரவலாக பரவாத காலம் அது. அக்காலத்தில் ஊர்ப்புதினங்களை அறிய கிராமத்துப்பெண்கள் பரமரையே நம்பியிருந்தனர். புதினங்களை அறிய முடியாமையால் எல்லோரும் பரமரை கண்டிக்கத் தொடங்கினர். புதினமறியாத காரணம் என்று சொல்லாமல் தங்கள் பிள்ளைகளின் தலைமயிர் காதை மூடி காடாக வளர்ந்துவிட்டதாக புகார் செய்தனர். பரமர் அந்தக்குற்றச்சாட்டிலிருந்து தப்பிக்க சிகையலங்காரத்தில் ஒரு புதிய முறையை கண்டு பிடித்தார். அந்தப்புதிய சிறப்புமுறை அந்தக்கிராமத்து ஆண்களுக்கும் சிறுவர்களுக்கும் மட்டுமே உரிமையானது. பரமர் தலைமயிர் வெட்டும் போது காதுக்கு மேல் ஒன்றரை அங்குலத்துக்கு சுற்றிவர கத்தரிக்கோலினாலும் மிஷினினாலும் ஒட்ட வெட்டி, ஒரு அங்குலம் வரை சுற்றிவர சேவ் எடுக்கும் கத்தியால் வழித்து விடுவார். பார்ப்பவர்களுக்கு அவர்களின் தலையின் மேல் ஒரு சட்டியைக் கவிழ்த்து விட்டது போல தோற்றமளிக்கும். 2015ஆம் ஆண்டு அது தான் நாகரீகமாகப் போகின்றதென 55 வருடங்களுக்கு முன்னர் பரமர் அறிந்திருக்கவில்லை. பரமர் ஒன்றரை மாதமென்ன, இரண்டு மாதங்கள் கழித்து வந்தாலும் ஒருவருக்கும் தலைமயிர் காதைமூடி காடாகத் தோற்றமளிக்காது. அந்தக்கிராமத்து ஆண்களோ, சிறுவர்களோ வேறு இடங்களிற்குச் சென்றால் சட்டித்தலைமயிரை வைத்தே அவர்களை இன்ன கிராமத்தவர்கள் தான் என யாவரும் இனம்கண்டுகொள்வர்.

பீப்பாக் கட்டாடியாருக்கு என்ன உண்மையான பெயர் என்று ஒரு சிலர் தான் அறிவார். அவர் அளவிற்கதிகமாக கள்ளுக்குடித்தமையால் அவரது வயிறு பீப்பா போல ஊதிவிட்டது. அதன் காரணமாக எல்லோரும் காரணப்பெயரான பீப்பாக்கட்டாடியார் என்பதையே பயன்படுத்தினர். கட்டாடியாரும் அதைக் குறைவாக எண்ணவில்லை. அவரிடமும் ஒரு விஷேஷ குணம் இருந்தது. ஒருவருக்கும் அவர் நேரகாலத்திற்கு உடுப்புக்கொடுக்க மாட்டார். நான்கு ஐந்து முறை வீடு தேடிப் போனபின் தான் வெள்ளாவி வைப்பதற்கே ஆயத்தம் செய்வார். அதுவும் அவசரமாக ஒரு பிரயாணம் போகவண்டும் என்றுசொன்னால் போதும். உடனேயே வெள்ளாவியும் வைத்து தோய்த்தவற்றை உலர்த்தியும் விடுவார். மினுக்குகின்ற வேலையை (அயன் பண்ணல்) மட்டும் கடைசி நேரத்திலேயே செய்வார். உரியவர் “என்ன கட்டாடியார் நேரம் போட்டுது” எனஇரண்டு மூன்று முறை தேடி வந்த பின்னர் பிரயாணத்திற்கு மட்டு மட்டான நேரத்தில் உடைகளைப் பொதியாகச் சுமந்து வந்து கொடுப்பார். நாங்கள் ஒவ்வொரு தவணை விடுமுறை முடியவும் பாடசாலை செல்ல விருப்பமின்றி வேண்டா விருப்பாக வெளிக்கிடுவோம். எங்களை ஏற்றிச் செல்ல கார்க்கார நாதனும் வந்துவிடுவார். பீப்பாக்கட்டாடியார் மட்டும் வரமாட்டார். நாதனும் பொறுமையிழந்து காரின் கோணை இரண்டு மூன்று முறை அடித்து விடுவார். கடைசியாக ஐயாவும் பொறுமையிழந்து பேசத் தொடங்க, அத்தனை பேச்சையும் கேட்டபடி பீப்பாக்கட்டாடியார் மெதுவாக உடுப்பு மூட்டையுடன் வந்து திண்ணையில் இருப்பார். அம்மா அவசரம் அவசரமாக உடுப்பு மூட்டையை பிரித்து உடுப்புக்கள் சரியோ என்று பார்ப்பா. எப்படியும் ஒன்று இரண்டு குறையும்.

“என்ன கட்டாடியார் உடுப்புக்கள் குறையுது” என்று அம்மா கேட்டால் “அடுத்த முறை கொண்டு வருவேன்” என்பார். அடுத்த முறை மேலும் சில உடுப்புக்கள் குறையும்.

* * * * *

எங்களை கோஸ்ரலில் விடுவதில் ஆச்சிக்கு சம்மதமில்லை. “சாப்பிடாமல் மெலிந்து போவார்கள்” என்று எங்கள் முன்னும் “கெட்ட பழக்கம் பழகிவிடுவார்கள்” என்று மற்றவர்களுக்கு இரகசியமாகவும் கூறுவா. யாழ்ப்பாணத்தில் ஆச்சியின் ஒன்றுவிட்ட சகோதரிகள் இருவர் இருந்தார்கள். இருவரும் தம் கணவர்களை இழந்தவர்கள். இருவருக்கும் ஒவ்வொரு பெண் பிள்ளைகள். ‘இங்கிலிஸ் மீடியத்தில்’ எஸ் எஸ் சி ‘பாஸ்’ பண்ணியவர்கள். அவர்கள் வீட்டில் எங்களைத் தங்க வைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

*(தொடரும்)*





# சுட்டமண்ணும் களி மண்ணும்

பாகம் 189

இலங்கைக்குப் புதிய அரசியலமைப்பு அல்லது திருத்தச் சட்டமொன்றைக் கொண்டு வரப் போகிறார்கள். அதற்கான ஆலோசனைகளைப் பெற மத்திய அரசாங்கம் பல அறிஞர்களின் துணையையும் நாடியுள்ளதாகத் தெரிகிறது. அரசியல், சமூகம் சார்ந்த 24 பேர் கொண்ட அந்த அறிஞர்கள் குழுவில் மூன்று தமிழர்களும் மூன்று முஸ்லிம்களும் இடம் பெறுகிறார்கள். அவர்களை பிரதமர் ரணில் விக்கிரம சிங்க நியமித்திருக்கிறார். இந்த 24 பேரும் தலா மூன்று பேர் கொண்ட எட்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவும் இலங்கையில் தலா மூன்று மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டு (இலங்கையில் 25 மாவட்டங்கள்), அங்குள்ள மக்களின் புதிய அரசியலமைப்பு தொடர்பான கருத்துக்களைக் கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்குமென்றும், அதன் அடிப்படையில் அமைக்கப்படப்போகும் புதிய அரசியலமைப்பில் மாற்றங்களைக் கொண்டு வரவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்பு முதலாம் கட்டம் இரண்டாம் கட்டம் "ஐந்தாங்கட்டம்"என்று இனப் பிரச்சனைத் தீர்வுக்காகக் கட்டங்கட்டமாகப் பேச்சுவார்த்தை நடத்தியது போய், தற்போது மாவட்டம் மாவட்டமாகப் பேச்சு வார்த்தை நடைபெறப் போகிறது. இது எங்குபோய் முடியுமோ தெரியாது.

சென்ற வருடக் கடைசிப் பகுதியில் கொள்கை மாற்றீட்டுக்கான மத்திய நிலையத்தினால் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி கிட்டத்தட்ட 54 வீதமானவர்கள் இலங்கையின் இனப்பிரச்சனையைத் தீவுக்குக் கொண்டு வருவதற்காக அரசியலமைப்பில் மாற்றம் செய்யபட வேண்டுமெனக் கருதுவதாகவும், அதனடிப்படையில் தற்போதுள்ள பாராளுமன்றம் அரசியலமைப்பு மாற்றத்தைச் செய்யும் சட்டசபையாக இயங்குமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றத்தை பிரதமர் முன்மொழிந்திருக்கிறார். அதனடிப்படையில் 1978 அரசியலமைப்பை மாற்றியமைக்கப் போகும் கைங்கரியத்தில் தற்போதுள்ள பலகட்சிக் கூட்டமைப்பாக ஒன்றுபட்டு இயங்கும் தேசிய அரசுப் பாராளுமன்றம் ஈடுபடவிருக்கிறது.

முன்பும் மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைத்த போதெல்லாம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசும் யு.என்.பி அரசும் மாறிமாறி, முறையே 1972 இலும் 1978 இலும் அரசியலமைப்பை மாற்றின அப்போதெல்லாம் நான் முந்தி நீ முந்தி என்றுபோட்டிபோட்டுக்கொண்டுபௌத்த சிங்கள பேரினவாதத்தின் பிடிக்குள் நாட்டை எவ்வளவு முடியுமோ அவ்வளவு கொண்டு வந்தன. தற்போது கூட்டாக இயங்கும் தேசிய அரசு கிடைத்திருக்கிறது. என்ன செய்யப் போகிறார்களோ தெரியவில்லை. தேசிய அரசிலுள்ள யாரும் புதிய சிந்தனைகளோடு வந்தவர்களில்லை. எல்லோரும் ஒரே குட்டையிலூறிய மட்டைகள்தான். முன்பு பிரந்து நின்று தங்களது பேரினவாத வெறித்தனங்களைக் காடடியவர்கள், தற்போது ஒன்றுபட்டு நிற்கிறார்கள். அவ்வளவுதான் வித்தியாசம்.

தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் வரை இப்போதுள்ள அரசியலமைப்பே தொடரப்போகிறது. அவர் வெளியேறுவதற்கு முன்பாக அரசியலமைப்பில் மாற்றத்தைக் கொண்டு வரவேண்டுமென்று முயல்வதாகவும் கூறப்படுவதால், இன்னுமொரு மூன்று நான்கு வருடங்கள் இந்த இழுபறி தொடர வாய்ப்பிருக்கிறது. அதுவரை தமிழ் மக்கள் காத்திருக்க வேண்டியதுதான்.

காத்திருப்பதில் பெரிய இழப்பேதும் தமிழர் தரப்புக்கு ஏற்படப்போவதில்லை என்றே எண்ணத்தோன்றுகிறது. ஏனெனில், தற்போது மிகக் குறைவான அதிகாரங்களுடன் இயங்கிக் கொண்டிருக்கும் வடமாகாணசபையின் தற்போதுள்ள அதிகாரங்களும் புதிய அரசமைப்பினால் பறித்தெடுக்கப் பட்டுவிடுமோ அல்லது மாகாண சபையே இல்லாமலாக்கப் பட்டுவிடுமோ என்று ஒரு மூன்று நான்கு வருடங்களுக்கு அஞ்சத்தேவையில்லை. அந்த வகையில் புதிய அரசியலமைப்பு வந்தாலென்ன வராமல் விட்டாலென்ன இருப்பதை வைத்துக் கொண்டு முடிந்தவரை எமது ஆட்சியதிகாரத்தை எமது மண்ணில் நிலை நிறுத்துவோமென்று செயற்படுவதே இன்றைய தேவையாயிருக்கிறது.

## அலசுவாரம்

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

புதிய அரசியலமைப்பில் என்ன மாற்றங்கள் நிகழப்போகின்றன என்பது யாருக்கும் தெரியாது. தற்போதுள்ள மாகாணசபை முறைமை ஓர் சமஷ்டியை நோக்கிய நகர்வாயிருப்பதால், ஏற்கனவே அதையிட்டு வெறுப்போடிருக்கும் சிங்களப் பெரும்பான்மை சமூகம் என்ன முடிவையெடுக்கப் போகின்றது என்பதை யாரும் ஊகிக்க முடியாது.

> **தமிழர் தரப்பைப் பொறுத்தவரை, கிடைத்ததைத் தவறவிட்டுவிடாமல், முடிந்தவரை அதிகாரப் பரவலாக்கத்தை வலியுறுத்துவதுதான் முக்கிய தேவையாகும்.**

அதிகாரப் பரவலாக்கலை மையப்படுத்திய சமஷ்டி முறைக்காகத்தான் சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து தந்தை செல்வா போராடினார். அந்த சமஷ்டி அமைப்பு முறைமையை முதன்மைப்படுத்தி சிங்களவர் மத்தியில் அதனைப் பூதாகாரப்படுத்தி ஜேஆர் போன்ற சிங்கள இனவாதிகள் நாடு முழுவதும் நச்சு விதைகளைத் தூவியதன் விளைவுதான் இன்று வரையான இலங்கையின் இழிவு பட்ட சரித்திரத்திற்குக் காரணமாய்ப் போனது. போதாததற்கு தமிழர் மனங்களிலும் 'தமிழரசு' என்ற கோட்பாடாக அந்தச் சமஷ்டி அரசியல் முறைமை பதிக்கப் பட்டதால், அதனைப் பிரிவினை வாதமாகச் சிங்கள மக்களிடம் பெரிதுபடுத்தி, அடுத்தடுத்து வந்து ஆண்ட சிங்களப் பெரும்பான்மைகளும் அதையே சாக்காக வைத்துத் தமிழர்களைப் புறக்கணித்தன.

உண்மையில் சமஷ்டியென்பது நாட்டை அமைதியான வழியில், அனைத்துப் பிரதேச மக்களினதும், தேசிய இனங்களினதும் பங்களிப்போடும் ஒத்துழைப்போடும் கொண்டு செலுத்தக்கூடியவோர் அரசியல் முறைமையாகும். இலங்கையில் மட்டும்தான் இந்தக் கருத்தியலுக்கு மிகக் கீழ்த்தரமான மாசு கற்பிக்கப்பட்டது.

வரலாற்றை மறுத்து, இலங்கை சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தமென்ற மனித நாகரீகத்துக்குப் புறம்பானவோர் கருத்தியலை விதைத்து, தமிழர்களை வந்தேறு குடிகளாக்கி, அழகிய இலங்கைத் தீவின் அனைத்து வகையான முன்னேற்றங்களையும் கெடுத்துக் குட்டிச் சுவராக்கியவர்கள் குறுகிய மனப்பான்மை கொண்ட சிங்களப் பேரினவாதிகளே. யானை தன் தலையிலேயே மண்ணை வாரிவாரி இறைப்பதைப்போல அதனையே தங்கள் சின்னமாக வைத்துக்கொண்டு ஜேஆர் போன்ற தலைவர்கள் இனவெறியை வாரி வாரி இறைத்தார்கள். வினை விதைத்தவன் வினையைத்தான் அறுக்க முடியும். தினையறுக்கலாமென்று நப்பாசைப் பட்ட பேரினவாதம் இன்று வாலைச்சுருட்ட முனைகின்றது.

கிட்டத்தட்ட அறுபது ஆண்டுகால இலங்கையின் வரலாற்றைப் பாழடித்துவிட்டு, இனவெறிக் குரோதங்களால் தீவை நிரப்பிவிட்டு, அதனால் தவிர்க்க முடியாது விளைந்து விட்ட தமிழர் விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதமென்று காட்டித் தப்பித்துக்கொள்ள பேரினவாதிகள் முனைந்தார்கள். கடைசியில் மூக்குடைபட்டு உலகின் முன்னே இலங்கையை மிகவும் இழிந்த தேசமாக வெளிக்காட்டித் தலை குனிந்து நிற்கிறார்கள். தற்போது மறைந்து மண்ணுட் புதைந்து போன மனிதவுரிமைகளைத் தோண்டியெடுத்துக் கொண்டுபோய் ஐநாவில் கியூவரிசையில் நின்று காட்டி இதோ இருக்கிறது எங்கள் நாகரீகமென்று உலகின் முன் நல்லபெயர் வாங்கிவிடலாமெனப் பார்க்கிறார்கள்.

சுட்டமண்ணும் களி மண்ணும் ஒட்டியதாய்ச் செய்தியில்லை. தமிழர் பிரதேசம், தமிழர் தாயகம், தமிழர் தேசியம் என்ற கட்டங்களையெல்லாம் கடந்து தமிழீழ நாட்டினர் என்ற அடையாளத்தைப் பெறவேண்டுமென்னும் உலகளாவிய தமிழர்களின் வேணவாவை எவ்வாறு சிங்களம் அடக்கியொடுக்கி அல்லது சாந்தப்படுத்தி உலகின் முன் தன்னையோர் வெற்றியடைந்த நாடாகக் காட்டப்போகிறதோ தெரியவில்லை.

தரைப்படை, கடற்படை, வான்படை, பொலீஸ் படை என்பவற்றுக்கும் மேலாய் இரண்டாம் உலகமகா யுத்தத்தின்போது ஜப்பானியர் அமைத்துப் போராடிய ஜீவ மோசப் பட்டாளத்தையும் விஞ்சி நின்ற உயிர்ப்படையையும் அமைத்துப் போராடி, தமிழினம் தனது ஆற்றலை வெளிப்படுத்தி விட்டுத்தான் தற்போது அடங்கி நிற்கின்றது. அந்த ஆற்றல் மீண்டும் துளிர்த்துவிடாது என்று எந்தக் கொம்பனாலும் மூக்குச் சாத்திரம் பார்த்து ஆரூடம் கூற முடியாது. ஆக நிரூபிக்கப்பட வேண்டிய ஆற்றல் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அதனை மீண்டும் முகிழ்த்துவிடச் செய்யாது அமைதியான சூழலொன்றையேற்படுத்தி நாட்டைப் பாதுகாக்க வேண்டிய கடமை இதுவரை பேரினவாதம் பேசி நாட்டைச் சீரழித்தவர்களின் பொறுப்பிலேயே இருக்கிறது.

பிரிவினையைக் கனவிலும் நினையாது அரசியற் தூரநோக்கோடு சிந்தித்து, இலங்கைத் தீவிற்கு உகந்ததானவோர் சமஷ்டி அரசியலமைப்பை முன்வைத்த தந்தை செல்வா போன்ற அரசியல் ஞானிகளை அவமதித்து, அவர்களது அரசியல் சாணக்கியத்தையும் செல்லாக்காசாக்கித் தூக்கியெறிந்த முட்டாள் பேரினவாதிகளின் வழித்தோன்றல்கள், கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்யப் புறப்பட்டது போல புதிய அரசியலமைப்பொன்றின் மூலம் இன சௌஜன்யத்தை ஏற்படுத்த முயல்கிறார்கள். அதிலும் எத்தனை உள்நோக்கமும், கபடத்தனங்களும் இருக்கின்றனவோ தெரியவில்லை.

> **உண்மையில் சமஷ்டியென்பது நாட்டை அமைதியான வழியில், அனைத்துப் பிரதேச மக்களினதும், தேசிய இனங்களினதும் பங்களிப்போடும் ஒத்துழைப்போடும் கொண்டு செலுத்தக்கூடியவோர் அரசியல் முறைமையாகும். இலங்கையில் மட்டும்தான் இந்தக் கருத்தியலுக்கு மிகக் கீழ்த்தரமான மாசு கற்பிக்கப்பட்டது.**

கடந்த அறுபது வருடங்களுக்குள் எந்தவித சர்வதேச நெருக்குவாரங்களுக்குள்ளும் சிக்கிக்கொள்ளாமல் சிறந்த அணிசேராக் கொள்கையை முன்னிறுத்தி வளர்ச்சியடைந்து உலகிற்கு முன்மாதிரியாக இருந்திருக்க வேண்டிய இலங்கைத் தீவு ஆண்ட பேரினவாதிகளின் மூடத்தனங்களால் அழகொழிந்து மூளியாய் நிற்கிறது. 'குரங்கின் கைப் பூமாலையாகிப் போன நாட்டை' அதே குரங்குகளே சீராக்கப் பார்க்கின்றன. அவை அதைச் செய்யுமா அல்லது அதே குரங்குப் புத்தியைத்தான் மீண்டும் காட்டி மேலும் சீரழிக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

தமிழர் தரப்பைப் பொறுத்தவரை, கிடைத்ததைத் தவறவிட்டுவிடாமல், முடிந்தவரை அதிகாரப் பரவலாக்கத்தை வலியுறுத்துவதுதான் முக்கிய தேவையாயாகும். முறையே காணி, பொலீஸ், ஒன்றிணைந்த வடகிழக்கு, உள்நாட்டு வெளிநாட்டு நிதிக்கையாள்கை, கல்வி, அபிவிருத்தி, மாகாண அரசியல், சட்ட நிர்வாகம் போன்றவற்றில் சுயாதீனம், ஆகிய இவைதான் வாதிட்டுப் பெற்றுக் கொள்ளவேண்டியவை. இவை தவிர வேறு ஏதுமிருப்பதாகத் தெரியவில்லை. மற்றும்படி யாருக்கும் புரியாத தமிழில் அல்லது ஆங்கிலத்தில் பத்திபத்தியாக எழுதி ஓர் அதிகாரப்பகிர்வுத் திட்டத்தைப் பேரின வாத முட்டாள்களிடம் கையளித்து நேரத்தையும் சக்தியையும் வீணடிப்பதில் பலனில்லை.

*தொடருவம்..*




✓ Accountancy & Auditing
✓ Business Start up Advice
✓ Business Plans & Cash Flow Forecasts
✓ Personal tax Affairs & Self Assesment
✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
✓ Company Formation
✓ Attending VAT & PAYE visits
✓ Tax Investigations
✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

# யாமிருக்கப் பயமேன்?




## தமிழ் மக்களே!

## கண்ட பொக்ஸ்சையும் வேண்டி கந்தறுந்து போகாதீங்கோ!

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், படங்கள், நாடகங்கள் அனைத்தையும் உங்கள் Mobile, Tablet மற்றும் TVகளில் இலவசமாக கண்டுகளியுங்கள்.

ஒரு சதமும் தர வேணாம். முக்கியமாக நடுவில 68 விளம்பரமும் வராது என்பதை உங்கள் தலையிலை அடிச்சு சத்தியம் செய்கிறோம்.

தமிழ்
தொலைக்காட்சி
www.tamil.com

Powered by TAMIL HUB

App Store · Google Play · amazon fireTV · Roku · chromecast · tv

# “ஊர்ச்சங்கங்கள் சாதிச் சங்கங்களாக இயங்குகின்றன”

- இளையதம்பி தயானந்தா



தமிழ் மக்களின் வேர்களைச் சாகவிடாமல் பாதுகாக்கும் பணி புலம்பெயர் தமிழ் மக்களின் முன்னுள்ள முக்கிய பணியாகும். எமது பாரம்பரியக் கலைகளையும் இசை, கூத்து போன்ற கலை நிகழ்வுகளையும் மீட்டெடுத்தும் பேசியும் எமது அடுத்த சந்ததியினருக்கு கையளிக்கும் முயற்சிகள் எல்லாத் தளங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டும். பறை போன்ற எமது பாரம்பரிய ,சைமரபினை தமிழரின் தொன்மை இசைமரபாக நாம் முன்னெடுக்க வேண்டும். பரதநாட்டியம் போன்ற நடனங்களில் புலம் பெயர் தமிழர்கள் பெருமளவு அக்கறை காட்டினாலும் இந்த நடனங்கள் எமது பாரம்பரியக் கலாச்சார மரபை பிரதிபலிக்கின்றன என்று கூறுவதற்கில்லை. எமது பாரம்பரிய கூத்துமரபு பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும்? என்று கனடாவிலிருந்து வருகை தந்திருந்த கலாநிதி பார்வதி கந்தசாமி கடந்த வாரம் (பெப்பிரவரி 6ஆம் திகதி) ‘ஹரோ தமிழ் சந்தி’ அமைப்பு ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

“புலம்யெயர் தமிழர்களின் அடையாளம் எது என்பது பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. புலம்பெயர் தமிழர்களில் அடுத்தடுத்த தலைமுறையினர் எவ்வளவுதூரம் எமது தாய்மொழித் தமிழை பயில்வார்கள் என்பது கேள்விக்குரிய விடயமாகும்.

அமெரிக்காவில் யூதமக்கள் அவர்களின் தாயக மொழியான கீபுறு மொழியைத் தெரியாத சமூகமாக வளர்ந்திருப்பதைப்போன்றே புலம்பெயர் தமிழர்களின் எதிர்காலச் சந்ததியினர் தமிழ்த் தெரியாத தமிழ்ச் சமூகமாக உருப்பெறும் நிலை உருவாகலாம்” என்று விமர்சகர் மு. நித்தியானந்தன் தனது தலைமையுரையில் தெரிவித்தார்.

“புலம்பெயர் நாடுகளில் அமைந்துள்ள ஊர்ச்சங்கங்கள் சாதி மேலாண்மையை அடிப்படையாகக் கொண்டே இயங்குகின்றன. 1960 களில் இருந்த நிலையைவிட இன்று தாயகத்தில் சாதிய வேறுபாடுகள் கூர்மையுற்று வருவதை அறியமுடிகிறது” என்று ஒளிபரப்பாளர் இளையதம்பி தயானந்தா கருத்துத் தெரிவித்தார்.

“புலம் பெயர்நாடுகளிலும் தமிழ் பெற்றோர் தங்களின் குழந்தைகளுக்கு சாதியம் என்ற நச்சு நிலையை ஊட்டி வளர்க்கும் போக்கு காணப்படுகின்றது” என்று ஆனந்தராணி பாலேந்திரா கருத்துத் தெரிவித்தார்.

தமிழ் சமுதாயத்தில் ஆழ வேரோடியுள்ள சாதி அமைப்பானது எளிதில் மாறப்போவதில்லை. இந்தச் சாதியம் தமிழர்களின் சமூக அமைப்பிலும், கருத்தியலிலும் ஆழமாக வேரோடி உள்ளது” என்று திரு.ரகுபதி கருத்துத் தெரிவித்தார்.

“லண்டனில் தமிழை வளர்ப்பதற்கான முயற்சியில் தமிழர் மேம்பாட்டுப் பேரவையினால் மேற்கொள்ளப்படும் முயற்சி தமிழ் மாணவர்களின் மொழி வளர்ச்சிக்கு பெரிதும் துணைபுரிகின்றது.

புலம்பெயர் தமிழ் மக்களிடையே கலாசாரரீதிலும் மனிதாபிமான ரீதியிலும் பலமாற்றங்கள் இடம்பெறுவதை அவதானிக்க முடிகின்றது” என்று மாதவி சிவலீலன் தெரிவித்தார்.

ஹரோ தமிழ் சந்தியின் சார்பில் வேலணை மத்திய மகா வித்யாலத்தின் பழைய மாணவர் சங்கத் தலைவர் என். சிவராஜா அவர்கள் நன்றி உரை வழங்கினார்.

*- நவஜோதி ஜோகரட்னம்*

# யாழ். நகரில் முதலாவது அனைத்துலக சைவமாநாடு




யாழ்நகரில் முதலாவது அனைத்துலக சைவமாநாடு பெப்ருவரி 14 ஆம் திகதி மூன்றாம்நாள் இறுதி நிகழ்வு யாழ் பல்கலைக்ழக விழாக கைலாசபதிபிள்ளை கலையரங்கில் வெகுசிறப்பாக நடைபெற்றது யாழ் பல்கலைக் கழகம் ஆரம்பமாகி 41 வருடமாக நாட்டின் அசாதாரண சுழ்நிலை காரணமாக இவ்வாறான எழுச்சி நிகழ்வு நடைபெறவில்லை என்றாலும் காலம் கடந்து பிறந்த இப்பிள்ளையைப் பேணிக்காக்க வேண்டும் என்று சுட்டிக் காட்டப்பட்டது.

இம்மநாட்டுக்குப் பிரதம விருந்தினராக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சி பத்மநாபன் அவர்களும் சிறப்புவிருந்தினர்களாக தற்போதைய துணைவேந்தா பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் அவர்களும் தமிழ்நாடு தஞ்சாவுர் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பாஸ்கரன் அவர்களும் கலந்துகொண்டார்கள். அத்துடன் இந்நிகழ்வில் பல்கலைக்கழக முன்னைய துணைவேந்தர்கள் அனைவரும் பங்கு பற்றியதம் குறிப்பிடக்கூடிய அம்சமாகும்

இந்நிகழ்வுக்கு பிரித்தானியா திருக்கோவில்களின் பிரபல கோவில்கள் அனுசரணை வளங்கினார்கள். பிரித்தானியா கோவில்களின் சார்பில் என்பீல்ட நாகபுசனி அம்மன் கோவில் சிவாசாரியார் சிவஸ்ரீ கமலநாதக் குருக்கள் ஆசியுரை வளங்கியிருந்தார். அவர் தனது உரையில் இங்கிலாந்து போன்ற மேற்கு நாடுகளில் summer காலங்களிலும் winter காலங்களிலும் சுரிய நேரம் வேறுபடுவதால் வாக்கிய பஞ்சாங்கமும் திருக்கணித பஞ்சாங்கமும் முறைப்படி மேற்கு நாடுகளுக்கு ஏற்ப நேரத்தைக் கணித்து அமைக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்

மாநாடு கலைநிகழ்ச்சிகளுடன் இனிது நிறைவடைந்தது.

# அரசையா

## ஓர் அஞ்சலிக்குறிப்பு



எஸ்.திருநாவுக்கரவு, எஸ்.ரி.அரசு என்று யாழ்ப்பாணக் கலை உலகில் பெரும்பாலானோரால் அறியப்பட்டவர், ஈழத்தமிழ் மக்களின் நீண்ட அரசியல் வாழ்வைத் தனது தேகத்தில் ஏற்றிவைத்திருந்தவர், அரசையா என்று நாம் அன்பாக அழைத்த எஸ்.ரி.அரசு.

கம்பீரமான உடல், மிடுக்கான தோற்றம், கணீரென்ற குரல் இவற்றுக்கான காரணம், பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் இவர் இந்திய இராணுவத்தில் இருந்தமையே. பாகிஸ்தான் புழுதிகளில் இராணுவப் பணியாற்றியிருந்தார். இராணுவப் பணியிலிருந்து இலங்கைக்கு மீண்டு வந்த அரசையா அவர்களுக்கு ஈழத்துத் தமிழ் அரசியல் விசனத்தைத் தந்திருந்தது.

அவர் ஒதுங்கிப் போகவில்லை. ஆழமாக ஈடுபட்டார். ஒடுக்குமுறைக்கெதிரான அவரது உயிர் ஆவேச உணர்வுகள் 1961இல் நிகழ்ந்த சத்தியாகிரகப் போரில் வெளிப்பட்டன. சிங்கள இராணுவம் அகிம்சைப் போராட்டத்தை வன்முறையால் ஒடுக்க முற்பட்டவேளை தன் நெஞ்சு நிமிர்த்தி முன் நின்றார். அவ்வேளை எடுத்த புகைப்படம் இப்போதும் சாட்சியமாக இருக்கின்றது.

அரசியல் உலகுடன் தன் கலை வாழ்வையும் இணைக்கத் தவறவில்லை. நடிகனாக ஒப்பனைக் கலைஞனாக மிளிர்ந்தார். அரசையா ஒரு திரைப்பட நடிகன் என்பதை நம்புவது கடினம். ‘குத்துவிளக்கு’ எனும் ஈழத்துத் தமிழ்த் திரைப்படத்தில் அவர் பனை ஏறியாக நடித்துள்ளார். நாடக அரங்கக் கல்லூரி தயாரித்த பல நாடகங்களில் நடிகனாகவும், ஒப்பனையாளராகவும் சிறக்கப் பணியாற்றினார்.

ஈழத்தில் மாத்திரமல்ல, தமிழகத்திலும் அவர் பெற்ற கலாவிநோதன், சின்னமணி வில்லிசைக் குழுவில் முக்கிய பங்காற்றியவர் அரசையா. வெறும் ‘ஆமா’ போடுபவராக அல்லாது கதையை நகர்த்திச் செல்லவும், பார்வையாளர்களை களிப்பூட்டவும் அவரது வகிபாகம் முக்கியமானது.

புகைப்படக் கலையையும் அரசையா விட்டுவைக்கவில்லை. ஒரு கலையகத்தில் பணிபுரிந்து அதேவேளை வைபவங்கள், திருமணங்கள் என்று வெளியிடங்களுக்கும் சென்று புகைப்படம் பிடித்தார். ஒரு கௌரவம், அவரால் புகைப்படக் கலைக்குக் கிடைத்தது. வெள்ளை வேட்டி, வெள்ளை நஷனலுடன் வெளியிடப் புகைப்பிடிப்புத் தளத்திற்கு சென்று இறங்கினார்.

இரு காதுகளிலிருந்தும் வெளிப்பட்ட மயிர், சதுர முகம் சந்தனப் பொட்டு என இவற்றோடு அரசையாவின் கம்பீரப் பார்வை அட்காசச் சிரிப்பு என பெரும் ஆளுமையாக எம் மனதில் நிறுத்தியது.

மண்ணுலகிற்கு வந்தோர் யாவரும் விடைபெற்றுச் செல்ல வேண்டும் என்பது எழுதப்படாத விதி. விடைபெற்றார் எஸ்.ரி.அரசு என்ற எங்கள் அரசையா. உங்கள் ஆளுமை, எங்கள் கண்களில் அப்படியே இருக்கின்றது. சென்று வாருங்கள் அரசையா.

*- இரவி அருணாசலம்*

PCO DRIVERS WANTED

£500 to £600 per week !

If you are over 25, have a valid DVLA licence and a PCO licence, no more than 6 points on your licence you will be paid £500 per week for 6 days work.

We will provide you with brand new automatic company vehicle plus all vehicle expenses will be paid by company.

No Knowledge test required, New drivers welcome.

Please Contact **Khalid Safi** or **Kevin Light** urgently on **07508148535/ 02087644444** or email **info@couriercars.co.uk**

ஒரு பேப்பர் ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு **£35** மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name: ____________________

Address : ____________________

____________________

____________________

Postcode: ____________________

Telephone: ____________________

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலை யினையும், G11, Lombard House, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# கன்னரின் வேள்விக் கடாய்



போர்க்காலம் ஊர்மனைகளை இடம் பெயர்வுகளால் அநாதரவாக்கும் வரை ஊர் தோறும் கிராமிய மணம் அப்பிக் கிடந்தது. வீடு தோறும் ஆடு, மாடு போன்ற பிராணி வளர்ப்பு, தோட்டச் செய்கை, வளவை வியாபித்த மா, பலா, கொய்யா, கமுகு மற்றும் பனை, தென்னை, வேம்பு, இலுப்ப என்று பயன்தந்த பச்சயங்கள், சீதனக் கொடுப்புகள் காரணமாக வளவுகள், வேலிகள் பிரித்தாலும் பொட்டுக்களும், கடவைகளும் அன்றாடம் உறவுக்குப் பாலமாக இருந்து சொந்தங்கள், சுற்றங்கள் சூழ்ந்த துயருக்கும் மகிழ்வுக்கும் பங்கு பற்றுகின்ற குடும்பங்களை இணைக்கின்ற சடங்குகள், சம்பிரதாயங்கள், சமய நம்பிக்கைகள், தொடர்கின்ற ஒரு எளிமையான சிக்கனமான இனிமையான வாழ்க்கை முறையை யாழ்ப்பாண செம்பாட்டு மண் செளிப்போடு கொண்டிருந்தது.

போராட்டம் முதலில் இடம்பெறச் செய்த கிராமங்கள் பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை துறைமுகம், சீமெந்துத் தொழிற்சாலை என்று தன்னுள் அடக்கிக் கொண்டிருந்த வலிவடக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த ஊர்களைத் தான் எத்தனை இடம்பெயர்வுகள் இடைவெளி இடைகளையும் மீண்டும் தன் பயணத்தை மிடுக்கோடு இப்பிரதேசத்தைச் சார்ந்த ஊர்கள் தொடர்கின்றன. அந்த வகையில் பங்குனி, சித்திரை மாதங்கள் என்றால் இங்குள்ள வைரவர் கோயில்கள் மற்றும் காளி கோவில்கள் காணுகின்ற வேள்வி தான் ஞாபகத்திற்கு வரும்.

வலி.வடக்கைச் சேர்ந்த பன்னாலை கிராமம் தான் என்னுடைய சொந்தக் கிராமமும் கூட. கிராமத்தோடு ஒட்டிய கோவில் கவுணாவத்தை வைரவர் கோவில், கருகம்பனை என்ற ஊரோடு உள்ளடங்கிக் கொண்டிருந்தது. வேள்விக்கு தொடர்ந்தும் பிரபலமாக அன்றும் இன்றும் திகழுகிறது. ஆயிரம் ஆயிரமாக ஆட்டுக்கடாக்கள், சேவல் கோழிகள் பலியாக்கி வைரவருக்குப் படைப்பது இன்றும் தொடர்கிறது. சவாரி மாட்டு வளர்ப்புப் போலவே, ஆட்டுக்கடாய் வளர்ப்பும் தன்னார்வ போட்டியாக பெருமைக்குரிய விடயமாக சொல்லப்படுவது வழமை. அந்த வழமைக்கு கவுணாவத்தை வேள்வி என்றால் கன்னர் கிடாய்க்கு ஒரு கிராக்கி இருக்கும். செல்லக்கிளி போன்ற பிறபெயர்களும் பிரபலம் பெற்றிருந்தாலும் கன்னர் கிடாய் தான் வளர்த்தியிலும் பருமனிலும் பெரிதாக நிற்கும்.

பாம்பு மற்றும் பிற ஜந்துக்களிலிருந்து தங்களை காக்குமாறு சேவல் அல்லது கடாய் ஆடு என்று தாங்கள் வளர்க்கும் வளர்ப்புகளில் ஒன்றை கவுணாவத்தை வைரவருக்கு நேர்ந்து வளர்ப்பது இந்த ஊரை ஒட்டிய குடும்பங்களின் நம்பிக்கைக்குரிய வழமை. குறித்த கடாய் அல்லது சேவல் வேள்வி அன்று கோவிலுக்குப் பலியாக்கப்படும். போட்டிக்கு ஆட்டுக்கிடாய் வளர்ப்பவர்கள் நல்ல இனக் கடாவை இனவிருத்தி செய்வதிலேயே அக்கறை காட்ட விரும்புவார்கள்.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

தங்கள் நல்லின மறி ஆடு ஒன்றுடன் சினைக்கு விடப்படும் கடாய் ஆட்டைத் தேடி தொடர்ந்து மறி ஆடு கத்த ஆரம்பித்ததும், ஏற்கனவே பார்த்து வைத்த வளர்த்தியான ஆட்டுடன் கூட விட்டு குட்டி போடும் வரை பொறுத்திருப்பார்கள். பிறக்கும் குட்டிகளில் நிறம், நெற்றிச்சுட்டி என்று நல்ல அம்சமான குட்டியை வேள்விக்கென்று நேர்ந்து வளர்ப்பது வழக்கம். தனியான மேலதிகமான தாய்ப்பால் உட்பட இந்த வேள்விக்கடாய் குட்டி தனிக் கவனத்தை பெற்று வளர ஆரம்பிக்கும்.

இரண்டு மாதமானால் தனி மறிப்புக்குள் வளர்க்கப்படும். மற்றவர் கண் பட்டு நாவூறு பட்டு விடக்கூடாது என்ற எண்ணத்தில் இந்த ஏற்பாடு. பகல், இரவு என்று சத்தான இலை, குழைகள், புண்ணாக்குத் தண்ணீர் என்று கிடாய், விசேட உணவுகளை தினமும் உண்டு குளுகுளுப்பாக வளரும், ஒரு கட்டத்தில் சதுரமாக ஆள் உயரக்கிடங்கு வெட்டி ஆட்டுக்கடா அதற்குள் விட்டுதான் வளர்க்கப்படும். கயிற்றில் கட்டினால் கடா சுற்றித் திரிந்து மெலிந்து விடும் என்பதற்காக இந்த வளர்ப்பு ஏற்பாடு. இலை குழைகளை நறுக்கி, கையில் வைத்து தீத்துவார்கள். உணவு விரைவாக சமிபாடு அடைந்து மீண்டும் கடாய் பசியெடுத்து அதிகம் உண்டு கொழுக்க வேண்டும் என்பதற்காக போதைவஸ்து குழையோடு தீத்தப்படும் என்றும் பேசப்படுவதுண்டு.

**வேள்விக்கு தொடர்ந்தும் பிரபலமாக அன்றும் இன்றும் திகழுகிறது. ஆயிரம் ஆயிரமாக ஆட்டுக்கடாக்கள், சேவல் கோழிகள் பலியாக்கி வைரவருக்குப் படைப்பது இன்றும் தொடர்கிறது. சவாரி மாட்டு வளர்ப்புப் போலவே, ஆட்டுக்கடாய் வளர்ப்பும் தன்னார்வ போட்டியாக பெருமைக்குரிய விடயமாக சொல்லப்படுவது வழமை.**

கிடங்கு வளர்ப்பால் ஆடு காம இச்சை கட்டுப்படும் என்பதுவும் வளர்ப்பாளர்களின் எண்ணம். கோவிலுக்கு நேர்ந்த கடாய் இனவிருத்தியை கட்டுப்படுத்தக்கூடாது என்பது தெய்வ நம்பிக்கை. போட்டி என்று வந்துவிட்டால் இந்த நம்பிக்கை மீறப்பட்டு கடாய் இனவிருத்தி தகமை இழக்க வைக்கும் சம்பவங்களும் உண்டு. இவ்வாறான வளர்ப்பில் தொடர்ந்து முன்னணியில் நின்றவர் கன்னர் என்ற தோட்டக்காரன். தச்சன்காட்டு சந்தியையொட்டி மிகப்பெரியளவில் நவீன முறையில் மரமுந்திரிகை செடி வளர்ப்பையும் இவர் மேற்கொண்டிருந்தார்.

வேள்வி நெருங்க நெருங்க வளர்ப்பு முறையும் வேகம் பெறும். இலை, குழைகள், கடாவில் வாயில் குழல் மூலம் உள்ளே தள்ளப்படுவதும் உண்டு. இதனால் மூச்சுத் திணறி கடாய் இறப்பதும் அவ்வப்போது நடப்பதுண்டு. கன்னர் கடாய் என்றால் அதன் கம்பீரம், வளர்த்தி எல்லாம் மாட்டைப் போல இருக்கும். கொம்பு, தாடி எல்லாம் எடுப்பாக இருக்கும். வேள்விக்கு ஓரிரு நாட்களுக்கு முன்பு தான் அது வெளியார் பார்வைக்கு வரும். அதை யார் வாங்குவது என்பதிலும் போட்டி நடக்கும். கூடப் பணம் கோரியவருக்கு கடாய் சொந்தமாகும். சந்தோஷத்தில் கன்னருக்கு தங்கச் சங்கிலி பரிசளிக்கப்பட்ட சம்பவங்களும் உண்டு.

வண்டிலில் அல்லது உழவுஇயந்திரத்தில் கன்னர் கிடாய் முதல் நாள் இரவு ஊர்வலமாக கவுணாவத்தை வைரவர் கோயிலை நோக்கி வரும். மேளதாள, வானவேடிக்கை, பட்டாசுகள் என்று ஊர்வலம் கலகலக்கும். கடாய் கம்பீரமாக தலையை சிலிர்த்தபடி ஊர்வலத்தின் காட்சிப் பொருளாக இருக்கும். தேர்தல் காலத்தில் கிடைக்கும் மாலை, பொட்டு, சந்தனம் என அத்தனை சங்கதிகளும் வேள்விக் கால கிடாய்களுக்கும் கிடைக்கும். அடுத்த நாள் பலியாவதை அறியாத அந்தக் கடாய் ஆதரவாளர்களின் கைத்தடவலை கம்பீரமாக தலையை ஆட்டும். ஊரின் உட்புறமுள்ள அந்த வைரவர் கோயிலுக்கு வேள்வி நாள் அன்று பெரிய மவுசு. 3-4 பெரிய என்ஜின்களில் வர்ண ரியுப் லைட்கள் நாற்புறமும் நீளத்திற்கு வெளிச்சம் தந்து கொண்டிருக்கும்.

சிகரம் சப்பறம் என்று கோயில் முன்றலில் கோபுரம் போல் ஓடி ஓடி மாயாஜாலம் காட்டும் மின்சார ஒளி விளக்கின் அழகு காட்ட, வடக்கு வீதி மேடையில் இரவிரவாக பெரிய மேளச் சமா, சின்னமேளம் என்று ஆட்டங்கள் தூள் பறக்கும். தவறணையில் இரண்டு இரண்டு போத்தல்களாக வாங்கி, பதுக்கி, கிளாசில் ஊற்றி விற்கும் சாராய விற்பனையாளருக்கும் அன்று மடி பணத்தாள்களால் நிறையும். போத்தலும், கையுமாக சால்வைத் துண்டுக்குள் போத்தலை மறைத்து அவ்வப்போது உலாவிக் கொண்டு தன்னைத் தட்டிக் கேட்போருக்கு ஊற்றிக் கொடுத்து விற்றுக் காசாக்க பலர் திரிவார்கள்.

வீதியைச் சுற்றிலும் பொங்கல் பானைகள் தென்னம்பாளை விறகுகள் புகை கக்க கூட்டமாக சேவல்கள் கூவ ஆட்டுக்கடாக்கள் பெருங்கனைப்போடு அதிகாரம் காட்ட விடியற்காலை வைரபர் கோயில் வேள்வி ஆரம்பமாகும். கன்னருடைய கடாய், வெட்டுக்கு முன் நிற்கும் போது திமிறாது. ஏனைய கடாக்களுக்கு கால் பிடிப்புக்கு இருவர், மற்றப் புறத்தில் தலைக் கயிற்றை பிடித்து இழுக்க ஒருவர், நடுவில் பெரிய கொடுவாக் கத்தியுடன் உரு ஏறிய நிலையில் ஓங்கி வெட்டுவதற்கு தயாராக இருக்கும் பூசாரி என்று இருப்பார்கள். கன்னர் கிடாய் கழுத்து தெறிபட இரத்தம் சீறிப் பாயும். இந்த கடாவினுடைய இரத்தம் நீண்ட தூரத்திற்கு பீறியடிக்கும். உடல் தானாக சரிந்து விழ சில நிமிடங்கள் பிடிக்கும்.

**போராட்டம் முதலில் இடம்பெறச் செய்த கிராமங்கள் பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை துறைமுகம், சீமெந்துத் தொழிற்சாலை என்று தன்னுள் அடக்கிக் கொண்டிருந்த வலிவடக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த ஊர்களைத் தான் எத்தனை இடம்பெயர்வுகள் இடைவெளி இடைகளையும் மீண்டும் தன் பயணத்தை மிடுக்கோடு இப்பிரதேசத்தைச் சார்ந்த ஊர்கள் தொடர்கின்றன.**

வெட்டுண்ட கிடாக்களை வெளியே இழுத்துக் கொண்டு சென்று விலைப் பேரம் பேசி விற்பனை ஆரம்பமாகும். விலை பவுண் கணக்கில் தான் நடக்கும். ஒரு பவுண் என்றால் பத்து ரூபாய் என்று அர்த்தம். வாங்கிய கடாக்களை காரிலோ, சைக்கிளிலோ அல்லது உழவு இயந்திரத்திலோ கொண்டு போய் பங்கு இறைச்சி போட்டு விற்பது என்பது அடுத்த ஒரு தனிக்கதை. அதைப் பிறிதொரு தடவை பார்ப்போம்.

Kayaal IT Solution Ltd
CCTV Camera Installation & Maintenance
EST Aug 2012



- CCTV Installation and Maintainance
- We are Offering cameras 1000 TVL at Different Prices from £25
- AHD - 720P, 1080p ,1.3 Megapixel Camera, CMOS 1000 TVL all available all day
- Wireless HD IP Cameras also available
- DVR all quality - Sunvision make

Simply and Friendly Easily In Your Pocket Money!!!
If Any One Start Pay with Month 50 Pounds Then Year after You Make Weekly Earn Regular and Continue Until You Member Weekly earn 250 pounds *For More Details Call - JOTHY -07859892657*

FRIENDLY SERVICES BY QUALIFIED ENGINEER.....





CCTV in operation

Only £ 500.00 (Inc VAT)
4 Dome camreas, DAY AND NIGHT, 1000tvl, cmos 4 ch dvr, 500 GB Hard Disk and Install, Online Support.

Only £ 650.00
4 Dome Cameras 12 MM Lens, 30 Meter, Day And Night Vision , 720p, 1080p, 1.3 Mega Pixel AHD 1000 TVL AHD 4 CH dvr With 1TB Hard Drive, All Install And Online Setup

Please Contact : KAYAL-07457178826
JOTHY - 07859892657
*Electrical and Electronic Engineer [BEng Hons ], CITY UNIVERSITY,LONDON*
*MCP2.0, MCT, [WINDOWS7], MCT[WINDOWS8]. PAT CERTIFIED [CITY AND GUILDS]*

HD CCTV

Paying Method : By PayPal or Cash
83, Roberts Bridge Road, Carshalton, SM5 1AH

E-Mail : info@kayaalcctv.com
Web : WWW.KAYAALCCTV.COM
COMPANY REG NO : 08193915

# நூல் பல கல்

பட்டினி கிடந்து செத்தாலும் பரவாயில்லை, தமது பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்று கல்வி அறிவு பெறவேண்டுமென, மாடாக உழைக்கும் மனித சமுதாயத்தை, கூடுதலாக தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் காண்கிறோம். அவ்வாறு வளரும் பிள்ளைகளில் மிக உயர்ந்த விருதுகளைப் பெற்று, மாவட்ட ரீதியாக புகழின் உச்சத்தில் சாதனை படைப்பதை தினசரி வெளிவரும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மூலம் அறிகிறோம். இவை யாவும் கல்வியினால் கிடைத்த அரிய சாதனைகளாகும்.

இவ்வாறு கல்வியில் தேர்ச்சிபெறும் மாணவர்கள் தமது பாடத்திட்டத்துக்கு அமைவான நூல்களை மட்டும் கற்றால் போதாது, அறிஞர்களால், அனுபவம் வாய்ந்தவர்களால் நிபுணர்களால் எழுதி வெளியிட்ட பல நூல்களையும் படிக்க வேண்டும் என்பதே ஔவையார் கூறிய நூல் பல கல் என்ற மந்திரமாகும்.

நூல்கள் பலவகைப்படும். சரித்திரம், விஞ்ஞானம், தத்துவம், சமயம், சுயசரிதைகள், கவிதைகள், ஆரோக்கியம், தொழில், விவசாயம், அரசியல், பயணக்கட்டுரைகள் தாங்கிய அரிய நூல்கள், விலைக்கு வாங்கக்கூடியதாகவும் இலவசமாகப் படிக்கக்கூடிய வகையில் நூல் நிலையங்களிலும் தாராளமாகக் கிடைக்கும் வசதிகள் தற்போது கிடைத்தாலும் இவ்வசதிகளைப் பயன்படுத்தி பயன்பெற அனேகர் முன்வருவதில்லை என்பதே உண்மை.

அரசினால் நிர்வகிக்கப்படும் பொது நூலகங்களுக்குச் சென்றால் இளையவர்களை விட முதியவர்கள் தான் அங்கு கூடுதலாக இருப்பதைக் கண்டுகொள்ளலாம். வயது முதிர்ந்த பருவத்தில் அங்குள்ள நூல்களைப் படித்து பயன் கிடைக்கும் அறிவு சமுதாயக் கண்ணோட்டத்தில் எதிர்பார்க்கும் முன்னேற்றத்தைவிட, இங்குள்ள பயன்தரும் நூல்களை இளையவர்கள் கற்பார்களேயானால், சமூக முன்னேற்றத்திற்கு அதிக பலனைத்தரும் என்பதினால் தான் ஔவைளார் நூல்பல கல் என வேண்டுகிறார்.

தமிழகத்திலிருந்து ஒளிபரப்பாகும் சில மாணவ நிகழ்ச்சிகளைக் காணும் வாய்ப்பு கிடைத்தது. அதில் பங்குபற்றும் மாணவர்கள் எடுத்துக்காட்டும் உதாரணங்களையும், பதிவுகளையும் நோக்கும்போது ஔவையார் கூறியபடி பல நூல்களைக் கற்ற அறிவுதான், இங்கு பிரதிபலிப்பதைக் காண மகிழ்ச்சியளிக்கிறது.

ஔவையார் வாழ்ந்த காலத்தில், ஐபோன்களும், அன்ரோயிட்டுகளும் கண்டுபிடிக்கவில்லை. ஏனெனில், அனேக நூல்கள் தரை இறக்கம்செய்யப்பட்டு இச்சாதனங்கள் வழியாக கற்பது வசதியாக இருப்பதை இளையோருக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறோம்.

# கடன்அட்டைகள் மூலம் களவுகள்

நாளாந்த பாவனைக்கு கைகொடுக்கும் கடன் அட்டைகளும் மலிந்துவிட்டன. களவுகளும் மலிந்துவிட்டன. கடன் அட்டைகளின் பாவனையை வங்கிகள், வியாபார நிலையங்கள், தொழில் ஸ்தாபனங்கள் மிக நுணுக்கமாகவும், பாதுகாப்பாகவும் அணுகிய முறைகள் மலையேறிவிட்டது. இரகசிய இலக்கம், இல்லாமலே ஒரு குறிப்பிட்ட தொகைவரை பணம் பட்டுவாடா செய்ய அனேக கடன் அட்டைகள் வசதி செய்துள்ளன. இதற்கும் மேலாக, கைத்தொலைபேசி மூலமே வங்கி விபரங்களை தரை இறக்கம் செய்யவும் இப்போது முடியும். இவை யாவும், பாவனையாளர்களைவிட, களவில் ஈடுபடுபவர்களுக்குத் தான் வசதியாகவிட்டது.

சமீபத்தில் கிடைக்கும் பத்திரிகைச் செய்திகள், தெரிந்த நண்பர்கள் மூலம் அறியும் தகவல்கள் மிரள வைத்துள்ளன. வெளிநாடுகளுக்கு விடுதலையை அனுபவிக்கச் செல்லும் குடும்பங்கள் தங்களுடன் எடுத்துச் செல்லும் கடன் அட்டைகளை பாதுகாப்பாக வைத்துக் கொள்வதில் அசிரத்தையாக இருப்பதினால் களவாடிகளின் கழுகுப் பார்வையில் இவை சிக்கி விடுகின்றன. இக்கடன் அட்டைகளை தொலைத்தவர்கள், தமது பயணக் காப்புறுதிகளை நம்பி, தொலைத்த கடன் அட்டைகளின் விபரங்களை உடனடியாக உரிய வங்கிகளுக்கு தெரிவிக்கத் தவறிவிடுகிறார்கள். இந்த இடைவெளிக்குள் ஏராளமாக தொகை கைமாறுப்பட்டுவிட்டதை பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

இணையத்தளங்களைப் பாவிக்கும் அன்பர்கள், தமக்குக் கிடைக்கும் ஈ-மெயில்களைத் திறக்கும்போது, அதை அனுப்புபவர் தமக்குத் தெரிந்தவரா அல்லது நம்பிக்கையானதா என ஒரு சிறிதளவேணும் சிந்திக்காமல் செயற்படும்போது ஈ-மெயிலைத் திறப்பவரின் தனிப்பட்ட முழுவிபரத்தை அறியக்கூடிய வாய்ப்பு, களவு செய்பவர்களின் கையில் கிடைத்துவிடுவதைத் தடுக்க முடியாமல் போய் விடுகிறது. இத்தகைய துஷ்பிரயோகங்களை தடுக்க வேண்டுமாயின் அத்தகைய ஈ-மெயில்களை அழித்துவிடுவது முன்எச்சரிக்கையாகும்.

இணையத்தின் மூலம் உதவி கேட்பவர்களிடம் உசாராக இருக்க வேண்டிய அவசியத்தை எனது நண்பர்களின் கதைகள் உறுதிப்படுத்துகின்றன. தானமும் தருமமும் நல்லதுதான் ஆனால் இடமறிந்து செய் என்பதே முன்னோர்களின் வாக்கு.

**தகவல் களஞ்சியம்**

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

எக்காரணங்கொண்டும், இணையத்தளத்தில் தப்பித்தவறி வங்கிக் கணக்கு விபரங்களையோ கடன் அட்டைகளின் விபரங்களையோ பதிவு செய்து எதுவித பரிவர்த்தனைகளையும் செய்வதை தடுக்க முடியுமாயிருந்தால் அனேக களவுகளைத் தவிர்க்க முடியுமென ஆலோசகர்கள் கூறுகிறார்கள். களவுகளைத் தடுப்போம்.

# உயிரணுக்களின் உற்பத்திக்கு அங்கீகாரம்

உடல் உறுப்புகளின் மாற்று சிகிச்சைக்கு, அத்தியாவசியமாகத் தேவைப்படும் ஸ்டெம் செல் சிகிச்சைக்கு உட்படுத்தப்படும் நோயாளியின் உடலிலிருந்து பெறப்படும் இரத்த உயிரணுக்களை உட்செலுத்தியோ இதுவரை சிகிச்சை தரப்படுகிறது. இந்த உயிரணுக்களின் செயற்பாடுகள் சீராக இயங்கும்வரை மாற்று உறுப்புகளின் சிகிச்சை முற்றும் முழுவதுமாக பயன் கிடைப்பதில் நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு.

இதற்கு மாற்றுவழி தேடி, ஆராய்ந்த மருத்துவ விஞ்ஞானிகளான அவுஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு மெல்போர்னில் இயங்கும் மெசோபிளான்ட் என்ற நிறுவனம், ரெம்செல் (stemcell) என்ற இரத்த உயிரணுக்களை உற்பத்தி செய்ய அனுமதி பெற்றுள்ளது.

இம்மாதம், ஜப்பானில் UCR என்ற Pharmaceuticals விற்பனை செய்யவிருக்கும் உயிரணுக்களின் வகைகள் வெகு ஆரோக்கியமான 72 கோடி மனிதர்களால், மனிதாபிமானத்துடன் தானம் செய்யப்பட்ட ஸ்டெம் செல் என்று இங்கு குறிப்பிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

இவ்வாறு பெறப்பட்ட இரத்த உயிரணுக்களை, பில்லியன் கணக்கில் பெருப்பிக்கவும் முடியுமென ஆராய்ச்சியாளர்கள் நம்புகிறார்கள். மருத்துவ சாதனைகளில் முன்னோடியாக நிற்கும் ஜப்பான், உலகின் ஏனைய நாடுகளுக்கு உதாரணமாக நிற்பதோடு சர்வதேச அங்கீகாரத்தை ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கிறது. பிரத்தியேக சிகிச்சை நிலையங்களில், இதன் பாவனையை நோயாளிகள் இலகுவில் பெற முடியாத துர்பாக்கிய நிலைமை காணப்படுகிறது.

ஸ்ரெம்செல்லின் பாவனை உலகளவில் அனுமதிக்கப்படும் பட்சத்தில் மனிதரை வாட்டும் இருதய பாதிப்பு, முதுகுக்கீழ் உள்ள தண்டு வலி, மூட்டுவலி போன்ற நோய்களுக்கும் சிகிச்சை தர வேறுபல இரத்த உயிரணுக்களும் தயராக இருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

நல்லதே நடக்கும், காத்திருப்போம்.

*கருத்துக்களுக்கு -*
*facebook.com/orupaper* *@orupaper*

# ஈர்ப்பு அலைகள்

*(18ம் பக்கத் தொடர்ச்சி)*

வெறுமனே செக்கன், நிமிடம் என்ற அளவிடைகளில்மட்டுமே விவரிக்கமுடியாது. வெளியை விவரிக்க காலம் வேண்டும். காலத்தை விவரிக்க வெளி வேண்டும். அதனால் பிரபஞ்ச அமைப்புகளை நீளம், அகலம், உயரம், நேரம் என்ற நாற்பரிமாணங்களைக்கொண்ட SpaceTime என்கின்ற 'காலவெளி' அளவிடைகளிலேயே விவரிக்கவேண்டும் என்று முடிவெடுத்தார்கள். இந்தக் காலவெளி சீரானது. பிரபஞ்சம் முழுதுமே காலவெளியால் நிரப்பப்பட்டிருக்கிறது.

ஈர்ப்புவிசை என்றாலே இரண்டு பொருட்களுக்கிடையே இருக்கின்ற ஒன்றையொன்று இழுக்கும் விசை என்று அறிந்திருக்கிறோம். ஈர்ப்பு விசையின் அளவு திணிவோடு சம்பந்தப்பட்டது. மாங்காய் பூமியை நோக்கி விழுகிறது. பூமி மாங்காயை நோக்கி விழுவதில்லை. காரணம் மாங்காயின் திணிவு பூமியைவிட மிகக்குறைவு. சரி திணிவு அதிகமென்றதற்காக ஏன் மாங்காய் பூமியில் விழவேண்டும்? யார் மாங்காயைத் தள்ளிவிடுகிறார்கள்? ஒரு பொருள் நகர்வதற்கு ஒரு உந்துசக்திவேண்டுமல்லவா? என்று நியூட்டனிடம் கேட்டால் "அது உந்து சக்தி இல்லை, ஈர்ப்பு விசை, திணிவோடு சம்பந்தப்பட்ட ஏதோ ஒரு இழுவைச் சக்தி இருக்கவேண்டும், அதுவும் அந்த விசை அந்தத்திணிவுக்குள்ளேயே எங்கிருந்தோ வரவேண்டும்" என்றார் நியூட்டன். நியூட்டனின் விதிகளின்படி ஈர்ப்பு விசை உடனடியானது. உதாரணத்துக்கு சூரியனின் பூமிமீதான ஈர்ப்புவிசை காலதாமதமின்றி உடனடியாகவே நிகழும். சூரியன் திடீரென்று அழிந்துபோனால் அதன் ஈர்ப்புவிசையும் அழிந்துபோய்விடும். அந்தக்கணமே பூமி சூரியனின் ஈர்ப்புவிசை இல்லாமல் தறிகெட்டு ஓடவேண்டி வரும். இப்படிச்சொல்கிறது நியூட்டனின் ஈர்ப்பு விதி.

ஆனால் சூரியனிலிருந்து ஒரு ஒளிக்கற்றை வந்துசேரவே எட்டு நிமிடங்கள் பிடிக்கும். எப்படி ஈர்ப்புவிசை மாத்திரம் உடனடியாக உணரப்படுகிறது? அப்படியானால் ஈர்ப்புவிசை ஒளியின் வேகத்திலும் அதிகமானதாகிவிடுகிறதே? ஒளியின் வேகத்தைத்தான் பிரபஞ்ச அமைப்பிலே எதுவுமே மீறமுடியாதே? இடறுகிறதே. இறுதிவிக்கட்டான கோலியும் ஆட்டமிழந்துவிடுகிறார்.

ஐன்ஸ்டீன் அப்படியொரு ஈர்ப்புவிசை பொருட்களுக்குள் இல்லவே இல்லை என்றார். சூரியனுக்குள்ளே எந்தவித ஈர்ப்புவிசையும் இல்லை. பூமிக்குள்ளேயிருந்து ஈர்ப்புவிசை தொழிற்படவில்லை. மாங்காயை பூமி 'ஈர்க்கவில்லை'. மாங்காய் விழுவது பூமியின் ஈர்ப்பு விசையால் அல்ல. தள்ளுவிசையால். தள்ளுவது வேறுயாரும் கிடையாது. அந்த SpaceTime என்று அழைக்கப்படுகின்ற 'காலவெளி'யே பூமியைச்சுற்றி வளைந்து தள்ளுகிறது. பூமிமாதிரி மிகப்பருமனான பொருளைச் சுற்றி காலவெளி வளைகிறது. அப்படி வளையும்போது ஏற்படுகின்ற தள்ளுகையாலேயே மாங்காய் பூமியை நோக்கிச் செலுத்தப்படுகிறது. சூரியனைச் சுற்றியுள்ள காலவெளியும் சூரியனைச்சுற்றி வளைகிறது. அதனாலேயே சூரியனைச் சுற்றியுள்ள கோள்கள் சூரியனை நோக்கித் தள்ளப்படுகின்றன. கோள்கள் மட்டுமல்ல. அந்த ஏரியாவுக்குள்ளால் செல்லும் ஒளிக்கதிரைக்கூட காலவெளி சூரியனை நோக்கித் தள்ளப்பார்க்கும்.

ஒரு பெரிய ஸ்ப்ரிங் மெத்தைமேலே நிறைய டெனிஸ் பந்துகளை பரவி வையுங்கள். பின்னர் நடுவிலே மிகப்பெரிய பாறாங்கல்லை மெதுவாகவையுங்கள். பாறாங்கல் மெத்தையை அழுத்த டெனிஸ் பந்துகள் பாறாங்கல்லை நோக்கி உருண்டு வருமல்லவா? இப்போது ஸ்ப்ரிங் மெத்தையை காலவெளிபோன்று யோசித்தால் சூரியன் என்கின்ற பாறாங்கல்லை நோக்கி பூமியும் ஏனைய கிரகங்களும் தள்ளப்படுகின்றன. பாறாங்கல்லின் திணிவு அதிகமாக அதிகமாக மெத்தை இன்னமும் உள்ளே போகும், மெத்தையின் கரைகளிலிருந்த பந்துகளும் உருண்டு வரப்பாக்கும். இப்படி மிகப்பெரிய திணிவுள்ள நட்சத்திரங்களைச்சுற்றி வளைகின்ற காலவெளி எல்லாவற்றையும் உள்ளே தள்ள ஆரம்பிக்கும். ஒரு கட்டத்தில் ஒளியால்கூட அதிலிருந்து தப்பமுடியாது. அந்த வளைவுக்குள்ளே செல்லும் ஒளி வெளியேறமுடியாமல் உள்ளேயே தங்கிவிடும். அவற்றைத்தான் கருந்துளைகள் (Black Holes) என்று அழைப்பார்கள்.

ஒரு பொருளின் திணிவு, சக்தி அடிப்படையில் அந்தப்பொருளைச் சுற்றியுள்ள காலவெளி வளைகிறது என்கின்ற ஐன்ஸ்டீனின் தத்துவமும் அதனடிப்படையிலான விதிகளும் பூமி உட்பட பிரபஞ்சத்தின் எல்லா சட்டங்களுக்கும் பொருந்தின. பிரபஞ்சத்தில் நியூட்டனின் ஈர்ப்பு விதிகளால் விளக்கமுடியாத கருந்துளை போன்ற விடயங்களை எல்லாம் ஐன்ஸ்டீனின் பொதுவிதி விளங்கப்படுத்தியது. பிரபஞ்சம் பற்றிய புதிர்கள் எல்லாம் விடுபட ஆரம்பித்தின.

இந்தப்பொதுவிதியின்படி சூரியன் அழிகின்ற உதாரணத்தை மீண்டும் பார்ப்போம். சூரியன் திடீரென்று அழிந்தால் அதனைச்சுற்றி வளைந்திருந்த காலவெளி குழம்ப ஆரம்பிக்கும். அந்தக்குழப்பத்தின் விளைவாக குளத்தில் கல்லெறியும்போது நீரலைகள் வளையம் வளையமாக பரவுவதுபோல 'ஈர்ப்பு அலைகள்' பரவத் தொடங்கும். அந்த ஸ்ப்ரிங் மெத்தையிலே திடீரென்று நீங்கள் பாறாங்கல்லைத் தூக்கிவிட்டால் மெத்தை உடனே அதிரும் அல்லவா. அதுபோல காலவெளியும் அதிரும். அலைகளைத் தோற்றுவிக்கும். அந்த அலைகளின் பரவுகையோடு காலவெளியின் வளைவும் சீராகும். காலவெளியின் வளைவு சீராக பூமியை அழுத்துவதற்கு ஒரு வளைவும் இல்லாததால் அது தன் பாட்டுக்கு அலைய ஆரம்பிக்கும்! சூரியன் அழியவேண்டுமென்பதில்லை. சூரியன் பிரபஞ்சத்தில் தற்போது பயணம் செய்யும்போதும் அதனைச்சுற்றியுள்ள காலவெளி குழம்புகிறது. ஈர்ப்பு அலைகள் பூமியைத் தாக்குகின்றன.

ஐன்ஸ்டீன் அவ்வாறான ஈர்ப்பு அலைகளும் ஒளியின் வேகத்திலேயே பயணம் செய்யும் என்று கணித்தார். அதுமட்டுமல்ல அந்த ஈர்ப்பு அலைகளின் அலைவடிவத்தைக்கூட அவர் துல்லியமாகக் கணித்தார். சூரியன் என்றில்லை, காலவெளியில் எந்தக்குழப்பம் ஏற்பட்டாலும் ஈர்ப்பு அலைகள் உருவாகும். நான் நடக்கிறேன் என்றால் என்னைச்சுற்றியுள்ள காலவெளி நடக்கும் போது வளைந்துகொண்டே தொடர்ந்துவருகிறது. எறும்பு ஊரும்போதும் காலவெளி அதனைச்சுற்றி வளைகிறது. காலவெளி அப்படி வளையும்போதும் நிமிரும்போதும் தொடர்ச்சியாக ஈர்ப்பு அலைகள் வெளியேறிக்கொண்டேயிருக்கும். ஆனால் அவற்றை உணரமுடியாது. அவை மிகவும் வலுக்குறைந்தவை. காலவெளியில் மிகப்பிரமாண்டமான குழப்பங்கள் இடம் பெறும்போது ஓரளவுக்கு உணரக்கூடிய ஈர்ப்பலைகள் உருவாகும். கருந்துளைகள் ஒன்று சேரும்போதும் மிகப்பெருமளவில் ஈர்ப்பலைகள் உருவாகும். மிகப்பெரிய இரண்டு நட்சத்திரங்கள் மோதிச்சிதறும்போது பெருமளவில் ஈர்ப்பலைகள் உருவாகலாம்.

ஈர்ப்பு அலைகளைக் கண்டறிவது என்பது ஐன்ஸ்டீனின் ஈர்ப்புத்தத்துவத்தை நிரூபிப்பதற்கு மிகத்தேவையான ஒன்று. ஈர்ப்பு அலைகளைக் கண்டறியச் சென்றவருடம்வரை அப்படி ஒரு அதியுயர் திறன்வாய்ந்த கருவியை மனிதகுலம் உருவாக்கியிருக்கவில்லை. ஐன்ஸ்டீன் ஈர்ப்பு அலைகளை உய்த்தறிந்து நூறு வருடங்களுக்குப் பின்னரே ஈர்ப்பு அலைகளை அவர் குறிப்பிட்ட அதே அலை வடிவங்களுடன் ஒரு கருவி கண்டறிந்திருக்கிறது. கிட்டத்தட்ட 1.3 பில்லியன் ஒளியாண்டுகள் தூரத்தில் எப்போதோ இரண்டு கருந்துளைகள் ஒன்றாக இணைந்திருக்கின்றன. அதனால் ஏற்பட்ட காலவெளியின் குழப்பம் தோற்றுவித்த ஈர்ப்பு அலைகளே இப்போது உணரப்பட்டிருக்கின்றன. ஐன்ஸ்டீன் இருந்திருந்தால் சுருட்டைப் புகைத்துக்கொண்டே சொல்லியிருப்பார். "I told you so!"

இந்தக்கண்டுபிடிப்பை ஏன் மிக முக்கியமானதாகக் கருதுகிறார்கள்?

இத்தனை காலமும் அறுபது வருடங்களுக்கு முன்னம்வரை பிரபஞ்சத்தை 'ஒளி'யினூடாகவே மனிதகுலம் அறிந்துவந்துகொண்டிருந்தது. பின்னர் ஐம்பதுகளில் ரேடியோக்கதிர் களை முதன்முதலாக ஆராயத்தலைப்பட்ட பின்னரேயே Cosmic Microway Background என்கின்ற 'பிக்பாங்' உருவாகி சிலவருடங்களில் உருவான அலைகளை விஞ்ஞானிகளால் கண்டறியமுடிந்தது. பிரபஞ்சம் பெருவெடிப்புடனேயே உருவானது என்பதற்கான வலுவான ஆதாரம் அது. இப்போது பிரபஞ்சத்தைப்பற்றி ஆராய புதிதாக ஈர்ப்பு அலைகளும் வந்து சேர்ந்துவிட்டது. தேடல் மேலும் விரியப்போகிறது.

*- நன்றி: படலை இணையம்*

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக **ஒரு பேப்பர்** நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

| பிரித்தானியா: | கனடா: |
|---|---|
| Tel: 020 7043 4315 | Tel: 647-724-4188 |
| Fax: 020 7043 4312 | Fax: 416-438-7855 |

email: **info@orumanam.com**



## மணமகள் தேவை

1. 31 வயது, 5’8’’ Temporary visa, Finished MSc in Software Engineering , தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5132.

2. 35 வயது, 5’1’’ Temporary visa, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5766.

3. 39 வயது, 5’6’’ Temporary visa, Living in France, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5768.

4. 32 வயது, 5’7’’ Temporary visa, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5769.

5. 27 வயது, 5’8’’ Born & brought up in Uk. Graduate working as a Medical sector, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5771.

6. 31 வயது, 6’1’’ Divorced, Born & brought up in UK. Graduate in Bsc & Msc. working as a senior transport planner, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5772

7. 28 வயது, 5’9’’ work permit visa, graduate, working as an IT sales executive, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5777.

8. 48 வயது, 5’0’’ Divorced, Living in colombo, working in a press, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5729.

9. 33 வயது, 5’3’’ Temporary visa, graduate in electrical & electronic engineer, working as a engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5472.

10. 36 வயது, 5’7’’ British citizen, Doctor, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5780.

11. 30வயது, 6’0’’ British citizen, Graduate working in a Business development Mgt company, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5735.

12. 50 வயது, 5’5’’ British citizen, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5738.

13. 34 வயது, 5’7’’ Graduate in Bsc & Msc (Business & information), தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5739.

14. 34 வயது, 5’9’’ Business visa working as an IT Consultant, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5743.

15. 32வயது, 5’9’’ PR. Graduate in Msc working in a project manager construction company as a civil engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5746.

16. 37 வயது, 5’6’’ Temporary visa, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5749.

17. 32 வயது, 5’9’’ British citizen, working in a supermarket, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5181.

18. 47 வயது, 6’0’’ British citizen Machine operator working in a company, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5334.

19. 31 வயது, 5’6’’ British citizen. Doctor, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5406.

20. 33 வயது, 5’6’’ Work permit Graduate in Bsc computer science, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5753.

21. 29 வயது, 6’0’’ student visa Graduate, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5721.

22. 44 வயது, 5’11’’ Divorced self employed, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5725.

23. 32 வயது, 5’5’’ British citizen, Graduate working in a company, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5726.

24. 44 வயது, 5’8’’ British citizen Graduate Now working in Investment bank as an Accountant, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 4558.

25. 46 வயது, 5’8’’ MBA holder Divorced working as a representative marking, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 3856.

26. 35 வயது, 5’8’’ British citizen, Divorced, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5718.

27. 29வயது, 5’5’’ Born & brought up in Uk, Graduate working as an Electronic engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5498.

28. 31 வயது, 5’6’’ Graduate Engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5694.

29. 33வயது, 5’7’’ Student visa working in a Business establishment, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5697.

30. 37 வயது, 5’6’’ British citizen working as a self employee, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5699.

31. 35 வயது, 5’7’’ British citizen Graduate working as a management sector in retails, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5701.

32. 27 வயது, 5’8’’ Born & brought up in Uk. Graduate Msc & Phd working as a medical sector, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5702.

33. 45 வயது, 5’4’’ British citizen, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5672.

34. 33 வயது, 5’7’’ Temporary visa, Completed Bsc & Msc in Software engineer & Information system, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5674.

35. 35 வயது, 5’8’’ Temporary visa, Finished degree in Hotel management, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5676.

36. 29 வயது, 5’5’’ Temporary visa, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5685.

37. 36 வயது, 5’5’’ British citizen, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5686.

38. 31 வயது, 5’8’’ Student visa Graduate in Msc, Engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref5403.

39. 30 வயது, 5’9’’ Born in Kandy brought up in Uk Finished degree in Bsc ACCA. working as a senior accountant, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5687.

40. 30 வயது, 5’10’’ Student visa Finished chartered management level 6. Now doing own business, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5691.

41. 45 வயது, 5’9’’ British citizen, Divorced Graduate engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref5657.

42. 28 வயது, 5’8’’ British citizen, working as a safety security manager, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5653.

43. 34 வயது, 5’5’’ Temporary visa, Finished degree in HND and business management, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5662.

## மணமகன் தேவை

1. 45 வயது, 5’5’’ Finished degree in CEMA & MBA. Working as an accountant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5757.

2. 26 வயது, 5’0’’ Born & brought up in Canada, graduate Now studying achieve maths, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5758.

3. 31வயது, 5’5’’ British citizen, Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5761.

4. 42 வயது, 5’8’’ Divorced, British citizen, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5774.

5. 28 வயது, 5’5’’ Living in Singapore, Graduate engineer, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5779.

6. 23 வயது, 5’4’’ British citizen, Graduate in finance working as a financial sector, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5435.

7. 29 வயது, 5’3’’ DLR visa, graduate in Bsc maths Now studying Msc, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 282.

8. 30 வயது, 5’3’’ British citizen, Graduate working as a podiatrist in NHS. Christian (catholic), தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5400.

9. 31 வயது, 4’10’’ Divorced, British citizen Studying Nurse, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5731.

10. 26 வயது, 4’9’’ British citizen Graduate in Biomedical science working as a Lab technician, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5736.

11. 31 வயது, 5’3’’ Born and brought up in Uk. graduate in maths working as a Maths head, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5742.

12. 26 வயது, 5’4’’ British citizen Finished Bsc working in a headquarter as a IT support, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5748.

13. 23வயது, 5’4’’ Born & brought up in UK. Lawyer, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5752.

14. 26வயது, 5’4’’ Living in Sri Lanka, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5722.

15. 39 வயது, 5’4’’ Divorced, Living in Norway medical sector, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5723.

16. 26வயது, 5’6’’ Born and brought up in UK, Graduate in Bsc & Msc. Working as a pharmacist, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5728.

17. 25 வயது, 5’3’’ British citizen Accountant now doing chartered accountant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5730.

18. 31வயது, 5’2’’ Finished diploma in Preschool, Now working as a teacher, Living in sri lanka, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5705.

19. 30வயது, 5’2’’ Born & brought up in Uk, Graduate in mathematics & management. Working as a teacher & Assistant head, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5706.

20. 29 வயது, 5’2’’ British citizen Graduate in Msc. Now studying Phd, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5710.

21. 29 வயது, 5’2’’ British citizen, Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5719.

22. 29 வயது, 5’4’’ British citizen, graduate working as a Finance project manager, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5720.

23. 26 வயது, 5’2’’ British citizen working as a Lawyer, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5693.

24. 22வயது, 5’1’’ Living in Sri Lanka, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5695.

25. 29வயது, 5’3’’ Born & brought up in UK, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5698.

26. 30 வயது, 5’4’’ Born in Germany brought up in Uk Graduate in Bsc. Now studying in medicine, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5700.

27. 29வயது, 5’2’’ Living in Sri Lanka. working as a accountant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5704.

28. 34வயது, 5’4’’ British citizen graduate in Bsc mathematical computing. Working as a accountant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5504.

29. 29 வயது, 5’6’’ British citizen. Christian working as a Child care, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5505.

30. 38 வயது, 5’5’’ British citizen, Doctor Consultant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5673.

31. 33 வயது, 5’5’’ British citizen Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5677.

32. 25 வயது, 5’4’’ Born and brought up in UK, Finished degree in Sociology Bsc, Now working as a teacher, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5679.

33. 30 வயது, 5’2’’ British citizen Finished degree in Biomedical science and human resource, Now working as a administrator, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5680.

34. 30 வயது, 5’6’’ Born and brought up in Uk. Doctor Specialist, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5681.

35. 28 வயது, 5’6’’ Born & brought up in Uk. Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5683.

36. 35 வயது, 5’5’’ Born & brought up in Uk. Doctor consultant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5688.

37. 28 வயது, 5’3’’ Born & brought up in Uk. Finished degree in Bsc & Msc, working as a medical sector, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5690.

38. 43 வயது, 5’3’’ British citizen, Divorced, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5374.

39. 37வயது, 5’7’’ Living in Sri Lanka. Graduate working as an IT manager in colombo, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5654.

40. 26 வயது, 5’5’’ Born and brought up in UK, Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5656.

41. 34 வயது, 5’4’’ British citizen, Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5659.

42. 49வயது, 5’2’’ Swiss citizen, Living in Swiss, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5667.

43. 29 வயது, 5’3’’ Born & brought up in Uk. Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5632.

44. 24 வயது, 5’2’’ Born & brought up in Uk. Now working in a supermarket manager, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5637.

45. 31 வயது, 5’5’’ Born & brought up in Uk. Finished master degree in social worker. now working as a social worker, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5639.

46. 36 வயது, 5’4’’ British citizen, Studied Phd. Now working as a Consultant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5648.

47. 27வயது, 5’2’’ born & brought up in UK. Finished degree in Msc chemical engineering. Working as a Global multi asset analyst, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5647.

48. 36 வயது, 5’8’’ British citizen, Graduate working as an engineer, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 4153.

49. 36 வயது, 5’2’’ Born & brought up in Uk, Graduate, working as a Lawyer, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5329.

50. 31வயது, 5’6’’ Living in Sri Lanka, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5459.

51. 24 வயது, 5’4’’ Living in India. Graduate, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5597.

52. 24 வயது, 5’4’’ Living in sri lanka. Finished degree in medicine graduate, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5625.

53. 43வயது, 5’6’’ Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5618.

54. 43 வயது, 5’1’’ Living in Sri lanka. Working as a secretary in a company, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5631.

55. 37 வயது, 5’6’’ British citizen doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5598.

56. 30 வயது, 5’2’’ Born & brought up in Uk, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 3627.

இணையத்தில் மேலதிக விபரங்கள்
www.orumanam.com

# குமரிக்கண்டம்



**மாசிலாமணி**

*(ஒரு பேப்பருக்காக)*

குமரிக் கண்டம் அல்லது லெமோரியாக் கண்டம் என்ற சொற்கள் எங்கள் மத்தியில் பரவலாகப் பேசப்படும் சொற்கள். அதற்கான காரணம் அவை எமது தாய்மொழியாம் தமிழுடன் தொடர்பு படுத்தப் பட்டுள்ளதாற்றான். இந்தக் கண்டத்துக்கும் தமிழுக்கும் தொடர்பு உண்டென்பதற்கு ஆதாரத்துடன் உள்ள அம்சங்கள் பற்றிய சிறு கணிப்பே இக்கட்டுரை.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இதிகாசங்களில் கூறப்பட்ட துவாரகா என்னும் கிருஷ்னர் நகரம், இப்போதைய குஜராத்தின் துவாரகா நகருக்குப்பக்கத்தில் கடலுள் காணப்படுகிறது. அது பற்றி விபரம் அறிய உலகு இன்று முனைகின்றது. அது ஒரு நகரம். ஆனால் லெமோரியாவோ ஒரு கண்டம். அதுவும் எமது தாய்மொழியுடன் தொடர்புடைய கண்டம் கடலுள் இருக்கின்றது என்கிறார்கள். நாம் எத்தனை மடங்கு முனைப்புடன் அதுபற்றி அறிய முற்பட வேண்டும்.

இக் கண்டம் பற்றிய கோட்பாடு, அறிவியற் கோட்பாடு. அறிவியலில் காரணம் எதுவுமின்றி கோட்பாடு தோன்றுவதில்லை. ஆபிரிக்கக் கண்டமென்னும் பெரு நிலப்பரப்பிற்கு அண்மையில் ஆயிரம் மைல்கள்வரை நீளமான மடகஸ்கார் என்னும் ஒரு தீவுள்ளது. இத்தீவிற் காணப்பட்ட லெமோர் என்னும் ஒருவகை நரிமுகக் குரங்கினத்தின் உயிர்ச் சுவடுகள் ஆபிரிக்கப் பெரு நிலத்தில் இல்லாது இந்தியாவின் சில பகுதிகளில் காணப்பட்டது. இத்தகவலை அடிப்படையாக வைத்து ஆசியாவுக்கும் ஆபிரிக்காவுக்கும் இடையில் ஒரு கண்டம் இருந்து, அதன் எச்சமாக மடகஸ்கார் போக மிகுதி முழுவதும் கடலில் மூழ்கியிருக்க வேண்டும் என்னும் ஒருகோட்பாடு தோன்றியது. அதன்பின் கண்டத் தட்டின் இயக்க சுழற்சி பற்றிய மேலதிகத் தகவல் கிடைத்தபின் அந்தக் கோட்பாடு தானாகவே வலுவிழந்து விட்டது. ஆதாரமற்ற கோட்பாடுகள் அறிவிலில் மறைவது ஒன்றும் புதிய நிகழ்வல்ல. எடுத்துக்காட்டிற்கு ஆற்றலின் வடிவங்களில் ஒன்றான வெப்பம் திரவ நிலை கொண்ட பொருள் என்ற கோட்பாடுகூட ஒரு காலத்தில் இருந்தது. இன்று அக்கோட்பாடு நகைப்பிற்கிடமான ஒன்றாகி விட்டது. அதே போல் இக்கோட்பாடும், கண்டத் தட்டின் இயக்க சுழற்சிபற்றிய மேலதிகத் தகவல் கிடைத்ததும் அறிவியல் உலகால் தூக்கி வீசப்பட்டது. அது பற்றிய மேலதிக விளக்கம் தருவதன் மூலம் தான் தமிழுக்கும் அதற்கும் இடையில் தொடர்பு உண்டோ இல்லையோ என்பது புரியும்.

இந்தியாவையும் ஆபிரிக்காவையும் இணைக்கும் இந்நிலத்தொடர் திடீரென ஏற்பட்ட அனர்த்தத்தால் கடலுள் மூழ்கியதாக நம்பப்பட்டது. இந்தியாவுக்கும் மடகஸ்காருக்கும் இடையில் உள்ள புவியியல் விலங்கியல் ஒற்றுமைகளின் விளைவாகத் தோன்றிய கோட்பாடு, அறிவியலுக்கு ஒவ்வாதது என்று உணர்ந்தவுடன் தூக்கி எறியப்பட்டது. ஆனாலும் எமது சில தமிழ் எழுத்தாளர்கள் அக்கோட்பாட்டுடன் பலாக் காய்ப்பால் போல் ஒட்டிக்கொண்டு மேலும் கருத்துக்களை அள்ளி வீசுகிறார்கள். அவர்கள் மறவாது முதலில் செய்த வேலை லெமோரியாக் கண்டம் என்ற பெயரை குமரிக் கண்டம் ஆக்கியதுதான்.

மறைந்த பண்டைய பாண்டிய நாகரிகமொன்றிற்கு புத்துயிர் கொடுத்தார்கள். முதிர்ச்சியடைந்த புராதன தமிழ் நாகரிகம் ஒன்று அங்கு கோலோச்சியதாகச் சொன்னார்கள். தமிழ் மொழியை வளர்த்த மூன்று சங்கங்களில் கடைச் சங்கத்துக்கு முந்திய இரு சங்கங்களும் அங்குதான் அமைக்கப்பட்டிருந்ததாகச் சொன்னார்கள். அத்துடன் தமிழின் தொன்மைக்கு அவை சான்று பகர்வதாகவும் தமிழ் பேசிய அப்பகுதியே உலக நாகரிகத்தின் தொட்டில் என்றும் கூறினார்கள்.

லெமோரியா என்ற அதே நிலப்பரப்பே குமரிக் கண்டம் என்ற பெயரில் அழைக்கப் பட்டாலும், அறிவியல் தூக்கி எறிந்ததுபோல் தமிழ் எழுத்தாளர்களால் எறிய முடியவில்லை. வேண்டுமென்று அக்கோட்பாட்டுடன் அவர்கள் ஒட்டிக் கொண்டு இருக்கவில்லை. இந்தக் கோட்பாடு வரு முன்பே தமிழில் கந்தபுராணத்தை எழுதிய கச்சியப்ப சிவாசாரியார் (1350-1420) அண்டத்தின் ஒருபகுதியான இந்தக் குமரிக் கண்டம் குமாரி என்னும் பரதனின் மகளால் ஆளப் பட்டதால் குமரிக் கண்டம் என்ற பெயரில் பூமியின் அரசாகத் திகழ்ந்ததென்று குறிப்பிட்டிருந்தார். இந்தக் கதை இவர்கள் அடிமனதில் ஏதோ கற்பனை உலகை தோற்றுவித்திருக்க வேண்டும். ஆதாரமற்ற புராணக்கதை ஏற்படுத்திய உலகை அவர்களால் தூக்கி எறிய முடியவில்லை.

தமிழை வடமொழியிலிருந்து தோன்றிய ஒரு கிளைமொழி என்று சிறுமைப்படுத்த முற்பட்ட வடமொழி வெறியர்களின் செயலால் விரக்தி அடைந்திருந்த தமிழ் பற்றாளர்களுக்கு ஐரிஷ் நாட்டிலிருந்து சமயப் பணிகளுக்காக தமிழகம் சென்ற Robert Caldwell என்னும் அடிகளாரின் தமிழ் ஆய்வு இவர்களுக்கு எல்லாம் நம்பிக்கை ஊட்டியது. வடமொழியின் கிளைமொழி அல்ல தமிழ். அது தானாகவே வளர்ந்த திராவிட மொழிகளுள் முதன்மையானது என்பதை எந்தவிதச் சந்தேகத்துக்கும் இடமில்லாமல் 1856 ல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலின் மூலம் உலகறியச் செய்தார். பிராமணியத்திற்கும் வடமொழியை தேவ பாஷை என்று தேவையற்று தரம் உயர்த்தும் சேட்டைக்கும் எதிரான நிலைப்பாட்டை உறுதிப்படுத்த கிடைத்த அரிய சந்தர்ப்பமாகக் பலர் இதைக் கருதினார்கள். இவரின் நூல்தான் அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டியது. ஊட்டப்பட்ட அந்த திடமான நம்பிக்கைதான், வடமொழியின் கலப்பால் தமிழ் சீரழிவது கண்டு பொறுக்காது அவர்களின் எழுத்து நடைகளில் முடியுமானவரை வடமொழிச் சொற்களைத் தவிர்க்க வைத்தது. இதில் தமிழ்மேல் தனக்கிருந்த பற்றுக் காரணமாக சூரிய நாராயண சாஸ்திரியார் என்றவர் தன் பெயரை பரிதி மால் கலைஞர் என்று மாற்றினார். சுவாமி வெங்கடாசலம் என்ற இயற்பெயர் கொண்டவர் தன் பெயரை மறைமலை அடிகள் என்று மாற்றினார்.

இப்போ திரும்பவும் விடயத்திற்கு வருவோம். கன்னிய குமரிக்குக் கீழே ஒரு கண்டம் இருந்து நீரில் புதைந்தது உண்மை நிகழ்வோ? புவியியலாளர்கள் பதிவுகளின்படி சிறு சிறு நிலப் பரப்புக்கள் அப்படிப் புதைந்த பதிவுகள் உள்ளன. ஏன் தமிழ் நாட்டிலேயே மகாவலிபுரத்தில் அப்படியான பதிவுகள் உண்டு. ஆனால் கண்டங்கள் போன்ற பெரு நிலப் பரப்புக்கள் புதைந்ததற்கான சான்றுகள் இல்லை.

இலட்சக்கணக்கான ஆண்டுகளிற்கான பதிவுகளில்கூட அப்படி ஒன்று நிழ்ந்ததில்லை. ஆனால் பெரு நிலப் பரப்புக்கள் ஒன்றை விட்டு ஒன்று பிரிந்திருக்கின்றன. ஏன் எமது உலகுகூட ஒரு காலத்தில் பங்கஜியே என்னும் ஒரு தனிக் கண்டமாக இருந்து கண்டங்களாகப் பிரிந்தது தானே. முழு இந்திய உபகண்டமே தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்து இமய மலையுடன் சேர்ந்ததுதானே. மடகஸ்காரும் தமிழ்நாடும் இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரே நிலப் பரப்பாக இருந்து பிரிந்திருக்கலாம். ஆனால் எந்தப் பதிவுகளிலுமே தமிழ் நாட்டுடன் சேர்ந்திருந்த பெரு நிலப் பரப்பொன்று கடலில் மூழ்கியதாக தகவல் இல்லை.

நிலை இப்படி இருக்கும்போது எம்மில் பலர் குமரிக் கண்டம் என்று ஒன்றை வைத்து தமிழின் தொன்மை பற்றி பேசுகிறார்கள். எமது தாய் மொழி தொன்மைச் சிறப்புக் கொண்டதென்றால் எம் எல்லோருக்கும் பெருமைதானே. இருந்திராத ஒரு கண்டத்தை மையமாக வைத்து கண்டம் மறைந்தபோதும் நீ நிலைத்து நிற்கிறாய் என்பது எமது மொழியை இழிவு படுத்தும் செயல். எமது மொழியின் தனித் தன்மை பாது காக்கப்படவேண்டும். எமது மொழி வளர வேண்டும். இது எமக்கு இருக்கவேண்டிய நியாயமான விருப்பு. அதற்காக ஆதாரமற்ற தகவல்களின் அடிப்படையில் எதையாவது கூறுவதும் வேண்டுமென்றே உண்மையை மறைப்பதும் தமிழ் மொழியின் மதிப்பை இழக்கச் செய்யும் செயல்களாகும்.

தமிழ் வளர்த்த சங்கங்கள் என்றால் எங்கள் உள்ளங்களில் தனி மதிப்பு உண்டு. ஆனால் அவை பற்றிய பதிவுகள் இவை உண்மையான தகவல்கள்தானோ என்று எண்ண வைக்கும் போது உள்ளம் பாதிப்படைகிறது. தகவல்களின்படி பார்த்தால் கடலுள் ஆவணங்களைத் தொலைத்த முதல் இரண்டு சங்கங்களுமே எண்ணாயிரம் ஆண்டுகள்வரை நீடித்திருக்கின்றன. இரண்டிலுமே அகத்தியர் இருந்திருக்கின்றார். அது சாத்தியப் படலாம், ஒன்றின் முடிவிலும் மற்றையதன் தொடக்கத்திலும் இருந்திருக்கலாம். அதன்பின் வடமதுரையில் இருந்த கடைச் சங்கம் வடமொழியிலிருந்து தான் பெற்ற சங்கம் என்னும் பதத்துடன் 1850 ஆண்டுகள் நீடித்துள்ளது. இவற்றுள் சொல்லப்படும் இன்னொரு வேடிக்கை சிவன், குபேரன், முருகன் ஆகிய கண்ணுக்குப் புலப்படாத் தெய்வங்களும் முதல் சங்கத்தில் பங்கேற்றுள்ளார்கள் என்று சொல்லப் படுகிறது. 5000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த திராவிட நாகரிகமான சிந்துவெளி நாகரிகத்தின் மக்களே குறியீடுகளை எழுத்துகளுக்குப் பதிலாகப் பயன் படுத்தினார்கள். அதற்கு முந்திய முதற் சங்க மக்கள் படித்த கல்விமான்களாகச் சித்தரிக்கப் படுகிறார்கள்.

இலட்சோப இலட்சம் ஆண்டுகளுக்கு முந்திய புவியியல் நிகழ்வுகளை சில ஆயிரம் ஆண்டுகளுக்கு உட்பட்ட தற்போதைய வரலாற்றுடன் தொடர்புபடுத்திப் பேசுவதை 1956ல் நீலகண்ட சாஸ்திரியார் கடுமையுடன் சாடினார். 1966ல் சுப்பிரமணியன் என்னும் வரலாற்று அறிஞர் கல்வி முன்னேறிய இந்நாட்களில் வரலாற்றுக்கு எதிர் விளைவாக அமையும் நிகழ்விற்கு எடுத்துக்காட்டு இந்தக் குமரிக் கண்ட கோட்பாடு என்றார்.

இந்த மூன்று சங்கங்களும் மொத்தம் 10000 ஆண்டுகள் வரை நீடித்திருக்கின்றன என்று கூறுகிறார்களே அன்றி ஒன்றுக்கொன்று எவ்வளவு காலம் இயங்காதிருந்தன என்ற தகவல்கள் இல்லை. சில தகவல் மொழியியலாளர் கோட்பாடுகளுக்கு முரணானதாக உள்ளது. தமிழ் நாட்டு அரசின் அகராதி ஒன்றின்படி இந்தக் குமரிக் கண்ட நாகரீகம் கி.மு. ஐம்பதினாயிரம் அளவில் கோலோச்சி இருந்ததாகச் சொல்லப் படுகிறது. கி.மு 16000 ஆண்டளவில் தான் கடலினுள் மூழ்கியதாம். மொழியியலின்படி மொழிகளின் தொடக்கமே 50 ஆயிரம் ஆண்டுகள் தான். தொடக்க காலத்தில் மக்கள் நாடோடிகளாகவே மொழியைப் பேசியிருப்பார்கள். எம் தாய் மொழியாம் தமிழில் நாம் பற்றுடையவர்கள் அதற்காக கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து முன்தோன்றியது தமிழ் என்று கூறி வரலாற்று விதிகளுக்கு புறம்பான முறையில் சொற்களை எடுத்து வீசி எம்மொழியை தரம் குறையச் செய்யாது பார்ப்பதும் எம் கடமைகளில்ஒன்று.

கிமு 300 ஆண்டுக்கு முந்திய தமிழின் கல்வெட்டுப் பதிவுகள் எதுவுமே இல்லை. அப்போது எப்படி 50000 ஆயிரம் ஆண்டுகள் பற்றி பேசுவது?

ILC Tamil Radio

தமிழ் மக்களின் உரிமைக்குரலாய் ஒலிக்கும் ILC தமிழ் மக்கள் வானொலி 2016 இல் புதுப்பொலிவுடன்……

தாயக தேசிய அரசியல் நிகழ்ச்சிகள் மற்றும் சிறியவர் முதல் பெரியோருக்கான பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள்

அனைத்துலக உயிரோடை தமிழ் மக்கள் வானொலி

நாள் தோறும் மதியம் 12 மதியம் முதல் இரவு 10 மணி வரை ஒலிபரப்பை கேட்டு மகிழுங்கள்

0208 930 5341 - 07754 323969

அனைத்துலக உயிரோடை தமிழ் வானொலி கேட்கும் முறைகள் | www.ilctamil.com | eurobird 11919 | smart phones

நிகழ்ச்சிகளில் பங்குபற்ற அழையுங்கள் | 020 3286 4959 | Skype : ilctamililctamil | Face Book : ILC Tamil Radio

# ஒரு அரசியல் தில்லாலங்கடி




• எனது மகளின் தாயார் என்றாலும் எனது மனைவி என்று சொல்ல மாட்டேன்.

• மத்திய அரசாங்கத்திற்கு கண்டனம் ஆனால் ஆதரவு வாபசில்லை.

• தண்டவாளத்தில் தலை வைப்பேன் ஆனால் ரயில் வராது.

• தேசியத் தலைவர் பிரபாகரனை ஆதரிக்கவில்லை , ஆனால் இறந்த புலிகளுக்கு இரங்கற்பா வாசிப்பேன் .

• சாமியார்களை கண்டிப்பேன் ஆனால் சாய்பாபா விடம் குங்குமம், விபூதி வாங்கிக் கொள்வேன்.

• வெறும் 10 கோடியில் ஆரம்பித்த கலைஞர் டிவிக்கு பல வட இந்திய நிறுவனங்களிடமிருந்து (ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் லாபம் அடைந்த) 214 கோடி வாங்கி இருப்பேன், ஆனால் இதை CBI கண்டு பிடித்து கேட்டால் கடன் வாங்கினேன் என்பேன், இரண்டே நாளில் திருப்பி யும் கொடுத்து விடுவேன்.

• கண்ணகிக்கு சிலை எழுப்புவேன், ஆனால் தெரு விற்கு ஒரு மனைவி, துணைவி, இணைவி, அணைவி, குழவி...... என வைத்துகொள்வேன்.

• டெசோ ஈழத்திற்கு போராடும் என்பேன். ஆனால் அதில் தனி ஈழ தீர்மானங்கள் இருக்காது.

• இலங்கை கடற்படையினர் ராமேஸ்வரம் மீனவர் களை சுடுவதை வன்மையாக கண்டிப்பேன். ஆனால் இந்த துப்பாக்கிசூடு சம்பவங்களுக்கு காரணமான கச்சை தீவை இந்திரா இலங்கைக்கு கொடுக்கும் போது, முதலில் எதிர்த்து, பின்னர் அரசு ஊழல் வழக்குகள் தூசு தட்டபடும் என சொன்ன உடன் சம்மதித்து விட்டேன்.

• ஊழலுக்கு நான் நெருப்பு என்பேன். ஆனால் என் குடும்பத்து உறுப்பினர்கள் அனைவரின் சொத்துக ளையும் கூட்டினால் உலக முதல் பணக்காரன் நான் தான்.

• 90 வயதுக்கு மேலும் நான் கட்சித் தலைமை யிலிருப்பேன். அதேபோல் உடன் பிறப்புக்களின் பண பலத்தால் தேர்தலில் வெற்றிபெற்றவுடன் நானே தான் முதல்வராய் ஆட்சியில் அமர்வேன்.

• தமிழ் மக்கள் இந்தி படிக்க கூடாது என்பேன். ஆனால் பேரன் தயாநிதிக்கு இந்தி நல்லா தெரியும் என கூறி, மத்திய அமைச்சர் பதவி வாங்கி கொடுப்பேன்.

• 62 வயதிலும் மகன்தான் இளைஞரணிக்குப் பொறுப் பாயிருக்கக் கட்டளையிடுவேன்

• அன்பழகனை கட்சியில் இரண்டாம் இடத்தில இருக் கிறார் என்பேன், ஆனால் துணை முதல்வர் பதவியை மகன் ஸ்டாலினுக்கு தான் கொடுப்பேன்.

• தமிழ் மக்கள் கடுமையான மின் வெட்டினால் பாதிக்கவடுவதை என்னால் தாங்கி கொள்ள முடிய வில்லை என்பேன். ஆனால் மத்திய தொகுப்பில் இருந்து மின்சாரத்தை தமிழ் நாட்டிக்கு ஒதுக்க கூடாது என கண்டிப் பாக மத்திய அரசிடம் திரை மறைவில் சொல்லி விடுவேன்.

• வால் மார்ட் தமிழகத்தில் வந்தால் கடும் போராட்டம் நடத்துவேன் என்பேன் ஆனால் ஓட்டெடுப்பின் போது FDIக்கு ஆதரவாக ஓட்டை போட்டு விடுவேன்.

• ஈழத்தில் போர் நின்றுவிட்டது என்று பிரணாப் தான் தவறான செய்தியைக் கொடுத்தார் என்பேன், ஆனால் அவர் ஜனாதிபதி ஆவதற்கு நான் முதல் ஆளாக முன் மொழிவேன்.

• தமிழர்கள் டெல்லியில் உயர் பதவியில் வருவதை தான் நான் எப்போதும் விரும்புவேன் என்பேன். ஆனால் டாக்டர் அப்துல் கலாம் இரண்டாவது முறையாக குடியரசு தலைவராக வர இருந்த நிலையில் அவருக்கு ஆதரவு இல்லை என்பேன்.

• 'அரசியல் சட்டத்தைக் கொளுத்துவோம்' - ன்னு வீராப்பு பேசுவேன், அதே மாதிரி கொளுத்தி கைதாகி தண்டனை கடுமையாக இருக்கும்,,,, சிறை செல்ல வேண்டி வரும் என தெரிந்த நிலையில் 'வெறும் காகிதத் தைத்தான் கொளுத்தி' காமெடி செஞ்சிட்டு வெளியே வந்து விடுவேன்.

• BJP யை மத வாத கட்சி என்பேன், ஆனால் முஸ்லீம் லீக் உடன் கூட்டணி வைத்து கொள்வேன்.

• ராஜபக்சேவை எதிர்ப்பேன் ஆனால் அவரை சந்திக்க என் கட்சிக்காரரை அனுப்புவேன்.

• டீசலுக்கு இரட்டை விலை முறைக்கு எதிர்ப்பு தெரி விப்பேன். இது தொடர்பான அமைச்சரவை கூட்டத்தில் இரட்டை வரி விதிக்க ஆதரவு தெரிவித்து விடுவேன்.

• தமிழ் தமிழ் என கத்துவேன் ஆனால் தெலுங்கு வருட பிறப்பிற்கு தமிழ் நாட்டில் அரசு விடுமுறையை அறி வித்து விடுவேன்.

• காங்கிரசுடன் கூட்டணி இனிமேல் இல்லையென் பேன்.. ஆனாலும் பிறகு கூட்டணி வைப்பேன்

• தற்போதைய முதலமைச்சர் ஜெயலலிதாவின் 'ஸ்டிக்கர் பாய்ஸ்' ஒட்டும் ஸ்டிக்கர்களுக்கு எதிராக "பொதுமக்களின் பணம் வீணடிக்கப்படுவருகிறது " என கடும் விமர்சனம் செய்வேன். ஆனால் என் உடன் பிறப்பு கழகத் தொண்டர்கள் எதுசெய்தாலும் கண்டு கொள்ளமாட்டேன் ஸ்டிக்கர் ஒட்டுவது உட்பட.

இது தெரிந்தும்

கருணாநிதியை ஆதரிப்பார்கள் என்றால் அவர்கள் எப்படி?

*இமயவரம்பன் (Facebookஇலிருந்து)*

## என் தாய் நிலமே இன்னும் எத்தனை காலங்கள் இந்த பிரிவு ?

தேசம் இட்ட கட்டளையால்
முள் வேலி நாம் கடந்தோம்
எமக்கான தேசத்துக்காய்
நெருப்பாற்றை தினம்
கடந்தோம்
பல நாட்கள் கால் நடந்தே
எமக்கான இடம் தேடினோம்

புரியாத பாசையில்
தெரியாத தெருக்களில்
இட்ட பணிக்காக.. அது,
நிறைவேற்றி நாம்
நடந்தோம்
துரோகங்கள் கை காட்டி
உயிர் பிரிந்த தோழர்
உடல் புதைத்து
அவர் கனவையும்
நாம் சுமந்தோம்
பலநாள் பட்டினி கிடந்து
அழுக்குடையுடன்
இலக்கு தேடி
தெருவோரம் நாம்
நடந்தோம்

விடிகாலைப் பொழுது
நாய்கள் குரைக்க
எதிரி பாதணி சத்தம்
எமை நெருங்க
சையனைட் வில்லையை
தானாய் கை தேடும்

வந்த சத்தம் அது விலக
உதட்டோர புன்னகையுடன்
தோழர் சிரிக்க
அன்றைய பொழுது
எமக்காகும்

தினம் பல காவலரண்
நாசுக்காக நாம் கடந்தோம்
எதிரியை காணும் போதெல்லாம்
அவனை கொல்லும் எண்ணம்
உள் மறைத்து

புன்னகையுடன் பதில் சொல்லி
விடை பெறும் போது
உள் வலிக்கும் மனது

ஆனபோதும் கொள்கை கைவிடாது
பல காவு நாம் வாங்கினோம்
கந்தகவீரர் கைப்பற்றி
விடை பெற்ற
கையனைப்பின் கதகதப்பை
இன்றும் தினம் உணர்கின்றேன்

ஒன்றாய் களம் கண்டவர்
மரணச் செய்தி
வான்வெளியில் தினம்
அறிந்த போது
விழிநீர் துடைத்து
மனம் இறுக்கி வழி நடந்தோம்

மனிதம் கடந்த
வலிகள் எல்லாம்
நாம் சுமந்தோம்
எம் தேச விடுதலைக்காக

கையெட்டும் தூரம்
அது கடந்தபோதும்
மனம் ஏனோ
சுற்றி வருகின்றது
என் தேசத்தை.!
என்று என் பாதம்
உன் மடியில் நான்
புதைப்பேன் என் தாய்நிலமே..

*– வலிகளுடன் துரோணர்.!*

## எதிர்காலம் அறியாப் பிஞ்சுகள்..!

பிஞ்சு முகமதில்
கறை கண்டேன்
இளம் கரும் மொழியில்
பயம் கண்டேன்
ஒட்டிய வயிற்றில்
கிருமிகளின் அலறல்
கேட்டேன்
சோர்ந்து நடக்க மறுக்கும்
பின்னிய கால் கண்டேன்
எதிர்கால கனவில்லை
அவளிடம்
ஒரு வேளை உண்ண
உணவில்லை என்பதால்
ஏக்கத்தில் பார்த்த பார்வை
என்னை தடுமாற
வைக்கிறது
நானும் தான் விழுந்து
போனேன்
மனம் எனும் ஒன்று
பாறாங்கல் இல்லை
என்பதால்

ஓடி வந்து உனை
அணைக்க
ஆசையடி மயிலே
சாதியை முன்னிறுத்தி
கறுப்பு கொடி காட்டுகிறது
சமூகம் எனும்
சாக்கடை கிடங்கு
மறைமுகமாக உனையணைத்து
உணவு கொடுத்தேன்
முள் கம்பிகளின் பின்னால்
இருந்து பல கைகள்
என் முதுகை தடவுகிறது
உனைப்போல பல
எதிர்காலம் அறியாத
பிஞ்சுகள்

என்ன செய்வேன் நான்
முதலாளிகளின்
அடிமை வர்க்கம் நானும்
உனக்கும் புரியாது நானும்
இரவலில் வாழும்
அடிமையென்று

உனை நினைத்து
கவலைப்பட நானும்
எனை நினைத்து
கவலை கொள்ள
வெறுமையும் போதும்
அடுத்த வேளை சோற்றை
தேட...

*– பவித்திரா நந்தகுமார்*
*(வெளிச்சவீடு இணையம்)*

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....



seven | zero
graphic designers
020 7043 4310
G11, LOMBARD HOUSE | 2, PURLEY WAY | CROYDON | CR0 3JP

creative artwork from concept to design

# சினிமா




விமர்சன ரீதியில் நல்ல பெயரை வாங்கினாலும் வெகு ஜனங்களின் அபிமானத்தை பெறத்தவறிய படம் அருண் குமார் இயக்கத்தில் விஜய் சேதுபதி நடித்த பண்ணை யாரும், பத்மினியும். இம்முறை இருவரும் 'சேதுபதி' எனும் போலீஸ் கதையுடன் களம் கண்டிருக்கிறார்கள். தயாரிப்பு: 'வன்சன் மூவிஸ்' ஷான் சுதர்சன்.

சப் இன்ஸ்பெக்டர் சுப்பராஜை அடையாளம் தெரியாத நபர்கள் எரித்து கொன்று விடுகிறார்கள். 'போலீஸ்காரர் என்கிற பயமின்றி இதனை செய்தது யார்?' என மீசையை முறுக்குகிறார் நேர்மைமிகு இன்ஸ்பெக்டர் சேதுபதி. பின்னணியில் இருப்பது, அந்த ஊரில் மிகப்பெரும் கட்டப் பஞ்சாயத்து நடத்தும் வாத்தியார் என்பவர் தான் இந்த கொலைக்கு காரணம் என தெரிகின்றது. ஊரே அவரை பார்த்து பயந்து நடுங்கும் நேரத்தில் சேதுபதி தைரியமாக அவரை கைது செய்கின்றார். இந்த அவமானத்திற்காக விஜய் சேதுபதியை பழிவாங்க, செயின் திருட்டு வழக்கில் வரும் சிறுவர்களை துப்பாக்கியை காட்டி மிரட்டி விசாரிக் கும் போது, யாரோ துப்பாக்கியை ரீலோட் செய்து அவர் கையில் கொடுக்கின்றனர். அவரும் யதார்த்தமாக சுட, சிறுவன் கழுத்தில் புல்லட் பாய்கின்றது. இதன் பிறகு விஜய் சேதுபதியை தற்காலிக வேலை நிறுத்தம் செய்ய, வாத்தியார் ஆட்டம் அதிகமாகின்றது. இங்கு சேதுபதிக் கும், வாத்தியாருக்குமான ஆடுபுலி ஆட்டம் ஆரம்பம்.

'சகா' சிவகார்த்திகேயன் வரை காக்கிச்சட்டைக்கு வேலை தந்தாகிவிட்டது. இனியும் பொறுப்பதில்லை. விறைப்பாய் மீசையை தடவியபடி புல்லட்டில் பவனி வர நேரம் கனிந்திருக்கிறது விஜய் சேதுபதிக்கு. 'காக்க காக்க' சூர்யாவின் க்ளாஸ் அல்லது 'சாமி' விக்ரமின் மாஸ்.. இரண்டையும் கலந்தடிக்க முயற்சித்திருப்பது விபரீத முயற்சி. இப்படி ஒரு கதாபாத்திரத்தை சிருஷ்டித்து விஜய் சேதுபதியின் தோளில் இருந்து சில ஸ்டார்களை இறக்கி யிருக்கிறார் இயக்குனர் என்றுதான் சொல்ல வேண்டும். 'இதுதான்டா போலீஸ்' என சிலிர்த்துக்கொள்வதற்கான தருணங்கள் மிகவும் சொற்பம்.

படத்தின் மிகப்பெரிய அம்சம் விஜய் சேதுபதியின் கதாபாத்திர வடிவம் தான், ஒரு மாஸ் போலிஸ் என்றாலும் எந்த இடத்திலும் செயற்கையாக தெரியக்கூடாது என்று கொஞ்சம் மெனக்கெட்டுள்ளனர். குழந்தை முன்பு புகார் கொடுக்க வரும் கணவனை, குழந்தையை வெளியே போகச் சொல்லி விட்டு திட்டுவது, தன் மகள் முன்பு மனைவியை அடித்தததை சமாளிப்பது என யதார்த்த பொலிஸ் இந்த சேதுபதி.

'காவல் நிலையத்தில் பள்ளி சிறுவனை விசாரிக்கும் போது தோட்டா வெடித்தது எப்படி?' என தீர விசாரிப் பது மற்றும் வாத்யாரின் அடியாட்கள் தனது குடும் பத்தை ரவுண்ட் அப் செய்கையில் மீள்வதற்கு புத்திசாலித் தனமாய் யோசனை தருவது என இவ்விரண்டு ஏரியாக் களில் மட்டுமே சேதுபதி திரும்பி பார்க்க வைக்கிறான். மனைவியாக வரும் ரம்யா நம்பீசன் மற்றும் இரு குழந்தை களிடம் (விஜய்) சேதுபதி உருக உருக காட்டும் அன்பும், ஊடலும் பெரிதாய் எடுபடவில்லை.

மதுரையின் வாத்யாராக வேல ராமமூர்த்தி. பொதுவாக இதுபோன்ற கேரக்டர்களுக்கு ஆண்டவர், பெரியவர், பெருமாள் பிச்சை என்றுதான் நாமம் சூட்டப்படும். ஆனால் சிம்பிளாக வாத்தியார் என்று வைத்திருப்பது ஆச்சர்யம். ஒருவேளை கேரக்டருக்கே உரித்தான டெரரை நடிப்பில் காட்டி விடலாம் எனும் அபரிமிதமான நம்பிக்கையாகவும் இருந்திருக்கலாம். இவரது அடி யாளை 'டேய்.. அப்படி மொறைக்காத.. சிரிப்பு சிரிப்பா வருது' என்று பகடி செய்வார் சேதுபதி. வேல ராமமூர்த்தி யிடம் சொல்ல வேண்டிய வசனத்தை இப்படி ஆள்மாற்றி சொன்னால் பணியிடை நீக்கம் செய்யப்படுவதில் தவறே இல்லை. வே.ரா.மூர்த்தியின் கொடுங்கோல் நடிப்பு படம் பார்ப்போரை நிச்சயம் இரண்டு தினங்களாவது தூங்க விடாது. தேசிய விருது பெறப்போவதற்கு அட்வான்ஸ் வாழ்த்துகள் வாத்யாரே !!

குறும்பட சாயல்கள் இருந்தாலும் பண்ணையாரும் பத்மினியும் ஒரு ரசனையான படைப்பு. ஆனால் சேதுபதி போன்ற போலீஸ் கதையிலும் இயக்குனர் அருண் குமாரின் குறும்பட பாதிப்பு அடர்த்தியாய் இருப்பது பெரிய பின்னடைவு. விறுவிறுப்பற்ற திரைக்கதை, அவ்வப் போது வந்து செல்லும் அமெச்சூர்தன காட்சியமைப்புகள் (உதாரணம்: சேதுபதியை விசாரணை கமிஷன் அதிகாரிகள் கேள்வி கேட்பது), தம்படி பெறாத வில்லன் மற்றும் அடியாட்கள், சோதா க்ளைமாக்ஸ் என நிறைய சொல்லலாம். எனினும் படத்தின் இரண்டாம் பாதி, விறு விறுவென செல்கின்றது.

தினேஷ் கிருஷ்ணன் ஒளிப்பதிவு பல காட்சிகள் மிகவும் சிறப்பாக உள்ளது, அதை விட ஸ்ரீகர் பிரசாத்தின் எடிட்டிங், வேகமான திரைக்கதைக்கு இன்னும் சிறப்பக் கூட்டியிருக்கின்றது.

தெகிடி படத்தை தொடர்ந்து நிவாஸின் இசை சேதுபதியி லும் மிரட்டல். ஆனால், தீவிர அனிருத் ரசிகராக இருப்பார் போல, விஐபி, காக்கிசட்டை இசையெல்லாம் வந்து போகின்றதே.

நட்பிற்கான படம் செய்து தோற்றாலும் அவர்களை மீண்டும் கைதூக்கிவிட வாய்ப்பை தருவது பெருந்தன் மையான விஷயம்தான். ஆனால் கதை கேட்பது உள் ளிட்ட அத்யவாசிய இலாக்காக்களில் தனது பிடியை தளர்த்தினால் விஜய் சேதுபதிக்கு ப்ரமோஷன் எளிதில் கிடைக்காது. அதனை சேதுபதி மூலம் நிச்சயம் புரிந்து கொள்வார்..! மொத்தத்தில் சேதுபதி - விஜய் சேதுபதி ரசிகர்களுக்கான படம்.

*- நிஷா (நிலாச்சாரல் வலைப்பூ)*

## சினித்துளி

### இளையராஜாவுக்கு எதிர்ப்பு !



பாலா இயக்கிய தாரைதப்பட்டை இளையராஜாவின் ஆயிரமாவது படம் என்று அறிவித்தார்கள். அந்தப் படத்தின் பாடல் வெளியீட்டுவிழாவை ஆயிரம்படங்க ளுக்கு இசையமைத்த இளையராஜாவுக்கான பாராட்டு விழாவாக நடத்தத் திட்டமிட்டிருந்தனர். இளைய ராஜா மியூசிக் மேனேஜ்மெண்ட் நிறுவனமும் விஜய் தொலைக்காட்சியும் இணைந்து, இளையராஜாவுக்குப் பிரமாண்ட பாராட்டு விழாவை 27 ஆம் தேதி சென் னையில் நடத்துவதாக அறிவித்திருக்கின்றனர்.

இந்நிலையில் திரையுலகம் சார்பில் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருப் பதாகச் சொல்லப்படுகிறது. விஜய்தொலைக்காட்சிக்கும் தயாரிப்பாளர்க ள்சங்கத்துக்குமிடையே இருக்கும் தொலைக்காட்சி உரிமம் வாங்குவது தொடர்பான பிரச்சினையே இதற்கான காரணமாம்.

### மாதவன்-விஜய் சேதுபதி கூட்டணி !



இறுதிச்சுற்று படம் வெற்றி என்றவுடன் மாதவனை வைத்து அடுத்து ஒரு படத்தைத் தயாரிக்கவிருக்கிறது y not studios . ஏற்கெனவே இந்நிறுவனம் தயாரித்த வ குவார்ட்டர்கட்டிங் என்கிற படத்தை இயக்கிய புஷ்கர் காயத்ரி தம்பதியினர்தான் அந்தப்படத்தை இயக்க விருக்கிறார்களாம். இந்தப்படத்தில் மாதவன் நடிப்பது மட்டுமின்றி அவருடன் இன்னொரு நாயகனாக விஜய் சேதுபதியும் இணையவிருப்பதாகச் சொல்கிறார்கள். இருவரிடமும் கதை சொல்லிவிட்டார்களாம்.

இரண்டுநாயகர்கள் படம் என்றாலும் படத்தின் கதை மிகவும் நன்றாக அமைந்திருப்பதால் விஜய்சேதுபதி இப்படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டி ருப்பதாகச் சொல்கிறார்கள்.

### பிச்சைக்காரன் வரும் மார்ச் வருகிறது !



நான், சலீம், இந்தியா பாகிஸ்தான் என வரிசையாக தனது படங்களில் புதுமை (?) காட்டி வரும் விஜய் ஆண்டனி தற்போது நடித்திருக்கும் படம் 'பிச்சைக் காரன்'. ஐந்து ஐந்து ஐந்து படத்திற்குப் பிறகு இயக் குனர் சசி இயக்கியிருக்கும் இப்படத்திற்கு நாயகன் விஜய் ஆண்டனியே இசையமைக்கும் பணியையும் கவ னித்திருக்கிறார். அதோடு இப்படத்திற்கு தயாரிப்பா ளரும் அவரே. படத்தை மார்ச் முதல் வாரமான 4ஆம் தேதி களமிறக்கத் திட்டமிட்டிருக்கிறார்

### மாற்று மொழிகளில் 'விசாரணை'



வெற்றிமாறன் இயக்கத்தில் சமீபத்தில் வெளியாகி வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் படம் 'விசா ரணை'. தினேஷ், சமுத்திரகனி, ஆனந்தி உட்பட பலர் நடித்துள்ள இப்படம் ஏற்கெனவே பல சர்வதேச திரைப் பட விழாக்களில் திரையிடப்பட்டு விருதுகள் பெற் றுள்ளன ! அத்துடன் இப்படம் தற்போது ரசிகர்களிட மும், விமர்சன ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்றி ருப்பதோடு, பல பிரபலங்களின் பாராட்டுக்களையும் அள்ளி வருகிறது.

இந்நிலையில் இப்படத்தின் ஹிந்தி ரீ-மேக் உரிமையை பிரபல இயக்குனர் பிரியதர்சன் வாங்கியுள்ளார் என்ற தவகல் வெளியாகியுள்ளது. இப்படத்தை விரைவில் ஹிந்தியில் பிரியதர்சன் இயக்கவிருக்கிறார் என்றும் அதில் அக்ஷய் குமார் நடிக்கவிருப்பதாகவும் தெரிகிறது

GYPS Pest Control Services
லண்டன் மாநகரில் முதல் முதலாக தமிழர்களால்
தமிழர்களுக்காக தொடங்கப்பட்ட ஒரே நிறுவனம்


எலி, சுண்டெலி
மூட்டைப்பூச்சி
கரப்பான், எறும்பு
மற்றும் பல பூச்சிகள்
இவை அனைத்தையும் அழித்து உங்களுக்கு
நிரந்தர பாதுகாப்பும் நிம்மதியான நித்திரையும்
தருவதே எங்கள் சேவை. உணவகங்கள்
கடைகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு
Monthly or Quarterly Pest Control Visit
மிகவும் மலிவான விலையில் ஆனால் மிகுந்த
தரத்துடன் செய்து தரப்படும்
07778080555 - 07723467012

Violin, Keyboard & Guitar

புதிய வகுப்புக்கள்
ஆரம்பமாகவுள்ளன
அனுபவம் மிக்க ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது
OEBL , OFAL Syllabus,
Trinity college Syllabus க்கு
ஏற்ப கற்பிக்கப்படுகிறது.
இடம் : New Malden Centre and
Rosehill Roundabout.
For More Datails : 07917 128 581

# Southall Travel

## *Redefining Travel*

### *Why travel with* **Southall Travel?**

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

### ஏன் **சவுத்ஹோல் டிராவல்** மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk

5553 ATOL PROTECTED




Offer open until 30 June 2016. Pay by cash, cheque or UK debit card and send money to any bank account in Sri Lanka. The money can be remitted from any of our UK branches only. If you have an SBI UK account, you can make remittances for free even after the promotion period. For more information, please ask any branch staff or visit our website. KYC and terms & conditions apply.

sbiuk.com
**0800 532 532**

**State Bank of India**
United Kingdom

20,000 STATE BANK GROUP BRANCHES IN 34 COUNTRIES • 190 MILLION CUSTOMERS • IN THE UK SINCE 1921

Personal Banking | Corporate Finance | Trade Finance | Money Transfer | NRI Services

*Promotion period of free remittances to Sri Lanka ends 31 March 2016. Note: Transaction limits apply. Maximum amount of £5000 per day as a single transaction, subject to the exchange rate available on that day. Please note that only the cardholder can carry out the remittance transaction. For branch transactions, you will need to fill out a remittance application form, and supply identification (ID) and proof of address. SBI UK Individual account holders who maintain the minimum balance required in accordance with the terms and conditions of the account, are eligible to transfer funds FREE OF CHARGE. The monthly minimum balance is calculated based on the previous month's average balance, by totalling the daily balance in the previous month and then dividing this by the number of days in the previous month. For more information, please see the Remittance Terms and Conditions or speak to a member of staff.

Authorised and regulated by Reserve Bank of India and Prudential Regulation Authority. Subject to regulation by the Financial Conduct Authority (FCA) and limited regulation by the Prudential Regulation Authority (PRA). Details about the extent of our regulation by the PRA are available from us on request. FCA registered number is 139156. For more information and clarification, visit us at our website www.sbiuk.com or visit your local branch. The contact centre is open from Monday to Friday from 9:00am to 6:00 pm.